பக்கங்கள்: 12

Registered as a Newspaper

New Master Institute
B. M. C. Lane. Jaffna.
90 A/L
Weekend Classes
[10-07-88 Sunday]
9-30 — Pure Maths
10-30 — Applied Maths
9-30 — Botany
10-30 — Zoology
11-30 — Physics
12-30 — Chemistry
(எமது வழமையான ஆசிரியர் குழு)

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூபா 3-50

New Master Institute
B. M. C. Lane. Jaffna.
90 A/L
Weekend Classes
விஞ்ஞான வகுப்புகள்
ஆரம்பம்:
10-07-88
(Sunday)

மலை: 3 யாழ்ப்பாணம் விபவ ஹு ஆனி மீ 18 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ்தா பிறை 17 (02-07-1988) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 18

ஜே. ஆரின் உறுதி மொழிகள்:

# விடுதலைப் புலிகளின் கருத்தை இந்தியா எதிர்பார்த்திருக்கிறது

## இன்று அல்லது நாளை கிடைக்கும் என நம்பிக்கை

— கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு, ஜூலை 2

**வடக்கு—கிழக்கு மாகாண சபை அமைத்தல், அதற்குத் தேர்தல் நடத்துதல் என்பன சம்பந்தமாக, ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன புதன்கிழமை வெளியிட்ட உறுதி மொழிகள் சம்பந்தமாக—**

**தமிழீழ விடுதலைப் புலிகளின் கருத்தை இந்தியா எதிர்பார்த்திருக்கிறது.**

விடுதலைப் புலிகளின் கருத்து— பிரதிபலிப்பு இன்று அல்லது நாளை தெரிந்துவிடும் என்று இந்தியா நம்பிக்கை கொண்டிருப்பதாக இங்கு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு - கிழக்கு மாகாணசபை அமைப்பது தொடர்பாக ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இந்திய அரசுக்கு சில உறுதி மொழிகளை புதன்கிழமையன்று வழங்கியிருந்தார் அல்லவா?

அந்த அறிவிப்புத் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிபலிப்பு (Reaction) -கருத்து- என்ன என்பதை அறிவதற்கு இந்தியத் தரப்பினர் காத்திருக்கின்றனர். அனேகமாக இன்று அல்லது நாளை விடுதலைப் புலிகளின் கருத்து இந்தியத் தரப்பினருக்குக் கிட்டும் என நம்பப்படுகிறது.

கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்துடன் தொடர்புடைய வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

இந்திய அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படும் இணக்கம் குறித்து கேள்வி எழுப்பிய போதே அந்த வட்டாரங்கள் இப்படித் தெரிவித்தன.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் போது—

ஈழத்தமிழர்களுக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஜே. ஆரின் அறிவிப்பு:

# புதிய நிலைமை எதையும் உருவாக்கி விடவில்லை!

## அமிர் சொல்கிறார்

கொழும்பு, ஜூலை. 2

வடக்கு — கிழக்கு மாகாண சபை அமைப்பது தொடர்பாக ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன விடுத்திருக்கும் அறிவிப்பு சில சந்தேகங்களை நிவர்த்தி செய்திருக்கின்றதே தவிர, வேறு புதிய நிலை எதனையும் உருவாக்கவில்லை.

—இப்படித் தெரிவித்தார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர்நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் அறிவிப்புக் குறித்து, கருத்துக்கேட்ட போதே அவர் சஞ்சீவிக்கு இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு— கிழக்கு மாகாண சபை அமைப்பது தொடர்பாக இலங்கை — இந்திய ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் விடயங்களையே ஜெயவர்த்தன இப்போது வெளியிட்டிருக்கிறார்.

வடக்கு, கிழக்கிற்கு ஒரு மாகாண சபை அமைப்பது, அதற்கெனத் தனியான ஒரு நீதிமன்றம் ஸ்தாபிப்பது உட்பட சில விடயங்களில் நிலவி வந்த சந்தேகங்களை அது நீக்கியிருப்பது உண்மைதான்.

இந்த விடயங்கள் தொடர்பாக அமைச்சர் லலித் அத்துலத் முதலி கிளப்பி வந்த தேவையற்ற சந்தேகங்களை இது நீக்கியிருக்கிறது.

ஆனால் ஜனாதிபதி ஜெய

(4-ஆம் பக்கம் பார்க்க)

யாழ்- பல்கலைக்கழகத்தில்

## கொம்பியூட்டர் துறையின் எதிர்காலம் பற்றி இன்று ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ். பல்கலைக்கழகத்தில் கொம்பியூட்டர் விஞ்ஞானத்தையும், புள்ளி விவரவியலையும் இணைத்து புதிய துறை ஒன்று உருவாக்கப்பட உள்ளது.

இதற்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதுவரை காலமும் கொம்பியூட்டர் விஞ்ஞானமும், புள்ளிவிபரவியலும் கணிதத் துறையினூடேயே கற்பிக்கப்பட்டு வந்தன.

இதனால் கொம்பியூட்டர் விஞ்ஞானத்தை முழுமையாகக் கற்பிக்க முடியாத நிலை இருந்தது.

இக்குறையை நிவர்த்திக்கும் முகமாகவே இப்புதிய பிரிவு உருவாக்கப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

விசேஷ ஜி.சி.ஈ. பரீட்சை

## தேங்கிக் கிடக்கும் பிரவேசக் கார்ட்டுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 2

நேற்று ஆரம்பமான விசேஷ ஜி. சி. ஈ. சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பலரின் பிரவேசக் கார்ட்டுகள் சரியான விலாசம் இல்லாததால் பல தபால் நிலையங்களில் தேங்கிக் கிடக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

சுன்னாகம் தபால் நிலையத்தில் மட்டும் இன்னும் 50 பிரவேசக் கார்ட்டுகள் விநியோகிக்கப்பட முடியாது தேங்கிக் கிடப்பதாக அதன் பிரதம தபாலதிபர் திரு. இ. திருநாவுக்கரசு நேற்று சஞ்சீவிக்குத் தெரிவித்தார்.

சுமார் 200 பிரவேசக் கார்ட்டுகள் சரியான விலாசம் இன்மையால் தேங்கிக் கிடந்தன என்றும் தபால் நிலையத்துக்கு முன்னால் வைக்கப்பட்ட அறிவித்தல் பலகையின் உதவியுடன் இதில் முக்கால் பகுதி பிரவேசக் கார்ட்டுக்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டன என்றும் அவர் கூறினார். (இ)

# வடமராட்சியில்

## தேடுதல்: பலர் கைது

வல்வெட்டித்துறை, திக்கம், பருத்தித்துறை, நாவலடி போன்ற இடங்களில் நேற்று முன்தினம் அமைதிப் படையினர் சுற்றி வளைத்து நடத்திய தீவிர தேடுதலின் போது பலர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் தூர இடங்களைச் சேர்ந்தவர்களும் உத்தியோகங்களுக்குச் சென்றவர்களும் அடங்குவர்.

நேற்று முன்தினம் முதல் நேற்று இச்செய்தி எழுதும் வரை கைது செய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்படவில்லை.

கைதானோர் பற்றிய விவரம் தெரியாததால் அவர்களின் உறவினர்கள் கவலையுடன் வடமராட்சியில் உள்ள ஒவ்வொரு முகாம் முகாமாகச்சென்றுவேதனையுடன் திரும்பியபடி இருந்தனர். (ஓ-160)

**சஞ்சீவி பொது அறிவுப்போட்டி —7 இன் முடிவுகள் நாளைய உதயனில் வெளிவரும்.**

# நேற்று நடந்த பேரணி

மூன்று முக்கிய கோரிக்கைகளை முன் வைத்து பிரமாண்டமானபேரணி ஒன்று நேற்று காங்கேசன் துறையிலிருந்து பலாலி வரை இடம் பெற்றது.

விடுதலைப் புலிகளுடன் உடனடியாக பேச்சு நடத்த இந்தியா முன் வர வேண்டும். யுத்த நிறுத்தம் உடனடியாக அமுல் செய்யப்பட வேண்டும். இரவு நேர [illegible] அனுமதி தர வேண்டும். ஆகிய கோரிக்கைகளை முன் வைத்து இப்பேரணி நடத்தப்பட்டது.

காங்கேசன் துறை, தையிட்டி, ஊறணி, மயிலிட்டித்துறை, பலாலி பிரஜைகள் குழுக்களும், காங்கேசன் துறை, ஊறணி, மயிலிட்டி, பலாலி மீன்பிடி சங்கங்களும், லங்கா சிமெந்து லிமிட்டெட், காங்கேசன் சிமெந்து கூட்டுத்தாபனம், வர்த்தக நிறுவனங்கள் ஆகியனவும், பாடசாலை மாணவர்களும், பொதுமக்களும் இப்பேரணியில் பங்கு கொண்டனர்.

காங்கேசன் துறையில் மூன்று பிரிவாக ஆரம்பமான பேரணி காங்கேசன்துறை சந்தியை நோக்கிச்சென்ற போது ஒரு பிரிவினரை அமைதிப்படையினர் தடுத்தனர். பின்னர் பேரணி பற்றி அறிந்ததும் தடையை நீக்கினர்.

காங்கேசன்துறையிலிருந்து ஆரம்பமான இப்பேரணி பலாலி சென்றடைந்தது. அங்கு அமைதிப்படை உயர் அதிகாரியிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

பேரணியில் கோஷங்கள் எழுப்பப்படவில்லை. சுலோக அட்டைகள் கொண்டு செல்லப்பட்

(4-ஆம் பக்கம் பார்க்க)

**சுபநேரம்**
02 – 07 – 1988
சனிக்கிழமை
சுபநேரம்:
2-57 முதல் 4-27 வரை
ராகுகாலம்:
08-57 முதல் 10-27 வரை
மருத மடு மாதா திருநாள்

## தோல்வி கண்ட வேட்பாளர் சுட்டுக் கொலை

கொழும்பு, ஜூலை. 2

தென் மாகாண சபைத் தேர்தலில் தோல்வி கண்ட வேட்பாளரான சுனில்ரஞ்சித் என்பவர் கடந்த திங்கட்கிழமை காலி, உருகொட பொலீஸ் பகுதியில் இனந்தெரியாத நபரினால் சுட்டுக் கொல்லப்பட்டார். (ஓ-எ)

# வடக்கு-கிழக்கில் ஏழு ஜவான்கள் பலி

கொழும்பு, ஜூலை 2

வடக்கு, கிழக்குப்பகுதிகளில் நடைபெற்ற இரு வேறு சம்பவங்களில் 7 இந்திய அமைதிப்படை ஜவான்கள் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள நெடுங்கேணியில் நடைபெற்ற மோதலில் 3 இந்திய அமைதிப்படை ஜவான்கள் மரணமானார்கள் என்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்ததாகவும் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

திருகோணமலைமாவட்டத்தில் திரியாய் என்னும் இடத்தில் ரோந்து சென்ற இந்திய அமைதிப்படையினர் மீது நிலக்கண்ணி வெடித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

அதில் 4 இந்தியஅமைதிப் படை ஜவான்கள் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது. (இ-எ)

## பெண் கைதாகி விடுதலை

குருநகர், ஜூலை. 2

போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டவர் என்று சந்தேகிக்கப்பட்ட குடும்பப் பெண்ணொருவர் இந்திய அமைதிப்படையினரால் கைது செய்யப்பட்டார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் அலுப்பாந்திப் பகுதியில் நடைபெற்றது.

நேரடி, அமைதிப் படை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட சம்பந்தப்பட்ட பெண், பின்பு விடுதலை செய்யப்பட்டார். (ஓ-51)

பேர்சில் உடன்பாடு ஏற்பட்டதும்

# விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கையளிப்பர் எனக் கிட்டு அறிவிப்பு

சென்னை, ஜூலை 2

எவ்வளவு ஆயுதங்களைக் கையளிப்பது என்பது குறித்து உடன்பாடு ஏற்பட்டதும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஆயுதங்களை ஒப்படைத்து விடும்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. கிட்டு நேற்று அறிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார் (கிட்டு) நேற்றுச் சென்னையில் செய்தியாளர் மத்தியில் பேசினார்.

அப்போது அவர் சொன்னதாவது:

ஆயுதங்களைக் கையளித்து, மாகாணசபைத் தேர்தலில் பங்குபற்றுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக உள்ளது.

ஜனநாயகத் தேர்தல் நடைமுறையில் பங்கு கொள்வதன் மூலம் மக்களை எதிர்கொள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பயப்படுகின்றது என்ற சந்தேகத்தை இந்த அறிவிப்பு தெளிவாக்கும்.

விடுதலைப் புலிகள் இயக்கம், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தைத் தொடர்ந்தும் ஆதரிக்கும். ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதற்கும் எமது இயக்கம் ஒத்துழைப்பு வழங்கும்.

கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் திரு. கிட்டு சொன்னதாவது:—

எவ்வளவு ஆயுதங்களை ஒப்படைப்பது எப்போது அவற்றை ஒப்படைப்பது ஆகிய விஷயங்கள் குறித்து இந்திய அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இது விஷயத்தில் இறுதி முடிவு, இயக்கத் தலைவர் திரு. பிரபாகரனுடன் கலந்தாலோசித்த பின்னரே எடுக்கப்படும்.

## திக்கத்தில் சூடும் கிரனேட் வீச்சும்

### ஒருவர் சயனைட் அருந்தி மரணம்

வடமராட்சி ஜூலை 2

திக்கம் பகுதியை கடந்த வியாழக்கிழமை இந்திய அமைதிப்படையினர் சுற்றிவளைத்தபோது துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமும் கிரனேட் தாக்குதல் சம்பவமும் இடம் பெற்றன துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தின் போது இளைஞர் ஒருவர் சயனைட் அருந்தியதனால் மரணமானார். சப்பு என்றழைக்கப்படும்பரஞ்சோதி நச்சினார்க்கினியார் [வயது 20] என்பவரே இவ்வாறு மரணமானவர் ஆவார்.

இச்சம்பவத்தின் போது பொதுமக்கள் சிலரும், அமைதிப்படை ஜவான்கள் சிலரும் காயமடைந்ததாகவும் சொல்லப்படுகிறது.

இறந்த இளைஞரின் சடலம் கரவெட்டி உதவி அரசஅதிபர் மூலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. [ஓ-க-160]

**வெறும் அறிக்கையே**

வடக்கு-கிழக்கு மாகாண

(1-ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 2

1985 வன்செயலில் அகதிகளான மட்டக்களப்பைச் சேர்ந்த 200 முஸ்லிம் அகதிகளை மகாவலி பிரதேசத்தில் நிரந்தரமாகக் குடியமர்த்தும்படி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதிபதி ஜெயவர்த்தனவைக் கோரியுள்ளது. (ஓ-எ)

புதுமையும் எழிலும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நாஷனல் JVC Aka வீடியோ டெச்கிற்கான மோட்டர், வீடியோ செட் பெல்ற், ICகள் சகல ரெலிவிஷன்களில் Flybach ரியூனர் ரியூப் மற்றைய உதிரிப்பாகங்களும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். ஓடர்களிற்கு சிங்கப்பூரில் இருந்து பெற்றுக் கொடுக்கப்படும். விபரங்களிற்கு Jaffna Technical Institute Stanly Road [றெயில்வே கடவை அருகே] (C/5570)

எம்மிடம் கொண்டா C50, C90, 4 Cycle C 70, MD 70, MB 5 Racoon Gs 125 New Brand CB 250, எலெக்ரோனிக் மோட்டார் சைக்கிள்கள் பல நிறங்களில் மொத்தமாக அல்லது சில்லறையாக பெற்றுக் கொள்ளலாம். திருவாசி, அசையாமணி ஸ்தூபி குத்து விளக்கு, கோயில் பொருட்களும் பித்தளை செம்பு. அலுமினியம், எவர் சில்வர் பொருள்களும் விநியோகித்தர்கள். ஸம்ஸ் மெற்றல் ஸ்ரோர்ஸ் 26/B மானிப்பாய் வீதி. கிளை 76/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (4748)

பாவித்த புத்தக கடைக்கு அல்லது (பார்மசி) மருந்துக் கடைக்கு பாவிக்கக்கூடிய இரண்டு பெரிய சோகேஸ்கள் உடன் விற்பனைக்கு உண்டு. M. தியாகராஜன் 326 பிரதான விதி யாழ்ப்பாணம் (சென்பற்றிக்ஸ் சந்தி அருகில்.) (4587)

நல்லநிலையில் உள்ள இருமாதங்கள் பாவித்த 2'X3' குளிரூட்டி (Deep-Freezer) விற்பனைக்கு உண்டு. தொடர்பு 127, கன்னாதிட்டி ரோட், யாழ்ப்பாணம். (4862)

சகல விதமான ரேடியோ T. V வீடியோ டெக் ஆகியவற்றின் உதிரிப்பாகங்களையும் (வீடியோ செட் I. C டிரான்ஸிஸ்டர். அன்ரனு பூஸ்டர்) ஆகியவற்றை மலிவான விலையிலும் நம்பிக்கையுடன் பெற்றுக்கொள்ள நாடுங்கள் R. V சென்ரர் F6. நவீன சந்தை மேல்மாடியில் யாழ்ப்பாணம். உரிமையாளர் விசு. (4732)

பெரிய சிறிய வான் கோழிகள் வெள்ளாடியன் கோழிகள் Fan tail புறுக்கள் விற்பனைக்கு உண்டு. ஞாயிறு முதல் விநியோகிக்கப்படும். தொடர்பு 55, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (4855)

பாவித்த வீட்டு தளபாடங்கள் கட்டில் மெத்தைகள் கசற் றேடியோ சாப்பாட்டு மேசை கதிரைகள், அலமாரி கடைசோகேஸ் கண்ணாடி மேசை சம்பளம், ஹோல் செற் விருந்தை கதிரைகள், ஸ்ரீல் அலமாரி, தையல் மெசின் இரும்புத்தளபாடம் Baby Cot புத்தக அலமாரி Imported Mattress மற்றும் பலவித பொருட்களும் மிகவும் மலிவு விலையில் உடன் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன் 326 பிரதான வீதி, யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் சந்தியருகில் (4 88)

MANIPAY LIONS CLUB RAFFLE

The Draw Schedule for 3d July 88 is postponed to 30th July inconvenience regretted President. (4866)

## வீடு வளவு விற்பனை

நாவலர் வீதியில் ஸ்ரான்லி கல்லூரிக்கு சமீபத்தில் நவீனவசதிகளுடன் மூன்று படுக்கை அறைகள் பொருந்திய வீடும் 3 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு c/o 259, உதயன் யாழ்ப்பாணம். (4859)

## தேவை

கண்ணாடி அலுமாரி, ஷோகேஸ், ராக்கை விற்க இருப்பின் தொடர்பு கொள்ளவும். C D. 125 குவின் மொடல் கொண்டா மோட்டார் சைக்கிள் ஒன்றும் தேவை. இ. யோககுரு தீருவில் வல்வெட்டித்துறை, (4851)

ஐஸ்கிறீம் வியாபார ஸ்தாபனத்திற்கு ரீ மேக்கராகவும் சப்ளையர் ஆகவும் வேலை செய்யக் கூடியவர் தேவை. அவரின் வேலைக்கேற்ப மாதிரிசம்பளம் கொடுக்கப்படும். தொடர்பு நியூ ராஜா கிறீம் ஹவுஸ் அன் கபே இல. 64, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (4860)

தெல்லிப்பளையில் ஆரம்பிக்கப்படவிருக்கும் கோழிப் பண்ணைக்கு பொறுப்பாளர் தேவை. மூன்றுமைல் சுற்றுடலில் வசிக்கும் 40 வயதுக்கு மேற்பட்ட பண்ணை பற்றிய முன் அனுபவம் உள்ள ஆண்/பெண் இருபாலாரிடம் இருந்தும் விண்ணப்பங்கள் 10-07-88 வரை ஏற்றுக் கொள்ளப்படும். C/o 171, உதயன் யாழ்ப்பாணம். (4595)

## மணமகன் தேவை

Jaffna Vellala Hindu Parents in Colombo Seek for Only Daughter 39 Years, Dowry House in Colombo Land in Jaffna cash Local or Foreign currency and Jewellery Send Horoscope with Details 251,c/oUthayan Jaffna. (4736)

வடமராட்சி இந்து வேளாள பெற்றோர் 35, வயதான பயிற்றப்பட்ட கணித ஆசிரியை மகளுக்கு மணமகன் தேடுகிறார்கள். பட்டதாரி, அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர் வேறுஅரசாங்க கூட்டுத்தாபன உத்தியோகத்தர் விரும்பத்தக்கது. வீட்டுடன் தகுந்த சீதனம் கொடுக்கப்படும். விபரங்களுடன் குறிப்பும் அனுப்பவும். C/O 254, உதயன் யாழ்ப்பாணம். (4750)

## மணமகள் தேவை

கனடாவில் கௌரவமான தொழில் புரியும் 28 வயதுள்ள இந்து உயர்வேளாளர் குலத்தைச் சேர்ந்த எமது மகனுக்கு நற்பண்புள்ள அழகான O/L படித்த மணமகள் தேவை. விபரங்களுக்கு C/o 249, உதயன் யாழ்ப்பாணம். (4734)

## பராமரிப்பு பெண்தேவை

47 வயதுடைய குடும்பத்துடன் 10 வருடம் எந்த வித தொடர்பு மற்ற எஞ்சினியர் ஒருவருக்கு பிற்கால பராமரிப்பிற்கு ஏற்ற எந்த மதேனு நிலையிலும் உள்ள ஓரளவு வீடு வசதியுள்ள 42 வயதிற்கும் குறைந்த பெண் தேவை. C/o 255 உதயன், யாழ்ப்பாணம். (4852)

## பணிப்பெண் தேவை

சிங்கப்பூருக்கு பணிப்பெண் உடனடியாகத் தேவை. கத்தோலிக்க பெண்ணுக்கு முன்னுரிமை. பாஸ்போட்டுடனும் ஆறு படங்களுடனும் உடன் வரவும். T. துரைசிங்கம் 376 B, நாவலர் வீதி, அரியாலை ஸ்ரான்லிக் கல்லூரிக்கு முன்பாக. (4870)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Hisex Golden Comet பிறவுண் சேவல்குஞ்சுகள் 1ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் 2ஆம் திகதி சனிக்கிழமையும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா, அன் பிறதேர்ஸ் பிரம்படிலேன், கொக்குவில். (4865)

## காணி வேண்டுமா

கொடிகாமத்திலிருந்து கச்சாய் துறைமுக ரோட்டும் சாவகச்சேரியிலிருந்து கச்சாய் ரோட்டும் சந்திக்கும் நாற்சந்தியில் வெள்ளிக்காய்ச்சி என்னும் காணி தென்னை, மா, பலாவுடன் விற்பனைக்கு உண்டு. புதிதாக தொழிற்சாலை அமைக்க சிறந்த போக்குவரத்து உள்ள காணி. விபரங்களுக்கு R. சரவணமுத்து சிற்றம்பலம்வீதி, புத்தூர்சந்திக்கு அருகில் மீசாலை. (4872)

மீசாலையிலிருந்து அல்லாரை வெள்ளாம்போக்கட்டியினூடு கொடிகாமம் கச்சாய் செல்லும் ரோட்டில் வெள்ளம் போக்கட்டி நெசவு சாலைக்கு எதிர்ப்புறமாக தென்னை மாவுடன்கூடிய பயிர் செய்யக்கூடிய 30 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு:- R. சரவணமுத்து சிற்றம்பலம்வீதி, புத்தூர் சந்திக்கு அருகில் மீசாலை. (4871)

## கடை வாடகைக்கு விடப்படும்

யாழ்ப்பாணம் சின்னக் கடையில் சகல வசதிகளும் கொண்ட கடை வாடகைக்குவிடப்படும். 77, அன்ரனிப்பிள்ளை (பாலசிங்கம்) 70/2 பிறற்றிக் ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். (4861)

## TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக்கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road Jaffna (Samy & Co Shabra அருகாமையில். (C5300)

## பயிற்சி

Radio-Tv Air Conditioning Refrigeration வயறிங் வெல்டிங் மோட்டர்மெக்கானிசம் வைண்டிங் Typing புதியபிரிவுகள் குறுகிய காலத்தில் சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் ஆரம்பமாகின்றன. சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering Aid Hall 328, நாவலர் ரோட், ஆனைப்பந்திச் சந்திக்கு அருகாமையில் யாழ்ப்பாணம். (4574)

## ACCOUNTANCY CLASS

AAT (London Sri Lanka) C. I. M. A Economics, Cost Accounting, Financial Accounting ஆகிய பாடங்கள் குறித்த பகுதிகளாகவோ (Section) அல்லது முழு Syllabus ஐ ஓர் Accountant ஆல் கற்பிக்கப்படும் விபரங்களுக்கு C/o 261 உதயன் யாழ்ப்பாணம். (4867)

## கல்வி

ஆண்டு 5, 6 புலமைப் பரிசிலுக்கான முன்னோடிப் பரீட்சை 9-07-88 சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் 5-7-88க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். மொடேண் எடியுகேஷன் சென்ரர், கரவெட்டி. (4713)

ஆண்டு எட்டு முதல் பதினொன்று வரையான வகுப்புக்களுக்குத் தமிழ் கற்பிக்க விரும்பும் பகுதிநேர ஆசிரியர் தேவை. தகுதி, சம்பளம் ஆகியவற்றைக் குறிப்பிட்டுக் கையெழுத்தில் கடிதவடிவில் விண்ணபிக்க. அதிபர், மதி அக்கடமி, ஊரெழு, சுன்னாகம். (4571)

## எண் சோதிடம்

உங்கள் பிறந்த திகதியிலும் பெயரமைப்பிலும் பொதிந்துள்ளதுர்திட்டங்களையும் கண்டறிந்து உங்களது பிறந்த திகதிக்கு ஏற்ப பெயரையும் அதிர்ஷ்டகரமாக அமைத்து மகிழ்ச்சிகரமாக வாழ வழிகாட்டும் எண் சோதிட நூல் / வாழ்க்கைக்கு நலம்தரும் நியூமராலஜி/ தனிப்பிரதி 6/50 பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (4857)

## ரேனியோ – தட்டச்சு

தமிழ் – ஆங்கில தட்டச்சு Typewriting ரேனியோ வேலைகள் மற்றும் சகலவிதமான அச்சுவேலைகளும் சிறந்த முறையில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும். தயா அச்சகம் இல. 138, நாவலர் ரோட், மனோகராச் சந்தி, யாழ்ப்பாணம். (C/5600)

## மீரா வெளியீடுகள்

"தீக்குள் விரலைவைத்தால் நாவலாசிரியர் K. S. ஆனந்தனின் "ராதையின் நெஞ்சம்" 200 பக்கங்கள் 30/-ரூபா செங்கை ஆழியானின் மழைக்காலம் 20/-ரூபா பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். மழைக்காலம் நாவலில் இணைக்கப்பட்டு இருக்கும் இலவச புத்தகங்கள் வழங்கும் கூப்பன்களை உடன் அனுப்புங்கள். 10 . 7 . 88 இல் நல்லை ஆதீனத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்படும். (4858)

## தவறிவிட்டது

அமரசிங்கம் கமலானந்தன் என்பவரது 523253921X என்னும் அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் கந்தோரில் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (4573)

## புதிய நாவல் வெளிவந்து விட்டது

செங்கை ஆழியானின் புதிய நாவல் தீம் தரிகிடந்தோம் வெளிவந்து விட்டது. விலை ரூபா 15/- கிடைக்கும் இடம் ஸ்ரீலங்கா புத்தகசாலை பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (4579)

## கடல் தொழிலாளர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ். குடாநாட்டில் சகல கடல் தொழிலாளர்களும் உடன் தொழில் செய்வதற்கு அமைதிப்படை அதிகாரிகள் அனுமதி அளிக்க வேண்டும்.

இந்தக் கோரிக்கையை முன்வைப்பதற்காக அனைத்து கடல் தொழிற்சங்கங்களும் கலந்துகொள்ளும் கூட்டம் ஒன்றை மயிலிட்டி பிரசைகள் குழுவினர் ஒழுங்கு செய்தனர்.

இக் கூட்டம் நாளை ஞாயிறு 3ஆம் திகதி காலை 10. 30 மணியளவில் மயிலிட்டி ரோமன் கத்தோலிக்க பாடசாலையில் நடைபெறவுள்ளது.

## இடம்மாற்றம்

### எம். கே. எஸ். மெடிக்கல் கிளினிக்

இதுவரை காலம் சம்பியன் லேன். கொக்குவில் கிழக்கில் இயங்கி வந்த மேற்படி கிளினிக் 27. 06. 88 தொடக்கம் கே. கே. எஸ். ரோட் 3 ஆம் கட்டை கொக்குவிலுக்கு மாற்றப்பட்டு உள்ளது (குளப்பிட்டி சந்தியிலிருந்து வடக்கே 100 யார் தூரம்.)

**Dr. மு. கனகசபை**

(4773)

## ADVANCED ENGLISH (GRAMMAR)

BY

### S. B. IYAR.

10, இரு மணித்தியால வகுப்புகள்.

இரு பிரிவுகள்

**சனி, ஞாயிறு காலை, 8—10**

**சனி, ஞாயிறு மாலை, 5—7**

12, வைமன் வீதி, நல்லூர்.

(4780)

## கேள்வி கோரல்

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான புதிய டாடா 1210, 07 தொன் லொறி அடிச்சட்டத்திற்கு முழுமையாக கூடாரம் அமைக்கக் கேள்விப் பத்திரங்கள் 06 - 07 - 1988க்கு முன்னர் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் தலைவர், புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை என்னும் விலாசத்திற்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கவும். விவரங்களை காரியாலய நேரத்தில் மேற்படி சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம். ரூபா இரண்டாயிரம் மட்டும் (ரூ. 2000/-) கேள்விப் பத்திர வைப்புப்பணமாகச் செலுத்திக் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "லொறிக்கூடார கேள்வி கோரல்" என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

**சோ. அருணகிரி**
**பொது முகாமையாளர்**
புலோலி பல. நோ. கூ. சங். ம்.
பருத்தித்துறை.

1988 - 06 - 30. (C5610)

## வெளிநிலைப் பல்கலைக்கழகக் கல்வி

**B. A. 1988 டிசம்பர்**

**G. A. Q. 1989 ஏப்ரல்**

**பொருளியல்**

**S. வரதராஜன்** B. A. (Hons)

அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க **புதிய பிரிவு** ஆரம்பமாகின்றது.

**3-7-88 ஞாயிறு**

**B.A. வகுப்பு 8-00 A. M.**

**G.A.Q. வகுப்பு 3-00 P. M.**

✶ கடந்த 10 வருட பரீட்சைகளின் வினா–விடை வகுப்பும் இதனோடு இணைந்து நடைபெறும்.

குறிப்பு:- அனுமதி பெற விரும்பும் மாணவர்கள் 3-7-88க்கு முன்னர் தமது பெயர்களைப் பதிவு செய்யவும். இத்திகதிக்குப் பின்னர் வகுப்பிற்கு மாணவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மாணவர்களின் வசதிக்கேற்ப நேரங்கள் தீர்மானிக்கப்படுமாதலால் முதலாவது வகுப்பிற்கு மாணவர்கள் அனைவரும் கட்டாயம் சமுகமளித்தல் வேண்டும்.

BECON கல்வி நிலையம் (அருகாமை)
156/3 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி 5554)

## A/L 89 விஞ்ஞான

மாணவர்கட்கு

**துரித மீட்டல் வகுப்பு**

பௌதிகவியல்

ஆரம்பம்

05-07-1988

Tue - 4.00 — 6.00 P.M

ஆசிரியர்:- Mr. மணியம் B. Sc. (Hons)

3ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

[C 5602]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### வீரவேங்கை மேஜர் சலாம்

**(வ. சி. நல்லராசன்) அவர்கள்**

**(வடமராட்சிப் பொறுப்பாளர்)**

**தாயகத்தில் வாழ்: 17-09-1956 தியாகத்தில் வாழ்வு: 02-06-1988**

'அதிகாலை கதிரவனின் ஒளி மங்கிச் செல்கிறது......!

கீழ்வானம் முதல் நீலக்கடல் வானம் முழுவதிலும் கரிய இருள் கவிகிறது......!

கண்ணீர்த் திவலைகளால் பூமித்தாய் மீண்டும் ஒருமுறை அர்ச்சிக்கப்படுகிறாள்...'

02-06-1988........

காற்றோடு கலந்தசைந்த 'சலாம்' என்ற தியாகச் சுடர் தன்னை உமிழ்ந்து விட்டது என்ற செய்தி கேட்டு இயற்கையே ஒரு கணம் இயக்கமற்று விட்டதே......!

ஆனால்......காற்றே நீ வீசிடுக......!

தாய் நாட்டின் அல்லல் கண்டு, அதன் அவலக்குரல் கேட்டு அடிபணிந்து தலை சாய்த்து, பட்டம், பதவி, நம்பிக்கை, புகழ், எனும் கனவுகளில் தன் இளமைக் காலத்தினைக் கழித்திடாது விடுதலையாம் நல்வேட்கை உணர்வூட்ட **நான் நமது ஈழத் தமிழினத்தின் விடுதலைக்கே நெஞ்சத்தின் உணர்வெல்லாம் அர்ப்பணிப்பேன்"** என்று வந்தான் – இந்த மைந்தன்.

இயற்கையினை நண்பனாக்கி, வாழ்க்கையினை ஆசிரியனாக்கி, வரலாறு வழிகாட்ட, கொள்கையிலே உறுதியுடன், சிந்தனையில் தெளிவுடன், உழைப்பிலே உணர்வுடன் தாய் நாட்டின் விடுதலைக்காய் அயராது உழைத்து வந்தான்.

புயல்களால் அரும்பாகவே அவனெதிரில் அலர்ந்தன பல மலர்கள்......!

இன்பங்கள்......!
துன்பங்கள்......!
இழந்து விட்ட விருப்பங்கள்......!

இவற்றுடனே நேசித்தான்–இனிய தன் தேசத்தை!

அருகினிலே தெரிகின்ற தாயகத்தை மனத்தெண்ணிக் களித்திருந்தான்...!

இடையே......!

தெளிவான நீரோட்ட திசைமாற்றம் நன்குணர்ந்து மாற்று வழிகள் பல மேற்கொண்டு பணி தொடர்ந்தான்......!

**மானிடத்தை நேசித்த மனிதன் ஒருவன் பறிக்கப்பட்டான்......!**

**புரட்சிப் பூக்களை புஷ்பித்த பெரு விருட்சம் வீழ்த்தப்பட்டது......!**

ஆனால் ...... பொழுதே நீ புலர்ந்திடுக...!

நம்பிக்கை......!
தெளிவு.........!
உறுதி..........!

இவற்றுடன் நம் கைகள் உயருகின்றன...!

**நண்பர்கள்.**

உடுப்பிட்டி (4794)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரயாண ஒழுங்குகள்
### SAUDI

| | |
|---|---|
| Security Clerk | 500 & 100 |
| Food Service ATT | 350 & 100 |
| Cashiers | 550 & 100 |
| Driver - Mini Bus | 550 & 100 |
| Video Teck | 800 & 100 |
| Book Shop Boy | 400 & 100 |
| Medical Custodian | 400 & 100 |
| Stores Record Clerk | 550 & 100 |
| Receiving Clerk | 550 & 100 |
| Telex Operator | 500 & 100 |
| Security Supervisor | 600 & 100 |
| Security Guard | 375 & 100 |
| Fire Supervisor | 700 & 100 |
| English Typist | 600 & 100 |
| Welders Oxygen | 600 & 100 |

ஆங்கில அறிவு அவசியம்
முற்பணம் அறவிடப்படமாட்டாது

பிரயாணம் செய்ய எம்மிடம் கடவுச்சீட்டு தந்தவர்கள் விசா வந்துபோகும் திகதி அறிவித்த பின்னர் போகாது விட்டால் கடவுச் சீட்டுத் திருப்பி ஒப்படைக்கப்பட மாட்டாது.

தொடர்பு:-

தலைமையகம்:
**கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**
புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.

கிளை: 1
**கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**
மயிலங்காடு,
ஏழாலை.

கிளை: 2
**கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**
வன்னிச்சி கோவிலடி
வல்வெட்டி (V. V. T.)

(சி 5588)

---

சகல
✶ மோட்டார் சைக்கிள்
✶ சைக்கிள்

உதிரிப்பாகங்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**ஞான முருகன் ஸ்ரோர்ஸ்**
திருநெல்வேலி (சந்திக்கருகாமையில்)
(4788)

---

## M 3 TRAVEL'S
பெருமையுடன் வழங்கும்
## மத்திய கிழக்கு வேலைவாய்ப்புகள்

### I. சவூதி அரேபியா:

1. **Wheel Loader Operator** (வீல் லோடர் ஒப்பிறேட்டர்) 3 இடம் மட்டுமே
2. **Dump Track Operator** (டம்ப் டிறக் ஒப்பிறேட்டர்) 18 இடங்கள்
3. **Crane Operator** (கிறேன் ஒப்பிறேட்டர்) 3 இடங்கள்
4. **Bulldozer Operator** (புல்டோசர் ஒப்பிறேட்டர்) 3 இடங்கள்
5. **Cleaner's (கிளீனேர்ஸ்)** (அல்கோதாரிக் சம்பனி) 660 இடங்கள்

### II. Ready Mix Concrete Factory (Cement)
(திடீர் கலவை கொங்கிறீட் தொழிற்சாலை)

1. களஞ்சியப் பொறுப்பாளர் **(Store keeper)** 1 இடம்
2. விற்பனையாளர் **(Salesman)** 2 இடம் வாகன சாரதிப் பத்திரத்துடன்
3. **Laboratory Technician** 2 இடம் தொழில் நுட்பப் ஆய்வாளார் (சிமெந்தில் அனுபவம் உள்ளவர்கள்)

### III. Kuwait (குவைற்)
கிளீனேர்ஸ் **(Cleaners)**

### IV. பணிப்பெண்கள் (House Maids)

செல்ல விரும்புவோர் கடவுச்சீட்டு, கடவுச்சீட்டு முன்பக்க பிரதி 10 படங்களுடன் தொடர்பு கொள்ளவும். பணிப் பெண்கள் முழுநீளப் படத்துடன் தொடர்பு கொள்ளவும்.

● கடவுச் சீட்டும் குறுகிய காலத்தில் செய்து கொடுக்கப்படும்.

**நம்பிக்கை நாணயம் என்பவற்றுடன் பயணம் செய்ய இன்றே நாடுங்கள்.**
**உங்கள் தேவை எங்கள் சேவை**
தொடர்பு கொள்ளுங்கள்:

## M 3 TRAVEL'S
**T. இந்திரநாதன்**
கல்லூரி வீதி, சோதிலேன்,
காங்கேசன்துறை.
பஸ் வழி: 769, 763, 764.
(C-5598)

---

## இலங்கைப் பல்கலைக்கழகங்களின்
## வெளிவாரிப் பட்டமாணிப் பரீட்சைகள்

**கல்வியாண்டு 1988/89**

இலங்கைப் பல்கலைக் கழகங்களின் அனுமதி கிடைக்காதவர்களின் தேவைகருதி வெளிவாரிப்பட்டப்படிப்புகளுக்கான பயிற்சி வகுப்புகள் ஓகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி (7-8-88) ஆரம்பமாகின்றன.

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

**கலைமாணி (B.A) வர்த்தகமாணி (B.Com)**
**விஞ்ஞானமாணி (B.Sc)**
(புள்ளிவிபரவியல்)

மாணவர்களின் நலன்கருதி 3 மாத இலவச ஆங்கில வகுப்புகள்.

விண்ணப்பங்கள் யூலை 30ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப்படிவத்தினையும் விபரத்திரட்டினையும் பெற "பதிவாளர்" அஸ்ரன் இன்ஸ்ரிரியூட் என்ற பெயருக்கு ரூபா 10ற்கான காசுக்கட்டளையுடன் 9"x 4" அளவுடைய சுயமுகவரியிட்ட முத்திரை ஒட்டப்பட்ட தபால் உறையை அனுப்பிவைத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை அலுவலகத்தில் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்
## அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்
166/1 ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
(A.S சங்கரப்பிள்ளை கட்டிடம் 1ஆம் மாடி)
C 5499

---

### உதவிப்பெண்தேவை

பொறுப்புகள் அற்ற 35-45 வயதிற்குட்பட்ட பெண் வீட்டு உதவிக்கு தேவை. தாரமிழந்தவர், பிள்ளைகள் அற்றவர் விரும்பத்தக்கது. இருப்பிட வசதியும் உணவும் உண்டு. சம்பளம் நேரில்பேசித் தீர்மானிக்கப்படும்.

**A. M. L.**
35, Bankshall Street
Jaffna
(4784)

---

### தேவை

மரக்கடைச்சல் வேலைக்கு அனுபவம் உள்ள
**1 ஆள் தேவை**
தொடர்புகொள்ள வேண்டிய இடம்
**குகன் மரக்காலை**
உரிமையாளர்:
க. விசுவலிங்கம்,
50, பருத்தித்துறை ரோட்,
ஆனைப்பந்தியடி,
யாழ்ப்பாணம்.
(4598)

---

### பாடல்களைப் பதிவு செய்து கொள்ளவும்:

● நீங்கள் விரும்பும் மதுரமான பாடல்களை நவீன எலக்ரோனிக் ஈக்குவலைசர் மூலம் **(Modern Electronic Equalizer)** (ஸ்ரீறியோ முறையில் Stereo) பதிவு செய்து கொள்ளவும்

● நாற்பதினாயிரத்திற்கு மேற்பட்ட மிகப்பழைய, புதிய பாடல்களைத் தெரிவு செய்து கொள்ளவும் நாடுங்கள்.

**விக்டர் அன் சன்ஸ்**
**(விக்ரேஸ்)**
இல. 100, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

கிளைகள்:
**விக்ரேஸ்**
மியூசிக் சென்ரர்
இல. 887, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**விக்ரர் அன் சன்ஸ்**
81, ஸ்ரேசன் வீதி,
சுன்னாகம்.
(C 5603)

---

### தேவை

இருவல் எற்றுமதி கொம்பனிக்கு அனுபவம் மிக்க கிறேடிங் தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை. நேரில் வரவும்.

A. M. L
**35, Bankshall St,**
**Jaffna.**
(4783)

---

காணியுடன் சேர்ந்த
### சிறிய வீடு விற்பனைக்கு

யாழ் நகருக்கு அருகாமையில் St. Peter's Lane, ஆஸ்பத்திரி வீதியில் அமைதியான சூழ்நிலையில் 1½ பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய இல. 260 C/O உதயன், யாழ்ப்பாணம்.
(4782)

---

நமது பிரதேசத்தில்
### பனை வளம் மிகுந்திருக்க நமக்கு ஏது குறைகள்?


✶ பனம் உணவுப் பொருட்கள்,
✶ பனம் கைப்பணிப் பொருட்கள்,
✶ பனம் பாவனைப் பொருட்கள்.

தரமான இப்பனை உற்பத்திகளைக் கொள்வனவு செய்ய,
பனை அபிவிருத்திச் சபையின் "கற்பகம்" விற்பனை நிலையங்களை நாடுங்கள்.
வெளிநாடுகளில் உள்ள உங்கள் நண்பர்கள், உறவினர்களுக்கும் இப் பனை உற்பத்திப் பொருளை அனுப்பி நமது பாரம்பரிய வளத்திற்கு உங்களால் சிறப்பூட்ட முடியும்.

**பனை அபிவிருத்திச் சபை,**
**சந்தைப்படுத்தும் பிரிவு,**
53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(C 5612)

---

# வீரவேங்கைகட்கு 45ஆம் நாள் அஞ்சலி



**ஜீவா**
த. சத்தியமூர்த்தி
(21. 08. 1968)



**ரமேஸ் மாஸ்டர்**
பொ. சிவஞானசுந்தரம்
(25. 08. 1961)



**ஜெயம்**
து. ஸ்ரீதரன்
(21. 06. 1971)

**மறைவு: 20. 05. 1988**
**(நாளை நாற்பத்தைந்தாம் நாள்)**

உள்ளத்தில் தோன்றும் உயரிய
இலட்சியங்கள்
வெள்ளம் போற் பெருக்கெடுத்து
வினைவடிவில் வளர்வதற்கு
கள்ளத்தனம் சிறிதும் இல்லாக்
காவிய நாயகர்கள்
தெள்ளத் தெளிந்த சிந்தையுடன்
செய்திடுவர் செயல்கள் பல

இத்தன்மைக்கேற்ற இனிய
ஒரு பண்பாளன்
எத்தனையோ இலட்சியங்கள்
இதயத்திலே ஏந்தியவன்
சுற்றமோ சுகமோ சற்றேனும்
பார்த்திடாமல்
செத்து மடிவேன் என்றும்
தமிழ்காக்கும் பணியிலென்றான்

மதிப்பான பெயர் ஒன்று **மாஸ்டர்**
என்றே அவன் படைத்தான்
சலிப்பான முகம் என்றும்
அவனிடத்தே கண்டதில்லை
சிரிப்பான இயல்புடனே
சிந்தனைகள் பல தேக்கி
இனிப்பான கருத்துக்களை
இதமுடனே பேசிடுவான்

விறைப்பான உணர்வுபல
விம்மிநிற்கும் உள்ளத்திலே
உறைப்பாகப் பேசிடுவான்
உண்மைகளை உணர்த்துகையில்
துறைக்கான கடமைகளைத்
தானுணர்ந்தே செய்திடுவான்
மறைப்பாக எதுவுமின்றி
மனந்திறந்தே பேசிடுவான்

மண்ணுலகில் இவனுக்காய்
மகத்தான பணிகளுண்டு
பண்ணிய பணிகளுடன்
தன்பங்கும் முடித்தானோ
எண்ணெத்த தமிழ் காக்கக்
களம் காணச் சென்றானோ
விண்ணிற் கலந்து நின்று வினைமுடிக்க

தரம் கொண்ட பேரணியில்
தயங்காமல் இடம் கொண்டு
வளம் இழந்த எம்மொழியின்
வளம் காண முனைந்தானோ
களம் கண்டு பகை முடிக்கக்
காலமெல்லாம் காத்திருந்து
மனம் கொண்டு புரிந்து வந்தான்
மகத்தான சாதனைகள்

சிரித்த முகம் இவன் சிந்தையோ
வெளுத்த நிறம்
உரத்த மனம் உயிர்போக்கி
மொழிகாக்கும் வலித்தவுளம்
சிலிர்த்து விடும் உணர்வெல்லாம்
இவன் பேசும் மொழி கேட்டால்
பதித்துவிடும் நெஞ்சினிலே
பைந்தமிழின் பழம் பெருமை

**ஜீவா** என்றெங்கும் ஒரு முறைதான்
ஒலித்தாலும்
தாராளமனதோடு தான்புரிவான்
பணிகள் பல
ஏராளமாய் இவன் பணிகள்
எத்தனையோ காத்திருக்க
வானுளப் போனானோ வானுலகில்
தமிழ் பேணப்போனானோ

இளவயதின் இன்பமெல்லாம்
நெஞ்சினிலே கொள்ளாமல்
உளமதிலே உணர்வலைகள்
ஓங்கிடவே வளர்ந்தானே
வளமிழந்த தமிழ்மொழியின்
தரம்பேண வேண்டுமென்று
களமதிலே குதித்தானே
**ஜெயம்** என்ற பெயருடனே

ஆற்றி நின்ற காரியங்கள்
அத்தனையும் உணர்வலைகள்
சாற்றி நின்ற வார்த்தைகளும்
மண்மீட்கும் மந்திரங்கள்
போற்றி நின்றான் தாய்போல
பெருமை மிகு தமிழ்தனை
ஏற்றி நின்றான் இதயத்திலே
சுதந்திரமாம் சுடரொளியை

நொந்து பட்ட செந்தமிழின்
நலிவடைந்த நிலைகண்டுல்
முந்திநின்று காரியங்கள்
மும்முரமாய் ஆற்றுகையி
வந்துவிட்ட படைகண்டு
வலிவடைந்த மனம் கொண்டு
தந்து விட்டான் தன்னுயிரைத்
தமிழமறவர் வழியினிலே

மறப்போமா இவர்கள் செயல்
மனதினிலே கொள்ளாமல்
இழப்போமோ இவர்கள் எழில்
இதயமதில் வையாமல்
நினைப்போமே என்றென்றும் நீண்டு
வரும் காலமெல்லாம்
பதிப்போமே இவர்கள் பணி
தமிழ் மறவர் வரலாற்றில்.

பருத்தித்துறை.

**- நண்பர்கள்.**

(5597)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சாலய பெறுமதியானது''

நுரைவளம் கூடிய மில்க்வைற் பெரிய சலவைப்பவுடர் பெட்டியில் உள்ள கூப்பனை வெட்டி அனுப்பி ஒரு அழகிய பொலிதீன் பையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற்—யாழ்ப்பாணம்.

# சஞ்சீவி

02 - 07 - 1988 சனிக்கிழமை

திருக்குறளைத் தினமும் படியுங்கள்

50 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளில் உள்ள திருக்குறள்களை வெட்டி அனுப்பி திருவள்ளுவர் கலர் படத்தையும் 20 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி திருக்குறள் ஸ்ரிக்கர் ஒன்றையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற்—யாழ்ப்பாணம்.

## ஓராண்டு நினைவஞ்சலி



திரு. தி. சின்னையா

மலர்வு: 10-10-1927 உதிர்வு: 02-07-1987

அன்பினில் மகிழவைத்த
எம்தெய்வமே
துயர் தன்னில் துவள வைத்து
எங்கு சென்றாய்?
மாய் உமை நினைந்து
வாடும் நாம்
உன் பாதார விந்த மதில்
எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

பிரிவுத்துயரால் வாடும்:
மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

சி. பாலசிங்கம் (பாலன்)
(மகன்)
No. 8, யாழ்வீதி,
வவுனியா. (5756)

## விடுதலைப் புலிகளின்...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

வழங்கப்படும் மாகாண சுயாட்சி, அதிகாரப் பரவலாக்கல், மாகாண சபை இணைப்பு, மாகாண சபைத் தேர்தல்கள் ஆகியவை தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் இந்தியத்தரப்பினரிடம் சில நியாயமான சந்தேகங்களைக் கிளப்பி வந்தனர்.

### அமைச்சர்கள் கூட்டத்தில்...

கடந்த 27 ஆம் திகதி இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி தமது மூத்த அமைச்சர்களுடன் ஈழத்தமிழர் பிரச்சினை குறித்து ஆலோசனை நடத்திய போது விடுதலைப் புலிகள் தரப்பில் கிளப்பப்பட்ட சந்தேகங்கள் குறித்தும் ஆராயப்பட்டது.

அந்த ஆலோசனைக் கூட்டத்தில் கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஸிற்றும் உடனிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகள் தெரிவித்த சந்தேகங்கள் குறித்து ஆராய்ந்த இந்தியப் பிரதமர், அது குறித்து இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடன் பேசி நிலைமையைத் தெளிபடுத்துமாறு திரு. டிக்ஸிற்றைப்பணித்ததாக தெரியவந்தது.

இதனையடுத்து கடந்த செவ்வாய்க்கிழமை புதுடில்லியிலிருந்து கொழும்பு திரும்பியதிருடிக்ஸிற் அன்றிரவே ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனவைச் சந்தித்தார். இந்தியப் பிரதமர் தெரிவித்த கருத்தைஜனாதிபதிஜெயவர்த்தனவிடம் அவர் வெளியிட்டார். மீண்டும் அடுத்தநாள் சந்திப்புத் தொடர்ந்தது.

### ஆராய்வு

உடனடியாக புதன் கிழமை காலையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தியப் பிரதமர் தெரிவித்தவிடயங்கள் குறித்து ஜனாதிபதி ஜெயவர்த்தன மற்றையஅமைச்சர்களுடன் ஆராய்ந்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணசபை அமைப்பது மற்றும் தேர்தல்கள் ஆகியவைகுறித்துஜனாதிபதி ஜெயவர்த்தன இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதம்இந்தஅமைச்சரவைக் கூட்டத்தில் வைத்தே தயாரிக்கப்பட்டது.

தற்போது இந்தக்கடிதத்தில் ஜனாதிபதி ஜெயவர்த்தன தெரிவித்த விடயங்கள் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிபலிப்பு என்னவென்பதைஅறிந்து கொள்வதற்காகஇந்தியத்தரப்பினர் காத்திருக்கின்றனர். அனேகமாக விடுதலைப் புலிகளின் முடிவு இன்று அல்லது நாளை இந்தியத் தரப்பினரை எட்டும் எனஎதிர்பார்க்கப்படுகிறது.

—இப்படி அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-உ)

## அமெரிக்க நீதிமன்றம் உத்தரவு

வாஷிங்டன், ஜூலை 01

ஐ. நா தலைமைக்காரியாலயத்தில்உள்ள பலஸ்தீன விடுதலை இயக்க அலுவலகத்தை மூடும்படி றேகன் அரசு விடுத்த உத்தரவு செல்லுபடியாகாது என்று அமெரிக்க சமஷ்டி நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த உத்தரவை ஐ.நா பொதுச் செயலாளர் நாயகம் பெரஸ்டி குயிலர் வரவேற்றார். (எ)

## புதியநிலைமை...

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

ர்த்தனதாம்அறிவித்தவற்றைச் செயற்படுத்துவதற்கு - விடுதலைப் புலிகள்முதலில்தமது ஆயுதங்களைஒப்படைக்கவேண்டும்- என நிபந்தனை விதித்திருக்கிறார். இது தான் எமக்கு மேலும் சந்தேகத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

நிபந்தனையுடன் திரு. ஜெயவர்த்தனஅறிவிப்பு வெளியிட்டிருப்பதால் புதிய நிலை எதனையும் அது உருவாக்கவில்லை.

இப்படி திரு. அமிர்தலிங்கம் சொன்னார். (அ-உ)

## விடுதலைப்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ணங்கள் இணைப்புப்பற்றி ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிவிப்புப் பற்றிக் கேட்கப்பட்டபோது திரு. கிட்டு சொன்னதாவது:—

இணைப்புப்பற்றி திரு. ஜெயவர்த்தன விடுத்த ஓர் அறிக்கையே (Statement) அது. அது ஒரு பிரகடனம் (Proclamation) அல்ல. ஜனாதிபதி பிரகடனம் ஒன்றே (Presidential Proclamation) தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தும்

இணைப்புப்பற்றிப் பிரகடனம் (Proclamaton) ஒன்றைக் கூடிய விரைவில் வெளியிடும்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனவை இந்திய அரசு தூண்டும் என்று நாம் நம்புகின்றோம்.

இப்படி திரு. கிட்டு சொன்னார் (எ)

## நேற்று...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டன.

இப்பேரணி காரணமாக காங்கேசன்துறையிலிருந்து பலாலி வரை வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன. இப்பேரணிக்கு தமது ஆதரவைத் தெரிவித்தே அவர்கள் வர்த்தக நிலையங்களை மூடியிருந்தனர். (ஒ-68)

## கொம்பியூட்டர்....

(1ஆம் பக்க தொடர்ச்சி)

படவுள்ளது.

இப்புதிய பிரிவு உருவாக்கப்படுமானால், வெளிநாட்டுக் கல்வி நிறுவனங்களில் இருந்து அதிகமான உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன் தமிழ் மாணவர்களும் அதிக பயனைப் பெறமுடியும்.

கொம்பியூட்டர் விஞ்ஞானத்திற் கெனத் தனியான துறைகள் கொழும்பு, பேராதனை மொறட்டுவ பல்கலைக் கழகங்களில் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளன.

இதனிடையில் கொம்பியூட்டர் விஞ்ஞானத்தையும் புள்ளிவிவரவியலையும் இணைத்து தனியான துறை ஒன்று உருவாக்கப்படலாகாது.

இது கணிதத்துறையுடனேயே இணைந்து இருக்க வேண்டும் என்ற ஒரு கருத்து தற்பொழுது தோன்றியுள்ளது.

இன்று [சனி]யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள செனட் கூட்டத்தில் புதிய துறையை உருவாக்குவதா அல்லது ஏற்கெனவே இருந்தது போல் மீண்டும் கணிதத் துறையுடன் இணைந்தே செயல்படுவதா? என்பது பற்றித்தீர்மானிக்கப்படவுள்ளது என்று தெரியவருகின்றது. (இ-5)

## 89 A|L

(WEEKEND CLASSES)

★ PHYSICS ★

திரு. வர்ணம்

பிரிவு (I) அனுமதியில்லை
பிரிவு (II) அனுமதியில்லை
பிரிவு (III) HEAT 7-30
ஆரம்பம் 2-07-88

(அனுமதிகள் மட்டுப்படுத்தப்படும்)

NEW MASTER INSTITUTE
B. M. C. LANE-JAFFNA

[C5592]

## யாழ்மாவட்ட மினிசினிமா உரிமையாளர்களின் கவனத்திற்கு

## அவசரப் பொதுக்கூட்டம்

யாழ் மாவட்ட மினிசினிமா சங்கத்தின் முக்கியகூட்டம் ஒன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (03.07.88) காலை 9.30 மணிக்கு 162, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் (உஷா சினிமா) நடைபெறவுள்ளது. அனைவரும் தவறாது கலந்துகொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.


**முக்கிய குறிப்பு:-**

இக்கூட்டத்தில் கலந்துகொண்டு சங்கத்தின் அனுமதியைப் பெறத்தவறுபவர்கள் பின் எக்காரணங்கொண்டும் மினிசினிமா நிலையம் ஒன்றை நடத்துவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

தலைவர்
யாழ் மாவட்ட மினி சினிமா சங்கம்
யாழ்ப்பாணம்.

(5758)

## 45 ஆம்நாள் நினைவஞ்சலி கண்ணீர்ப்பூக்கள்



### மு. சண்முகரட்ணம் (தயா)

(பங்காளர் சுபமாலா மோட்டோர்ஸ்)

அகிலத்தில்: 3 . 6 . 1956 அக்கினியில்: 18 . 5 . 1988

மாதங்கள் மறையலாம்
மாண்ட உங்களையும்
மறையவிடுவோமோ?
மற்றவர்தாம் மறந்தாலும்
மனைவிதான் உங்களையும் மறப்பாளோ?
மக்கள்தான் மறப்பாரோ?
மாண்டவேளைதனில் யாரை
நினைத்துமண்ணுலகவாழ்வதனை மறந்தீரோ?
எம் குலவிளக்கே!

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனை பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள்.
பெற்றோர், மற்றும் உன் அன்பு
மறவா அன்பு சகோதர, சகோதரிகள்.
குளப்பிட்டி, கொக்குவில். (4800)

## விற்பனை

நீலம், பச்சை, சிறுப்பு ஆகிய நிறங்களிலும், எல்லா அளவுகளிலும் போட்டோ ஸ்ரட் பிரதிகள் செய்யக்கூடிய "கனன்" போட்டோ ஸ்ரட் மெசின் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 239, கிளீன் ரட், யாழ்ப்பாணம்.

(சி 5629)

ஓம்
முருகா

## V. J. S. EXPRESS

ஸ்தாபனத்தார் அறிமுகப்படுத்தும் புதியதொரு சேவை

### யாழ்/ கொழும்பு பஸ் சேவை

இச்சேவை தினசரி பகல் 12 மணிக்கு

**யாழ். பஸ் நிலையம் முன்பாகவும்**

பகல் 12.30 மணிக்கு கண்டி ரோட், **பிரதம தபால் கந்தோர்** முன்பாகவும் இருந்து புறப்படும்.

அறிமுக பஸ் கட்டணம்

**ரூ. 100/- மட்டுமே**

இச்சேவைக்கு ஆசனம் பதிவு செய்யப்பட மாட்டாது. பஸ் புறப்படும்போது டிக்கெட்டுக்களை பஸ்ஸிலேயே பெற்றுக் கொள்ளலாம்.

யாழ். அலுவலகம்:
113, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

தலைமை அலுவலகம்:
41, விவேகானந்த வீதி, கொழும்பு-6.
தொலைபேசி. 500748, 501341.

(C/5623)

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி



செல்வன்:- கணவதிப்பிள்ளை சோதிநாதன்

மண்ணில் 18.09.1957 விண்ணில் 02.06.1988

அன்புக்கனி நிறை இடத்தை மறக்கலாமோ
அழகு நிறை நின்னுருவை மறக்கலாமோ
இன்பநகை மொழிகளைத்தான் மறக்கலாமோ
இனியவனே சோதியுனை மறக்கலாமோ
உண்மையில் நீ பிரிந்து முப்பத்தொரு நாள்
—சென்றாலும்
ஓயாதுள்ளம் எண்ணிடத் தவிக்குதடா!

வீதி
சங்கத்தானை
சாவகச்சேரி

இங்ஙனம்
தாய், தகப்பன்
சகோதரன், சகோதரிகள்

(5152)

## மரண அறிவித்தல்கள்

### திரு. நாகநாதி கந்தையா (பிள்ளையார்)

வேலணை கிழக்கு, அம்மன் கோவிலடியைச் சேர்ந்த திரு. நாகநாதி கந்தையா (பிள்ளையார்) அவர்கள் 30-6-88 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார். அன்னார் காலஞ்சென்ற தெய்வானையின் அன்புக் கணவரும், செல்லம்மா, கனகலிங்கம், இராசலட்சுமி, நாகம்மா, அன்னலட்சுமி, சொறனமணி, பூபதி அம்மா, கந்தசாமி ஆகியோரின் அன்புத் தந்தையும், கோட்டை முத்துத்தம்பி, மகேஸ்வரி, முத்தையா, கணபதிப்பிள்ளை, பரமலிங்கம், காசிலிங்கம், தெய்வேந்திரம், மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் வேலணை கிழக்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் 1 - 7 - 88 அன்று பிற்பகல் 12-30 மணியளவில் நடைபெற்று, வேலணை சாட்டி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. உற்றார், உறவினர் இதை ஏற்றுக் கொள்ளவும்.

வேலணை கிழக்கு,
வேலணை. (5754)

### ஜீன் காயத்திரீ

சில்லாலையைச் சேர்ந்த Dr. M. D. பாக்கியசோதி யோசவ், இவோனின் அன்பு மகள் ஜீன் காயத்திரீ 30-06-88 இல் காலமானார்.

இவர் ஜெயவேந்தன், ஜெயரஜிந்த், பிரியதர்மினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி தார்சீசியஸ், திருமதி மாலினி எமில், திரு. றட்ணயோசவ், திரு. கொலின் கொன்ஸ்ரன்ரைன், திரு. மேவின் கொன்ஸ்ரன்ரைன், திரு. றறின் கொன்ஸ்ரன்ரைன், திரு. கொட்வின் கொன்ஸ்ரன்ரைன் ஆகியோரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திரு. திருமதி S . F யோசப், காலஞ்சென்ற திரு. S. A. கொன்ரஸ்ன்ரைன், திருமதி லீனா கொன்ஸ்ரன்ரைன் ஆகியோர்ன் அன்புப் பேத்தியுமாவார். இவரின் இறுதிச் சடங்குகள் இன்று சனிக்கிழமை 02-07-88 மாலை 4 மணியளவில் சில்லாலையில் இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டப்படுகிறார்கள்.

தகவல்: மேவின் கொன்ஸ்ரன்ரைன்

(4798)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் [பிறைவேற்] லிமிடெட்டினரால் ... வீதி 212/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 02 - 07 - 1988இல் ... Published by New Uthiyan Publications (pvt) Ltd.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்க நகைகளை நல்ல விலையில் விற்று உடனே பணத்தைப் பெற்றிட நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்.
New Eelam
Jewellery Mart
No. 423, (247) K. K. S. Road,
Sivan Kovilady, Jaffna.
(குளிரூட்டப்பட்ட தனியார் வர்த்தக ஸ்தாபனம்)
Prop: RAJAKOPAL CHANDRAN.

சஞ்சீவி சஞ்சிகை

02 - 7 - 1988 சனிக்கிழமை

தங்க நகைகளை நல்ல விலையில் விற்று உடனே பணத்தைப் பெற்றிட நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்.
நியூ ஈழம் ஜுவல்லரி மாட்
இல. 423 (247) கே. கே. எஸ். வீதி,
சிவன் கோவிலடி
யாழ்ப்பாணம்.
(குளிரூட்டப்பட்ட தனியார் வர்த்தக ஸ்தாபனம்)
உரிமையாளர்:
இராஜகோபால் சந்திரன்

# குறள் கூறும் 'நஞ்சு'; பார்வை என்பதே சரி!

> பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர்... என்ற குறளில் கூறப்படும் நஞ்சு, பதார்த்த நஞ்சு அல்ல; பார்வை நஞ்சே என்று புலவர் ஈழத்துச் சிவானந்தன் கருத்து வெளியிட்டிருந்தார். அது 18. 6. 88 சஞ்சீவியில் பிரசுரமானது.
>
> இல்லை. அது பதார்த்த நஞ்சே என்று வட்டூர்க் கடம்பன் தெரிவித்த கருத்து சென்ற வார சஞ்சீவியில் பிரசுரமானது.
>
> புலவர் ஈழத்துச் சிவானந்தன் தெரிவித்த கருத்து சரியானதே என்று சம்பன் கழகத் தலைவர் திரு. தி. திருநந்தகுமார் கூறும் கருத்து இவ்வாரம் பிரசுரமாகின்றது.

**- தி. திருநந்தகுமார் -**

நீயுமா புருட்டஸ்?—என்று கேட்டபோது யூலியஸ் சீஸரிடம் மன்னிக்கும் தொனி காணப்படவே இல்லை.

குத்துண்டபின் தன் இயலாமையினால் சீஸர் வாழாதிருக்கின்ருனேயன்றி, நஞ்சுண்டமையும் நயத்தக்க நாகரிகத்தால் அவன் வாழாதிருக்கவில்லை.

அரசியலில் வரும் அதிகாரத்திற்கு அரசர்களைத்தான் உதாரணம் காட்டவேண்டும் என்று நினைத்தால் அதற்குப் பொருத்தமானவர் 'மெய்ப் பொருள் நாயனரே! பக்தி என்னும் நயத்தக்க நாகரிகத்தால் தண்டிக்க முடிந்தும், முத்திநாதனை மன்னித்தமையே அதற்குச்சான்று.

'நஞ்சுண்டு அமைதல்' என்று வள்ளுவர் கூறியது நாகரிகத்தின் எல்லையை உணர்த்துதற்கே அன்றி, உண்மையான நஞ்சுண்ணக் கருதி அன்று.

'கல்லைத் தின்ருலும் செமிக்கும் வயது' என ஊர்வழக்கில் இளைஞர்களுக்குச் சொல்வதுண்டு. அதற்காக கல்லைத் தின்ன முடியுமா? அல்லது அது அவசியம்தானு? எனவே குறள் சொன்ன கருத்தை விடுத்துப் பதார்த்த நஞ்சையே வள்ளுவர் குடிக்கச் சொன்னுர் என்று வாதிடுவது முறையன்று.

'பதியும் சாத்திரத்துள்
ளுறை காணுர்
பாணைத்தேனில் அகப்பை-
யைப் போல்வார்'

எனப் பாரதி கூறியது போல ஆதல் உகந்தது அன்று.

ஓர் உயர்ந்த புலவனின் பாடலை பல சிந்தனைகளினூடு நயத்தல் ஒரு ரசிகனின் உரிமை.

மற்றவரின் நெஞ்சில் இருக்கும் நஞ்சை பார்வையால், வார்த்தையால், செயலால் வெளிப்படுத்தும்போது பொறுத்து அமைதல் நயத்தக்க நாகரிசம் என்று கூறுவது காலத்தால் பொருந்தும். இன்றைய சமுதாயத்தை நெறிப்படுத்தும் நல்ல சிந்தனையே.

வாழ்க்கையை வழிப்படுத்துவதே வள்ளுவம். அந்த அடிப்படையில் சமூக சிந்தனையை எழுப்பக் கூறப்பட்ட கருத்தை நயப்பதுதான் நயத்தக்க நாகரிகம் அல்லவா! ●

# சோவியத் யூனியனின் இரும்புத்திரை முற்றுகத் தகர்க்கப்படுமா?

## எதிர்ப்புகளுக்கு மத்தியில் கோர்ப்பச்சேவ் அரசியல் சீர்திருத்தங்கள்

உலக உலா
என்.பி.சீலன்

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 19 ஆவது தேசிய மாநாடு கடந்த செவ்வாய்க்கிழமை மாஸ்கோவில் ஆரம்பமானது.

1941 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடைபெறும் மிகப் பெரிய அளவிலான மாநாடு இது என்று கருதப்படுகிறது.

இரண்டாவது உலக மகா யுத்தகாலத்தில் ஹிட்லரின் படையெடுப்பு அபாயம் உருவான சமயம் அப்போதைய சோவியத்தலைவர் ஜோசப் ஸ்ராலின் இப்படியான ஒரு மாநாட்டைக் கூட்டியிருந்தார்.

45 வருடங்கள் கடந்தபின்பு தற்போதைய சோவியத் அதிபர் மிக்செய்ல் கோர்பச்சேவ் மீண்டும் ஒரு விசேஷ மாநாட்டைக் கூட்டியிருக்கிருர். நேற்று வெள்ளிக்கிழமை மாநாடு முடிவடைய இருந்தது.

அன்று ஸ்ராலின் காலத்தில் இருந்ததுபோன்று சோவியத் யூனியன் உடனடி யுத்த அபாயம் எதையும் இன்று எதிர் நோக்கவில்லை.

மாருக— 'அரசியல், சமுதாய சீர்திருத்த யுத்தம்' ஒன்றுக்குள் சோவியத் யூனியன் பிரவேசித்துக்கொண்டிருக்கிறது. இதற்கான அங்கீகாரத்தை சட்டரீதியாகப் பெறுவதே இந்த மாநாடு கூட்டப்பட்டதன் நோக்கம் ஆகும்.

சோவியத் யூனியனுக்கு இன்று விஜயம் செய்வோர் அங்கு பெரும் மாற்றங்களைக் காண்கிருர்கள்.

இனரீதியிலான எதிர்ப்பு நடவடிக்கைகள், வேலைநிறுத்தங்கள், ஊழல் குற்றச்சாட்டுக்கள், தேவாலய ஆராதனைகள் மற்றும் கோரிக்கைகள், நள்ளிரவு ரெலிவிஷன் நிகழ்ச்சிகள் அழகுராணிப் போட்டிகள் அங்கு தலைதூக்க ஆரம்பித்துள்ளன.

சோவியத் யூனியனில் எவை சாத்தியப்படமாட்டா என்று மூன்று வருடங்களுக்குமுன்னர் கருதப்பட்டதோ அவை இன்று சாத்தியமாகி வருகின்றன. ஏனைய நாடுகளைப் போன்று சோவியத்யூனியனும் மாறிவருகிறது.

அதிபர் மிக்கெய்ல் கோர்பச்சேவின் இந்த சிந்தனை மாற்றத்தின் எதிரொலியே நிக்கரகுவா– ஆப்கானிஸ்தான் சமாதான முயற்சிகளும், அணு ஆயுதக்குறைப்பு உச்சிப்பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றமும் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

### யோசனைகள்

செவ்வாயன்று ஆரம்பமான இந்த நான்கு நாள் சிறப்பு மாநாட்டில் அதிபர் கோர்பச்சேவ் மூன்றரைமணி நேரம் உரையாற்றினுர். 5000 பிரதிநிதிகள் வரை மாநாட்டில் கலந்துகொண்டனர்.

அரசியல் சீர்திருத்தங்கள் தொடர்பாக கோர்பச்சேவ் தெரிவித்த 5 யோசனைகள் வருமாறு;-

★ அரசாங்கமும் கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்து நிர்வாகம் நடத்தும்முறை சோவியத் யூனியனில் தோல்வியடைந்துவிட்டது.



கோர்ப்பச்சேவ்

★ கட்சி தனியாகவும் அரசு தனியாகவும் செயற்படவேண்டும்.

★ கம்யூனிஸ்ட் கட்சியின் சுப்பிரீம் கவுன்ஸில் நாட்டை ஆளும்முறை நீக்கப்படவேண்டும். நாடாளுமன்றம் நிறுவப்பட்டு வேட்பாளர்கள் போட்டியிடத்தக்கதாக தேர்தல் நடத்தப்படவேண்டும்.

★ நாடாளுமன்றம் தெரிவு செய்யும் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனுதிபதி நாட்டை நிர்வகிக்கவேண்டும்.

★ பூரண ஜனநாயக நடைமுறை அமுல் செய்யப்படவேண்டும்.

தற்போது சோவியத் அதிபர் மிக்கெய்ல் கோர்பச்சேவ் முன்வைத்துள்ள அரசியல் சீர்திருத்தங்களைவிட குறைவானவையே 1968 இல் செக்கோஸ்லோவேக்கியாவில் அதிபர் டூப் செக்கினுல் முன்வைக்கப்பட்டிருந்தன.

அன்று அந்த சிந்தனைகளை நசுக்கிய அதே சோவியத் யூனியன் 20 வருடங்களின் பின்பு அதனை மீண்டும் முன்வைத்திருக்கிறது.

அதிபர் கோர்பச்சேவின் அரசியல் சீர்திருத்த யோசனைகள் சோவியத் யூனியனின் பழைமை விரும்பிகளின் கடும் எதிர்ப்புக்குள்ளாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்ப்புகள் உள்ளபோதிலும் பெரும்பான்மை சோவியத் மக்களின் ஆதரவுடன் தமது சீர்திருத்தக் கொள்கைகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல அதிபர் கோர்பச்சேவ் உறுதிபூண்டுள்ளார். ★

# பேசுவதைத் தடுக்கவே பேராசிரியர் கடத்தப்பட்டார்!

உள்ளும் புறமும்
குறுமுனி

கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபம் கலகலப்பாக இருக்கிறது.

அரசியல் பிரமுகர்கள் நிறைந்து காணப்படுகின்றனர்.

பிரமுகர் ஒருவர் காதில் வெளியில் இருந்து வந்த ஒருவர் ஏதோ சொல்கிருர்.

கருத்தரங்குக்கு வந்தவர்கள் முகங்களில் கவலை ரேகை படர ஆரம்பிக்கிறது.

திருமதி லக்ஷ்மி பண்டாரநாயக்கா மேடை மீது தோன்றுகிருர்.

பேராசிரியரை மனிதாபிமான அடிப்படையில் விடுவித்து விடுமாறு வேண்டுகோள் விடுக்கிருர்.

டொயின்டீ பரிசு பெற்ற பேராசிரியர் ரால்ப் புல்ஜின்ஸ் கடத்தப்பட்ட நிகழ்ச்சி வெளியாகிறது.

சுதந்திரக்கட்சி அரசில் அமைச்சராக விளங்கியவர் திரு. பீலிக்ஸ் பண்டாரநாயக்கா.

அவரின் நினைவாகவே சென்ற ஞாயிறு கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

கருத்தரங்கில் கலந்துகொள்ள திரு. புல்ஜின்ஸ் வீட்டில் இருந்து தனது காரில் மாலை 5 மணியளவில் புறப்பட்டார்.

காரை டிரைவர் ஓட்டி வந்தார். டிரைவரின் அருகில் முன் ஆசனத்தில் அமர்ந்திருந்தார். பின் ஆசனத்தில் பேராசிரியரின் செயலாளர் செல்வி டி. சில்வா அமர்ந்திருந்தார்.

லான்ஸர்கார் ஒன்று பேராசிரியரின் கார் முன்னுல் நின்றது. பேராசிரியரின் கார் வழி மறிக்கப்பட்டது.

டிரைவரை வெளியே இழுத்து எடுத்து பின் ஆசனத்தில் ஏறும்படி பணிக்கப்பட்டார்.

டிரைவர் ஆசனத்தில் ஏறியவர் பேராசிரியரின் காரை ஓட்டிச் சென்ருர்.

கொஞ்சத்தூரம் சென்றவுடன், பேராசிரியரின் செயலாளர், டிரைவர் ஆகியோரை கடத்தியவர்கள் இறக்கிவிட்டனர்.

பேராசிரியரை மட்டும் கடத்தல்காரர்கள் கொண்டு சென்றனர்.

கொலன்னுவை பக்கம் நோக்கியே பேராசிரியர் கொண்டு செல்லப்பட்டார்.

அன்று இரவு 7.15 மணியளவில் பேராசிரியர் விடுவிக்கப்பட்டார்.

விடுவிக்கப்படுவதற்கு முன்னர் என்ன நடந்தது?

பேராசிரியர் சொல்கிருர்; என் கண்கள் கட்டப்பட்டன. சிறிது நேரம் சென்ற பின்னர் ஒருவர் வந்து நீங்கள் இனி கருத்தரங்கில் பேச முடியாது. நேரம் தப்பிவிட்டது. கருத்தரங்கில் பேசுவதைத் தடுக்கவே உங்களைக் கடத்தி வந்தோம். இனிமேல் இந்தக்கூட்டத்துடன் நீங்கள் சேரவும் கூடாது'–

கார் ஒன்று புறப்பட்டுச் செல்லும் சத்தம் கேட்கும். அதன் பின்னர் சிறிது நேரம் கழித்து கட்டப்பட்ட கண்களை அவிழ்த்து விட்டு நீங்கள் செல்லலாம்'— என்று அந்த நபர் என்னிடம் மேலும் சொன்னுர்.

'நீர் ஒரு ஜென்டில்மென்' —என்று கூறிய கடத்தல்காரர்கள் என்னை நன்ருக அந்த இரண்டு மணிநேரமும் கவனித்தார்கள். 'பன்ரா' குளிர்பானம் தந்து உபசரித்தார்கள்.

இப்படிச்சொன்னுர் பேராசிரியர் புல்ஜின்ஸ்,

இந்த இரண்டு மணித்தியாலக் கடத்தல் நாடகத்தின் பின்னணி என்ன?

பெரும் மர்மமாக இருப்பதாகக் கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

கடத்தல் சம்பவத்தை உடனே அறிவித்த பொதுசனத்தொடர்புச் சாதனங்கள், தென் இலங்கைத் தீவிரவாதிகள்மீது வழமைபோல் பொலீஸார் சந்தேகிப்பதாக தெரிவித்தன.

கருத்தரங்கில் பேசுவதை தடுக்கவே பேராசிரியர் கடத்தப்பட்டார் என்ற உண்மை, பேராசிரியர் விடுவிக்கப்பட்ட பின்னர்தான் தெரியவந்தது. பேராசிரியர் புல்ஜின்ஸ் அன்று 'அதிகாரத்தின் விலை' (Price of Power) என்ற தலைப்பில் தான் பேசவிருந்தார்.

பேசாத தலைப்பாகி விட்டது 'அதிகாரத்தின் விலை'

பேராசிரியர் இனியும் பேசுவாரா? இக்கேள்வி தான் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் எழும்பியுள்ளது. ★

# இளம் கிரிக்கெட் வீரர்கள் உருவாக்கப்பட வேண்டும்

**- விவியன் -**

விளையாட்டுத் துறை

வடபகுதிப் பாடசாலைகளின் 15 வயது, 17 வயதுப் பிரிவு கிரிக்கெட் அணிகளுக்கிடையேயான போட்டிகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

19 வயதுப் பிரிவுகளின் கிரிக்கெட் மோதல் ஆரவாரமில்லாமல் அடங்கிப்போனது போலவே மற்றைய இரு அணிகளின் மோதல்களும் முடிந்துவிடுமா என்ற கேள்வி கிரிக்கெட் ரசிகர்களின் மனத்தில் எழுந்ததில் தவறில்லை.

ஏனெனில் வழமையாக முந்திய வருடங்களில் அணிகளுக்கிடையேயும் பாடசாலை மட்டத்தில் கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் நடைபெறுவதுண்டு. ஆனுல் இம்முறை அப்படியான போட்டிகள் எதுவும் இதுவரை ஒழுங்கு செய்யப்படவில்லை.

பாடசாலை மட்டத்தில் சினேகபூர்வ போட்டிகள் மாத்திரம் சத்தம் சந்தடி இல்லாது நடந்துவருகின்றன.

முக்கியமாக இந்தப் பிரிவுகளுக்கிடையிலான சுற்றுப் போட்டி நடத்தப்படாவிடில் கிரிக்கெட் ரசிகர்களைவிட பாதிக்கப்படுபவர்கள் வீரர்களே.

முன்பெல்லாம் அகில இலங்கை ரீதியிலான அணிகளில்கூட வடபகுதியின் கிரிக்கெட் வீரர்கள் பங்கு பற்றி சாதனைபுரிந்தார்கள்.

அதைவிட இலங்கை அணிக்கே ஆகக்கூடிய தகுதி பெற்றிருந்த வீரர்கள் பலர். ஆனுல் இனப்பிரச்சினை காரணமாக அவர்களுக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை.

தற்பொழுது இலங்கை அணியின் தமிழ் வீரர்களைச் சேர்த்துக்கொள்ளும் வாய்ப்பு அதிகரித்துவருகிறது. அதே சமயம் இங்கு திறமையான வீரர்களைத் தேர்ந்தெடுப்பது மிகக்கடினமாக உள்ளது.

இளம் வீரர்களை உற்சாகப்படுத்தும்வகையில் கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் நடத்தப்படவேண்டும்.

வீரர்களின் திறமையை வளர்த்து அகிலரீதியில் அணிகளில் அவர்களை இடம் பெறச் செய்யவேண்டியது பாடசாலைகளின், கிரிக்கெட் வழிகாட்டிகளின் கடமை.

இதேவேளை நடைபெறும் ஜீ. சி. ஈ. விசேட பரீட்சையைத் தொடர்ந்து சுற்றுப் போட்டி ஒன்றை ஒழுங்கு செய்ய முயற்சிகள் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது.

நிச்சயமாக அது நடைபெற வேண்டும், போட்டி நடைபெற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

திறமை வளரவேண்டும், வடபகுதி ரசிகர்களின் ஆவலையும் பூர்த்திசெய்ய வேண்டும்.

வீரர்களின் திறமையை வளர்க்க அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவோம். ★


யாழ். நகர வாசிகளே!

காலையில் எழுந்ததும் உதயன் வாங்குவதற்காகக் கடைக்குச் செல்கிறீர்களா?

உங்களுக்கு ஏன் அந்தச் சிரமம்?

உடனடியாக உதயசேவையில் சேர்ந்துவிடுங்கள்!

விடியும் வேளை உதயன் உங்கள் வீடு தேடி ஓடி வருவான்!!



உதயசேவை

இலவசம்! இலவசம்!!

யாழ். மாநகர பிரதேசத்திற்குள் வதியும் வாசகர்களுக்கு விநியோகக் கட்டணம் எதுவுமில்லை.

தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்:
விநியோக முகாமையாளர்,
உதயன் / சஞ்சீவி
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெளிவு பிறந்தது



மாலையில் இருந்து கேற்றடியிலும் வீட்டு வாசலிலும் மாறி, மாறிக் காத்திருந்து சலித்துப்போய், மனம் சோர்ந்து போய் வீட்டிற்குள் சென்றாள் சீதா.

கொழும்பில் வேலை பார்க்கும் அவள் கணவன் சங்கர் அன்று வருவதாகச் செய்தி அனுப்பியிருந்தான். காலை புறப்பட்டு மாலை ஐந்து மணியளவில் வருவதாக அறிவித்திருந்தான்.

மாலை ஐந்து மணிமுதல் கேற்றடியிலும், வீட்டுவாசலிலும் காத்திருந்து, சலிப்பும், ஏமாற்றமும் அடைந்து, இரவுச் சமையலுக்கு ஆயத்தம் பண்ணினாள்.

அவளது ஐந்து வயதுக் குழந்தை உமா 'அப்பா எப்போம்மா வருவார்' என்று அடிக்கடி கேட்டபடி, அவள் சேலைத்தலைப்பைப் பிடித்தபடி திரிந்தாள்.

இரவு வரக்கூடும் என்று மனதைத் தேற்றிக்கொண்டு சமைக்கத் தொடங்கினாள். சமையல் முடிந்ததும் வீட்டு வாசலில் காத்திருந்தாள். 'அப்பா ஏம்மா இன்னும் வரலை' என்று சிணுங்கிய உமாவிற்கு உணவூட்டி உறங்க வைத்துவிட்டு மீண்டும் கணவன் வரவிற்காகக் காத்திருந்தாள்.

இரவு நேரம் ஒன்பது மணியாகியும் கணவன் வரவில்லை. இனியும் காத்திருப்பதில் பலன் இல்லை என்று எண்ணியபடி முன் லைட்டை அணைத்துவிட்டுச் சாப்பாட்டு மேசையைப் பார்த்தாள். கணவனுக்காக விசேஷமாகத் தயாரித்த உணவு அப்படியே இருந்தது. சாப்பிட மனம் இன்றி அவற்றை மூடி வைத்துவிட்டு, லைட்டையும் அணைத்துவிட்டுப் படுக்கப்போனாள். அந்தநேரம் வெளிக்கதவு தட்டும் சத்தம் கேட்டது. உடனே எழும்பி லைட்டைப் போட்டபடி 'உமா அப்பா வந்திட்டார்' என்று உள்ளம் குதூகலிக்கக் குரல் கொடுத்தபடி கதவைத் திறந்தாள்.

கதவைத் திறந்தவளுக்கு அதிர்ச்சியால் மூச்சு நின்றுவிடும் போல் இருந்தது. கையில் இயந்திரத்துப்பாக்கியுடன் ஒரு இளைஞன் நின்றான். மரணபயம் நெஞ்சைக் கவ்வ 'ஐயோ' என்று கூக்குரலிட வாயைத் திறந்தாள். உடனே அந்த இளைஞன் அவள் வாயைப் பொத்தியபடி, அவளை உள்ளுக்குத் தள்ளி கதவைச் சாத்தினான். பின் 'சத்தம் போடவேண்டாம்' என்று சைகை மூலம் காட்டினான்.

எங்கேயோ ஷெல் அடிக்கும் சத்தம் கேட்டது. தொடர்ந்து துப்பாக்கிச் சூட்டுச் சத்தமும் கேட்டது. இச்சத்தங்களைத் தொடர்ந்து நாய்களின் பயங்கர ஊளைச்சத்தங்களும், அவளுக்குத் திகிலையும், பயத்தையும் அதிகமாக்கின.

சத்தம் போடாது இருகைகளாலும் மார்பைப் பொத்தியபடி அவனையே பார்த்தபடி இருந்தாள். தேகம் நடுங்கி வேர்த்தது. தொண்டை வரண்டு தண்ணி குடிக்க வேண்டும் போல் இருந்தது.

அவன் துப்பாக்கியை மேசை மீது வைத்து விட்டு, மிக மெதுவாக அவளுக்கு மட்டும் கேட்கக்கூடியதாக 'நான் கொள்ளையடிக்க வரவில்லை. கொலைகாரனும் இல்லை. பயப்படவேண்டாம்' என்று சொன்னான்.

'யார் நீ, உனக்கு என்ன வேணும்' என்று நடுங்கும் குரலில் கேட்டாள்.

'நான் யாரென்பது உங்களுக்குத் தெரிய வேண்டாம். நான் இங்கு வந்ததும் யாருக்கும் தெரியப்படாது.

'இந்த வீட்டிற்கு ஏன் வந்தாய்'.

'சூழ்நிலை அப்படி. இன்று இரவு நான் இங்கு தங்க வேண்டும். விடியப்போய் விடுவேன். நீங்கள் பயப்பட வேண்டாம்' என்று கூறியவனின் பார்வை சாப்பாட்டு மேசை மேல் சென்றது. திறந்து பார்த்தான். உணவு பரிமாறப் பட்டுத் தயாராக இருந்தது.

'நீங்கள் இன்னமும் சாப்பிடவில்லையா?' என்று கேட்டான்.

சீதா ஒன்றும் பேசாது அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். இரண்டு நாட்களாக நான் சாப்பிடவில்லை' என்று சொல்லியபடி சீதாவைப் பார்த்தான். பின்பு மேசையில் போய் உட்கார்ந்து சாப்பிட்டான். சாப்பிடும்போது 'பயப்படாமல் சொல்லுங்கள். யாருக்காக உணவு தயாராக வைத்திருந்தீர்கள்' என்று கேட்டான்.

இவனுடைய பண்பானபேச்சு சீதாவிற்கு சிறு தைரியத்தைக் கொடுத்தது. இவன் ஒன்றும் செய்ய மாட்டான் என்ற நம்பிக்கையை கொடுத்தது. கணவனை எதிர்பார்த்துக் காத்திருந்ததைச் சொன்னாள்.

அவள் சொன்னதை பொறுமையாகக் கேட்டான். பின் ஒன்றும் பேசாது எழுந்து வீட்டின் பின் பகுதியை போய் பார்த்தான். பின்பு வந்து 'நான் பின் கதவு வழியால் போய், முன் கார் கராச்சில் படுத்து, விடிய ஐந்து மணிக்குப் போய் விடுவேன்' என்று சொல்லியபடி துவக்கை எடுத்துக் கொண்டு வெளியேறினான். பின் வாசல் கதவுக்குப் போய் அதை மெதுவாகத் திறந்தபின் திரும்பிப் பார்த்தான். 'நான் இங்கு வந்ததையோ, தங்கியதையோ யாரிடமும் சொல்லக்கூடாது. அது இருவருக்கும் ஆபத்து' என்று சொல்லிவிட்டு இருட்டில் மறைந்து விட்டான்.

நடந்தது கனவுபோல இருந்தது சீதாவிற்கு. அவன்போன பின்பு லைட்டை அணைத்துவிட்டுப் படுத்தாள். உறக்கம் வரவில்லை. அவள் கணவன் சங்கரின் நினைவுகள் அவள் மனதை ஆக்கிரமித்தன. இன்று ஏன் வரவில்லை, என்ன நடந்தது, திரும்பத் திரும்ப மனம் அதே கேள்வியைக் கேட்டது.

சீதா சங்கரின் நினைவால் உறக்கம் இன்றித் தவித்த அதே நேரம், சங்கர் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வரும் பஸ்ஸில் தூக்கமின்றி சீதாவைப் பற்றிய இனிய நினைவுகளுடன் பிரயாணம் செய்தான். வழக்கத்திற்கு மாறாக அதிகாலை நாலரை மணிக்கே பஸ் யாழ்ப்பாணம் வந்தடைந்து விட்டது. அந்த அதிகாலைப் பொழுதில் வீதிகளில் மக்கள் நடமாட்டம் அற்றநேரத்தில், கையில்சிறிய சூட்கேசுடன் வீடு நோக்கி வந்தான். உள்ளத்தில் மகிழ்ச்சியும், உற்சாகமும் பொங்கி பெழ ஐந்து மணியளவில் வீட்டை அடைந்தான்.

அவன் வீட்டுக் கேற்றை அண்மித்தபொழுது அவன் பார்வை கேற் வாசலில் நிலை குத்தி நின்றது. கால்கள் தாமாகவே நின்று விட்டன.

அந்த மங்கலான காலைப் பொழுதில் கேற்றைத் திறந்து ஒரு உருவம் வெளியேறுவதைக் கண்டான்.

யார் இவன். இந்த நேரத்தில் என் வீட்டில் இருந்து போகிறானே. அவனுக்கு மண்டை வெடித்து விடும் போல் இருந்தது. வீட்டுப் பக்கம் பார்வையைச் செலுத்தினான். ஹோலில் லைட் தெரிந்தது. அவன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அது அணைந்தது.

அவன் மனதில் ஓராயிரம் கேள்விகள் தோன்றிச் சித்திரவதை செய்தன. எவ்வளவு நாட்களாக இந்த நாடகம் நடக்கிறது. தான் வருவதாக அனுப்பிய செய்தி கிடைக்காததால் இந்த நாடகம் தொடர்கிறது. அவன் செயலற்று நின்றான்.

இப்போது என்ன செய்வது என்பது பெரிய கேள்விக் குறியாக இருந்தது. அவன் மூளை இயங்க மறுத்தது. எந்த ஒரு சரியானமுடிவோ, தீர்மானமோ எடுக்கக்கூடிய மனநிலையில் அவன் இல்லை.

யாரைப் பார்க்க மிகுந்த ஆசையோடும், ஆவலோடும் வந்தானோ, அவளைப் பார்க்கவோ, அவளோடு பேசவோ அவன் விரும்பவில்லை. திரும்பிக் கொழும்புக்கே போய்விடலாமோ என்று யோசித்தான். அவன் மனம் குழம்பித் தவித்தது. 'சீதா உனக்கு என்ன குறை விட்டேன், நீயா இப்படிச் செய்வது, என்று அவன் மனம் திரும்பத் திரும்பக் கேட்டது.

ஒரு முடிவுக்கு வந்தவனாக நிலத்தில் இருந்த சூட்கேசை எடுத்து மீண்டும் பஸ்ஸ்ராண்ட் போக எண்ணினான். அந்த நேரத்தில்தான் குழந்தை உமாவின் ஞாபகம் வந்தது. உமாவிற்காக தான் வாங்கிய பொம்மைகளும், பிஸ்கட் பைக்கட்டுகளும் நினைவிற்கு வந்தன. குழம்பிய அவன் மனம் ஒரு நிலைப்பாட்டுக்கு வந்தது.

மெல்ல வீடு நோக்கிப் போனான். ஓசைப்படாமல் கேற்றைத் திறந்தான். வீட்டு முன் கதவடிக்குப் போய் ஹோலிங் பெல்லை அமத்தினான்.

அப்போதுதான் மீண்டும் உறங்கப்போன சீதா திடுக்கிட்டு எழுந்தாள். அவன், அந்த இளைஞன் மீண்டும் வருகிறான் என எண்ணினாள். எதையாவது மறந்துபோய் விட்டுவிட்டுப் போய் விட்டானோ? அதை எடுக்க வருகிறானோ? அவள் மனம் பதட்டம் அடைந்தது. லைட்டைப் போட்டு மேசையைப் பார்த்தாள். பின்போய்க் கதவைத் திறந்தாள்.

எதிர்பாராமல் கணவனைக் கண்டதும் மகிழ்ச்சியும், குதூகலமும் மேலிட 'நீங்களா' என்றாள்.

சங்கர் பதில் சொல்லவில்லை. அவளைப் பார்க்கக் கூட இல்லை. அவளைக் கடந்து உள்ளுக்குப் போனான். அவனைப் பின் தொடர்ந்த சீதா அவன் மனநிலை அறியாது 'என்ன சத்தம் போடாமல் போறீங்க' என்று கேட்டபடி அவன் கையில் வைத்திருந்த சூட்கேசை வாங்கப் போனாள். அதை அவளிடம் கொடாது மேசை மேல் வைத்தான்.

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. அதிர்ச்சியும் திகைப்பும் மேலிட கணவன் முகத்தையே பார்த்தாள். பின்பு 'கோப்பி கொண்டு வாறேன்' என்று சொல்லி விட்டு சமையலறைக்குப் போனாள்.

சங்கர் உறங்கிக் கொண்டிருந்த குழந்தை உமாவை சில வினாடிகள் பார்த்து விட்டு உடைகளைக் கூடக் களையாமல் கட்டிலில் படுத்தான்.

சீதா கோப்பிகொண்டு வந்தபோது சங்கர் நன்றாகத்தன்னை மறந்து தூங்கிக் கொண்டிருந்தான். கோப்பியை மேசை மேல் வைத்து விட்டு அருகில் இருந்த கதிரையில் அமர்ந்தாள். கணவனின் விசித்திரமான போக்குக் காரணம் தெரியாது அவள் உள்ளம் வெம்பி வெடித்தது. என்ன நடந்தது? ஏன் இப்படி நடந்து கொள்கிறார். ஆபீசில் ஏதாவது பிரச்சினையோ? தனது வீட்டில் தங்கிப் போன இளைஞனைக் கணவன் கண்டதை அறியாது பேதைப்பெண் பலவாறாகச் சிந்தித்துக் கண்ணீர் வடித்தாள். மனச் சோர்வால் கதிரையில் இருந்தபடியே தூங்கி விட்டாள்.

கட்டிலில் உறங்கிய சங்கர் திடீரென விழித்துக் கொண்டான். உமா படுத்திருந்த கட்டிலைத் திரும்பிப் பார்த்தான். குழந்தை ஏற்கனவே விழித்து, வலதுகைப் பெருவிரலைச் சூப்பியவாறு, சரிந்து படுத்திருந்து தகப்பனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தது. சங்கர் தான் கொண்டு வந்த பொம்மைகளையும், பிஸ்கெட் பக்கெட்டுக்களையும் அருகில் வைத்தான். பின்பு ஓசைப்படாமல் சூட்கேசை எடுத்துக் கொண்டு வெளியேறினான்.

கேற்றைக் கடந்து இரண்டடி வைத்த பொழுது வேகமாக வந்த மோட்டோர் சைக்கிள் சத்தம் அவன் கவனத்தைத் திருப்பியது. அதில் வந்தவன் சங்கருக்கு நன்கு தெரிந்தவன். அவனோடு கம்பஸில் பொறியியல் படித்தவன். இடையில் விட்டு விட்டான். சங்கரைக் கண்டதும் 'எங்கே போறீங்க ஏறுங்க' என்றான்.

'எங்கே போறேனென்று எனக்கே தெரியாது. நீ இந்தியாவில் இருப்பதாகக் கேள்விப்பட்டேன்' என்றான்.

'நான் எங்கும் இருப்பேன். நேற்று இரவு இதோ இந்த வீட்டில்தான் தங்கினேன்' என்று சொல்லிச்சங்கரின் வீட்டைக் காட்டினான். அவன் தொடர்ந்து சொன்னான். பாவம் அந்த அம்மா பயந்திட்டா. புருசன் கொழும்பில் இருந்து வருவார் என்று எதிர்பார்த்து விசேஷமாகச் சமைத்திருந்தா. அதை நான் சாப்பிட்டு விட்டு கார் கராச்சில் படுத்து விட்டு விடியப் போறேன்' என்று சொன்னவன் நேரமாகிறது. 'நான் வாறன்' என்று சொல்லிவிட்டு மின்னல் வேகத்தில் போய் விட்டான்.

அப்போதுதான் சங்கருக்கு நடந்தது யாவும் தெளிவாகப் புரிந்தது. உள்ளத்தில் தெளிவு பிறந்தது. அவன் கால்கள் வீட்டை நோக்கிச் சென்றன.

வீட்டுக் கதவடிக்குப்போய் 'சீதா, சீதா' என்று வாய் நிறைய, உள்ளம் துடிக்கக் கூப்பிட்டான்.

சங்கரின் குரல் கேட்டு கதவைத் திறந்த சீதாவை அப்படியே அணைத்துக் கொண்டான். சீதா ஆனந்தக்கண்ணீர் விட்டாள்.

சந்தேகம் தீர்ந்து, தெளிவு பிறந்தது. சீதா அன்புப் பிணைப்பில் சிக்கித்தவித்தாள்.

(யாவும் கற்பனை)

- வில்வம் பசுபதி -

சஞ்சீவி சிறுகதை

# வேதாந்திகள் கைக்குள் சிக்காத கடவுள் போன்றே என் கதைகளும்

**சிறுகதை மன்னன் என்று பட்டம் பெற்றவர் புதுமைப்பித்தன். அன்னாரின் நினைவு தினம் சென்ற 30 ஆம் திகதி.**

**'காஞ்சனை' என்ற தனது சிறுகதைத் தொகுதிக்கு அவர் 1943 இல் எழுதிய முன்னுரையின் சில பகுதிகள் இங்கு பிரசுரமாகின்றன.**

**நான்** கதை எழுதுகிறவன். கதையிலே கல் உயிர் பெற்று மனிதத்தன்மை அடைந்து விடும். மூட்டைப் பூச்சிகள் அபிவாதயே சொல்லும். அதற்கு நான் என்ன செய்யட்டும்? கதை உலகத்தின் நியதி அது.

நீங்கள் கண்கூடாகக் காணும் உலகத்தில் மனிதன் 'கல்லுப் பிள்ளையார்' மாதிரி உட்கார்ந்திருப்பதைப் பார்க்கவில்லையா?

மனிதன் கல்மாதிரி இருக்கும்போது கல்தான் சற்று மனிதன் மாதிரி இருந்து பார்க்கட்டுமே! தவிரவும் பழைய கதைகளை எடுத்துக்கொண்டு அதை இஷ்டமான கோணங்களில் எல்லாம் நின்று கொண்டு பார்க்க எங்களுக்கு உரிமை உண்டு.

பொதுவாக என்னுடைய கதைகள் உலகத்துக்கு உபதேசம் செய்து உய்விக்க ஏற்பாடு செய்யும் ஸ்தாபனம் அல்ல.

பிற்கால நல்வாழ்வுக்குச் சௌகரியம் பண்ணி வைக்கும் இன்ஷ்யூரன்ஸ் ஏற்பாடும் அல்ல. எனக்குப் பிடிக்கிறவர்களையும் பிடிக்காதவர்களையும் கிண்டல் செய்து கொண்டிருக்கிறேன்.

## விமர்சகர்களுக்கு புதுமைப்பித்தன்

சிலர் என்னோடு சேர்ந்து கொண்டு சிரிக்கிறார்கள்; இன்னும் சிலர் கோபிக்கிறார்கள். இவர்கள் கோபிக்கத்தான் அவர்களை இன்னும் கோபிக்க வைத்து முகம் சிவப்பதைப் பார்க்க வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. ஆனால் இப்படிக் கோபிப்பவர்கள் கூட்டம் குறையக் குறையத்தான் எனக்குக் கவலை அதிகமாகி வருகிறது.

இவர் இன்னமாதிரித்தான் எழுதுவது வழக்கம், அதைப் பாராட்டுவதற்கு குறிப்பிட்ட மனப்பக்குவம் தமக்கு இருப்பதாகக் காட்டிக் கொள்ளுவது கௌரவம் என்கிறார், என்னைச் சட்டம் போட்டுச் சுவரில் மாட்டிப் பூப்போட்டு மூடி விடுவதுதான் என் காலைஇடறி விடுவதற்குச் சிறந்த வழி. அந்த விளையாட்டெல்லாம் என்னிடம் பலிக்காது.

வாழையடி வாழையாகப் பிறக்கும் வாசகர்களில் எவரோ ஒருவருக்கு நான் எழுதிக் கொண்டிருப்பதாகவே மதிக்கின்றேன்.

விமர்சகர்களுக்கு ஒரு வார்த்தை. வேதாந்திகள் கைக்குள் சிக்காத கடவுள் மாதிரித்தான் நான் பிறப்பித்து விட்டவைகளும். அவை உங்கள் அளவு கோல்களுக்குள் அடைபடாதிருந்தால் நானும் பொறுப்பாளியல்ல; நான் பிறப்பித்து விளையாட விட்டுள்ள ஜீவராசிகளும் பொறுப்பாளிகள் அல்ல; உங்கள் அளவுகோல்களைத்தான் என் கதைகளின் அருகில் வைத்து அளந்து பார்த்துக் கொள்ளுகிறீர்கள் என்று உங்களுக்குச் சொல்லிவிட விரும்புகின்றேன். ★

# 150ஆண்டு நிறைவுவிழாக் காணும் வேம்படி மகளிர் கல்லூரி!

**யாழ். வேம்படி மகளிர் கல்லூரியின் 150 ஆண்டுகள் நிறைவை ஒட்டி இக்கட்டுரையும் கவிதைகளும் பிரசுரிக்கப்படுகின்றன.**

**வே**ம்படி மகளிர் கல்லூரி சென்ற வருடம் நிறைவு பெற்ற தனது 150வது பிறந்த நாளைக் கொண்டாடுகிறது. 'வேம்படி' — யாழ் குடாநாட்டில் இது மெதடிஸ்த சபையின் தாயகம். பாரிய வேப்ப மரங்கள் வேரூன்றியிருந்த சூழலில் ஒல்லாந்துத் தளபதியின் வாசஸ்தலமாயிருந்த நீண்டதொரு கட்டடத் தொகுதியை ஜேம்ஸ்மூயாட் என்பவர் பகிரங்க ஏலத்தில் வாங்கி 1824ம் ஆண்டில் மெதடிஸ்த சபைக்கு அன்பளிப்புச் செய்தார். அதைத்தொடர்ந்து மிஷன் இல்லம் உண்டானது. 'யாழ் ஆங்கில பாடசாலை' இக்கட்டடத்தில் இடம் பிடித்தது. 1834 ம் ஆண்டில் பேர்சிவல் பாதிரியார் சபையை ஆட்கொண்டார். யாழ் உவெஸ்லியன் ஆங்கில பாடசாலை'யாழ் மத்திய பாடசாலை' ஆனது ஆங்கிலம் கற்பதற்காக ஆறுமுகநாவலர் இங்கு சேர்க்கப்பட்டார். ஆசிரியர்கள் தேவைப்பட்டனர் இதற்கென 'ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஒன்றையும் ஆரம்பித்தார் பேர்சிவல்.

**பெண்கல்வி ஆரம்பம்**

ஏககாலத்தில் பேர்சிவல் பாதிரியாரும் அவர்தம் பாரியாரும் அந்நாளில் மாவட்ட நீதிபதியாயிருந்த பிறைஸ் என்பவரின் நான்கு பெண் பிள்ளைகளுக்கும், ஒரு பறங்கிப் பெண்ணுக்கும் ஒரு தமிழ்ப் பிள்ளைக்கும் மிஷன் இல்லத்தில் கல்வி புகட்டினர். ஒரு 'விடுதிப் பெண் பாடசாலை' உருவானது. பேர்சிவலின் பாரியாரும் செல்வி ஆலடன்னும் பாடசாலையைத் தொடர்ந்து நடத்தினர். யாழ்ப்பாணத்தில் பெண்கல்வி நிலை கொள்ளத் தொடங்கியது. ஆயினும் கேள்விகளும் இடையூறுகளும் எழுந்தன.

1837 ம் ஆண்டில் 24 பெண்கள் அடங்கிய 'மேல்நிலை ஆங்கில மகளிர் பாடசாலை' ஒன்றும் 38 மகளிர் அடங்கிய 'கீழ்நிலை ஆங்கில மகளிர் பாடசாலை' ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டன. வேம்படி வளாகம், நான்கு பாடசாலைகளின் இருப்பிடமானது. இப்பாடசாலைகளுக்குப் பிள்ளைகள் வந்து போக பஸ் வண்டி ஒன்றையும் தமது செலவில் ஒழுங்கு செய்தார். பேர்சிவல் அது நட்டத்திலேயே இயங்கியது. பிற்பகல் பிள்ளைகள் பாடசாலைக்கு வராமல் நின்று விடக் கூடாதென்பதற்காக நண்பகல் உணவுக்கும் ஒழுங்கு செய்தார். வெவ்வேறு இடங்களில் ஆண்கள் பாடசாலைகளையும் பெண்கள் பாடசாலைகளையும் ஆரம்பித்தார். அவற்றில் சில ஆங்கில பாடசாலைகள், சில தமிழ்ப் பாடசாலைகள்.

யாழ்ப்பாணச் சமூகத்திற்குக் கல்வியும் ஆங்கிலக் கல்வியும் அளித்தார் பேர்சிவல். இதனால் அவர் பட்ட இடங்களோ பற்பல. கூடவே ஆறுமுகநாவலரின் தமிழ் அறிவும் கிட்டியது. பேர்சிவல் தமிழ் மொழியில் பாண்டித்தியம் பெற்றார். தமிழ் நூல்களை எழுதினார், மொழிபெயர்த்தார், தொகுத்தார். நாவலரின் உரை நடைத் திறமையுடன் கிறிஸ்து வேதப்புத்தகத்தின் ஐந்தாவது தமிழ்மொழி பெயர்ப்பு வேம்படி வளாகத்தில் நடைபெற்று தமிழ் மாநாட்டில் பெருமையுடன் அரங்கேறியது. ஆனாலும், சமயக் கல்வி மாத்திரம் போதுமானது என்பது சபைத்தலைமைப் பீடத்தின் கருத்தாயிருந்தது. கல்வியே முதன்மையானது என்பது பேர்சிவலின் கருத்து. இவ்விரண்டு கருத்து மோதல்களுக்குமத்தியில் வேம்படி வளாகம் பாடசாலைகள் வளர்ந்தன. 1841ம் ஆண்டில் மகளிர் பாடசாலையில் 200 மாணவிகள் கல்வி கற்றதாக வரலாறு கூறுகிறது. அன்று பேர்சிவலின் கல்விக் கொள்கையை எதிர்த்தது தலைமைப்பீடம். பின்னர் எழுதப்பட்ட திருச்சபை வரலாறுகளும் கல்லூரிகளின் வரலாறுகளும் பேர்சிவலின் தீர்க்க தரிசனத்தை வெகுவாகப் பாராட்டுகின்றன.

1851ல் பேர்சிவல் பதவி விலகிய ஐந்து வருடங்களின் பின் பதவியேற்ற ஜோன் உவால்டன் பாதிரியார் வளாகத்திலிருந்த பாரிய வேப்ப மரங்களை வேரோடு தறித்து வீழ்த்தினார். இதனால் 'வேம்படி' என்ற செல்லப்பெயர் தன் செல்வாக்கை இழந்தது. ஆண்டுகள் பல சென்றன. 1897 ம் ஆண்டில் மகளிர் உயர்நிலைப் பாடசாலை ஒன்றை ஆரம்பிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தபோது, அதற்கு 'வேம்படி மகளிர் உயர்நிலைப் பாடசாலை' எனப் பெயரிட்டு பாரம்பரியத்தை நிலை நாட்டினார்கள். 'வேம்படி' தன் நூற்றாண்டு வரலாற்றை எழுதிய போது அந்நூலுக்கு At the foot of th Vembu Tree எனப் பெயரிட்டதும் சிறப்பன்றோ! ★

- கா. மாணிக்கவாசகர் -
(நூலகர், யாழ் மத்திய கல்லூரி)

## வேம்படி - யாழின் கைவிளக்கே!

அகவை நூற்றைம்ப தாகிய பொழுதில்
அகிலமும் தண்ணொளி பரப்பும்
பகலொளி எறிக்கும் இரவியின் கதிர்கள்
பழுதிலா வலுத் திருவாக்கும்
தகவலி எழுந்து நவிசினில் அமர்த்தும்
தலைமைகள் தரணியிற் கொழிக்கும்
வளமெலாம் விளைக்கும் வைரமாய் எறிக்கும்
வேம்படி யாழின்கைவிளக்கே!

இலங்கையின் சிரசாய் இருக்கும் யாழ்ப்பாணம்
இலங்கிடும் வேம்படிக் கூடம்
கலங்கரை விளக்கம் காட்டிடும் வெளிச்சம்
கரங்களிற் குலுங்கிய கோலம்
சலங்கைகள் அலம்பும் சாதனை கோடி
சரித்திரம் படைத்திடும் பான்மை
வனப்புடன் மிளிரும் வைரமாய் எறிக்கும்
வேம்படி யாழின் கை விளக்கே.

இ. சிவானந்தன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நட்பின் பெருமை தெரியாத காந்திஜி!


காந்திஜி

நட்பின் பெருமை எனக்குத் தெரியாத ஒன்று.

இப்படி காந்தி அடிகள் கூறியிருக்கிறார் என்றால் அதிசயப்படாதீர்கள். அதுதான் உண்மை.

வெளிநாட்டுச்செய்தியாளர் ஒருவர் ஒருநாள் காந்தி அடிகளைச் சந்தித்துப் பேசிக்கொண்டு இருந்தார்.

ஒருகட்டத்தில் அவர் 'நட்புக்கு தங்களின் அனுபவ பூர்வமான இலக்கணத்தைக் கூறுங்கள். அதை மக்களிடம் பரவச் செய்கிறேன். அதனால் ஏராளமான மக்கள் அதிகமான நண்பர்களைப் பெறக்கூடிய ரகசியத்தை உணருவார்கள்'– என்று காந்தி அடிகளாரிடம் சொன்னார்.

காந்திஜி: 'நட்பைப் பற்றி எனக்குஒன்றுமே தெரியாதே'!

செய்தியாளர்: 'அப்படியானால் உங்களுக்கு நண்பர்களே கிடையாதா?'

காந்திஜி: 'எனக்கு விரோதிகளே எவரும் இல்லை. விரோதிகள் இருந்தால்தானே நட்பின் பெருமை விளங்கும். என்னை நான் நேசிப்பது போலவே, என் கண் முன் காணும் யாரையும், எதையும் நேசிக்கின்றேன். அதே போல் எல்லாரும் என்னை நேசிக்கிறார்கள்'– ★

## விழுந்தாலும் வெற்றி அவருக்கே!

1972-ஆம் ஆண்டு மூனிச் நகரில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் 10-ஆயிரம் மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் பின்லாந்தைச் சேர்ந்த வீரர் விசி கலந்துகொண்டு ஓடினார்.

400 மீட்டர் தூரம் ஓடிய போது அவர் 5 ஆவது ஆளாக வந்தார். அப்போது கால் தடுக்கி கீழே விழுந்தார். மீண்டும் எழுந்து ஓடினார்.

அடுத்து 320 மீட்டர் தூரம் ஓடியபோது 2ஆவது இடத்துக்கு வந்தார். கடைசியில் 10-ஆயிரம் மீட்டர் தூரத்தை யும் 27 நிமிடம் 38.4 வினாடிகளில் முதலாவதாக கடந்து வெற்றிபெற்றார். இது ஓர் உலகசாதனையாகும்.

# மக்கள் தொகையை கணக்கிடும் கம்பியூட்டர்

மக்கள் தொகையைக் கணக்கிடும் கம்பியூட்டரை பம்பாய் நிறுவனம் ஒன்று தயாரித்து உள்ளது.

இந்தியாவின் மக்கள் தொகை பற்றிய புள்ளி விவரத்தைக் கேட்டவுடன் இந்தக் கம்பியூட்டர் சொல்லிவிடுகிறது.

தற்போதைய ஜனத்தொகை மட்டுமல்ல, எதிர்காலத்தில், எந்த ஆண்டில் எவ்வளவு ஜனத்தொகை இருக்கும் என்பதையும் இந்தக் கம்பியூட்டர் கூறிவிடுகிறது.

நாட்டில் அன்றாடம் நடக்கும் பிறப்பு, இறப்பு விகிதத்தை வைத்து மக்கள் தொகையைக் கம்பியூட்டர் கணக்கிடுகிறது. ★

## உங்களுக்குத் தெரியுமா?

★ இங்கிலாந்து நாட்டில் ஒரு செருப்புக்கடையில் செருப்புவாங்கினாலும் அதற்கு ஓராண்டுக் காலம் உத்தரவாதம் தருகிறார்கள்.

★ நாம் ஒரே திரைப்படத்தைப் பல தடவைகள் பார்க்கத் தவறுவதில்லை. அமெரிக்கர்களோ ஒரு படத்தை ஒரு தடவைக்கு மேல் பார்க்க மாட்டார்கள்.

★ நாத்திகரே இல்லாத நாடு இந்தோனேஷியா.

★ ராஜஸ்தானில் உள்ள ஒரு கிணற்றின் ஆழம் 5280 அடி(ஏறக்குறைய ஒரு மைல்)

★ ஜேர்மன் மொழிக்கு மொத்தம் 30 எழுத்துக்கள்.

★ இங்கிலாந்தின் மகாராணியாக 9 தினங்கள் இருந்தவர் ஜென்கிரே என்ற பெண். ★

## நீர்மூழ்கியைக் கண்டுபிடிக்கும் கப்பல்!

எதிரியின் நீர்மூழ்கிக் கப்பல்கள் நிற்கும் இடத்தை அடையாளம் காட்டும் நவீன கப்பலையும் நீர்மூழ்கி எதிர்ப்பு போர்மையம் — ஒன்றையும் ரூ. 150 கோடி செலவில் கட்ட ஜப்பான் திட்டமிட்டுள்ளது.

இந்த நவீன கப்பல் ஜப்பான் கடற்கரையில் இருந்து 1000 மைல் தூரத்துக்குள் நிற்கும் நீர் மூழ்கி கப்பல்களை காட்டிக் கொடுத்துவிடும்.

## பூமியின் குளிர்ச்சி அதிகரிப்பு!

உலகில் நாளுக்கு நாள் வெப்பம் அதிகரித்துவரும் அதேநேரத்தில் பூமியின் சில பகுதிகளில் குளிர்ச்சியும் அதிகரித்து வருகிறது. கடந்த 10 ஆண்டுகளில் சென்ற ஆண்டுதான் உலகின் வெப்பம் இதுவரை இல்லாத அளவு அதிகமாகக் காணப்பட்டது. ஆனால் இங்கிலாந்து உள்பட ஐரோப்பாவின் பெரும் பகுதிகளில் கடந்த 20 ஆண்டுகளில் 0.25 செல்ஷியஸ் குளிர்ச்சி ஏற்பட்டிருப்பதாக 'நியூ சயின்டிஸ்ட்' என்ற பத்திரிகை தெரிவிக்கிறது.

## அப்படியா!

★ கிரிக்கெட் மட்டை' வில்லோமரம்' என்ற மரத்தில் இருந்து தயாரிக்கப்படுகிறது.

★ Diet என்பது ஜப்பான் நாடாளுமன்றத்தின் பெயர்.

★ பறவைகளில் மிக மிக வேகமாகப் பறக்கும் பறவையின் பெயர் சுவிப்ற் (Swift) மணிக்கு 180 கிலோ மீட்டர் வேகத்தில் இப்பறவை பறப்பதாக சோவியத் யூனியனில் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

★ ஆங்கிலம் தெரியாத அரசரும் இங்கிலாந்தை ஆண்டிருக்கிறார். அவர் பெயர் முதலாம் ஜோர்ஜ் மன்னர்.

★ பிஜித்தீவுகள் கூட்டத்தில் 322 தீவுகள் உள்ளன.

★ நாயகரா நீர் வீழ்ச்சியில் ஒரு விநாடிக்குக் கொட்டும் நீரின் அளவு 260 லட்சம் லிட்டர். ★

# பண்டாரியின் 'ரகசியம்'

ரோமேஷ் பண்டாரி, தமிழர்கள் மறக்கமுடியாத ஒரு பெயர்.

இந்திய வெளியுறவுச் செயலாளராக இருந்தவர். இப்போது இந்திரா காங்கிரஸ் கட்சியின் வெளியுறவுப் பிரிவுக்குத் தலைவராகஇருப்பவர்.

ஆட்சியில் இருந்தபோது எதிர்ப்பைச் சமாளித்த அவரினால் இப்போது கட்சிக்குள் இருந்துவரும் எதிர்ப்பையும் சமாளிக்கவேண்டியிருக்கிறது.

கட்சிக்குள் அவரின் வெளியுறவு சம்பந்தப்பட்ட ஆலோசனைகள் பொதுச்செயலாளரான குலாம் நபி ஆஸாத்தின் மேசைவரை கூடப் போவதில்லை.

இந்திராகாங்கிரஸ்கட்சியின் இணைச்செயலாளர்களில் ஒருவர் கே. ஜே. ஜெயின். பண்டாரியை கடுமையாக எதிர்ப்பவர்.

சென்ற மே மாதத்தில் 'ரகசியம்' என்றுபோட்டு, காங்கிரஸ் கட்சித் தலைவர் ராஜீவ் காந்திக்கு ஒரு பைலை அனுப்பினார் பண்டாரி.

அந்தப் பைலில், 1988 ஜூலை 29 ஆம் திகதியன்று இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஓராண்டு நிறைவடைகிறது. அந்த நாளில் ஒப்பந்தம் கையெழுத்தாகி ஓராண்டு நிறைவு பெறுவதைக்கொண்டாட விழா எடுக்கலாமே! அது சம்பந்தமான ஒரிரு கூட்டங்களுக்கு அந்நாளில் தலைநகரில் ஏற்பாடு செய்யலாமே' என்று குறிப்பிட்டிருந்தார் பண்டாரி.

வழக்கம்போலவே இந்த பைலும் ஜே. கே. ஜெயினின் குறிப்போடு திரும்பிவந்துவிட்டது. அதை ராஜீவ் பார்த்தாரா இல்லையா என்பதே பண்டாரிக்குத் தெரியவில்லை. அந்தக் குறிப்பில் ஜே. கே. ஜெயின் எழுதியிருந்தார்: 'கூடிய விரைவில் பாதுகாப்பு அமைச்சர் பந்த் இலங்கை செல்ல இருக்கிறார். அவர் அங்குபோய் வந்த பிறகு, நிலைமையில் ஏதாவது மாறுதல் தென்படுகிறதா என்பதைப் பார்த்துக்கொண்டு, அதன்பிறகு இதைப் பற்றி எல்லாம் யோசிக்கலாம்— ஜெயினின் குறிப்பு இது.

'இ-இ ஒப்பந்தம் முழுமையாக அமுலாகக்கூட இல்லை. அதற்குள் ஆண்டுவிழா வேறு? —இப்படி ஆளுங் கட்சியைச் சேர்ந்த சிலரே கோபமாய்க் கேட்கிறார்கள். ★

## விருதை உதறித் தள்ளிய சிறந்த நடிகை!

ஒரிசா திரைப்பட உலகின் முன்னணி நடிகை மாஸ்வதா ராய.

'சுபேரி' என்ற படத்தில் நடித்ததற்காக 1984ஆம் ஆண்டின் சிறந்த நடிகையாக மாநிலஅரசு இவரைத்தேர்ந்து எடுத்தது. இதுபற்றிய அறிவிப்பு கடந்த வாரம்தான் வெளியிடப்பட்டது.

இவ்வளவு தாமதமாக அறிவித்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து சிறந்த நடிகைக்கான விருதை பெற மறுத்துவிட்டார் மாஸ்வதா ராய். ★

## அரபு நாடுகளில் குடிநீர் பஞ்சம்!

இன்று உலகம் முழுவதற்கும் அரபு நாடுகள்தான் பெட்ரோல் சப்ளை செய்து கொண்டு இருக்கின்றன.

ஆனால் இந்த அரபு நாடுகள் அடுத்த 10 ஆண்டுகளில் குடிநீர் இன்றி அவதிப்படப் போவதாக ஐக்கிய நாடுகள் சபையின் நீர் ஆராய்ச்சி நிபுணராகிய எல். மஜீத் கூறுகிறார்.

இந்த நாடுகளின் நிலத்தடி நீர் கடல் நீரை வேகமாக உறிஞ்சி வருகிறதாம். இதனால் அடுத்த 10 ஆண்டுகளில் நிலத்தடி நீர் குடிக்க முடியாத அளவுக்கு உப்பு நீராகப் போய்விடும் என்று அந்த நிபுணர் சொல்கிறார். ★

## நெட்டையர் சங்கம்

நெட்டையர்களான ஆண்களையும், பெண்களையும் இணைக்கும் சங்கம் ஒன்று சோவியத் யூனியனில் உள்ளது.

லெனின் கிராடில் இயங்கும் சங்கத்துக்கு வலரிமாத்வியேவ் தலைவர். 6 அடி உயரமான இவர் ஒரு நாடக நடிகர்.



நட்புக்காகத் தொடங்கப்பட்ட இச்சங்கத்தின் உறுப்பினர்களிடையே காதல் மலர்ந்து கல்யாணத்தில் முடிவதும் உண்டு.

அன்றாடவாழ்வில் நெட்டையர்களுக்குப் பல தொல்லைகள் உண்டு:

உதாரணமாக காலணி சரியான அளவில் கிடைப்பது கஷ்டம்; பஸ்களில் பயணம் செய்வது நெட்டையர்களுக்கு சித்திரவதை போன்றுள்ளது.

இப்படிச் சங்கத் தலைவர் குறைப்படுகின்றார்.

படத்தில் காணப்படுபவர் உலகின் உயரமான மனிதர்களில் ஒருவர்.

இவரின் பெயர் மார்ட்டின் ஹூட். பிரிட்டனில் ஷ்ரூஸ்பரி பகுதி வாசி.

இவரின் உயரம் ஏழு அடி இரண்டு அங்குலம். முன்னால் நிற்பவர் இவரின் இரண்டு வயது மகன் போல்! ★

## புதிதாக முளைத்த 3 ஆயிரம் கல்லறைகள்!

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலை ஒட்டி தப்தா என்ற மலைக்குன்று உள்ளது. இதன் உச்சியிலும் பக்கவாட்டிலும் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கல்லறைகள் உள்ளன. இவை 1980 – ஆம் ஆண்டு ரஷ்ய துருப்புகள் ஆப்கானிஸ்தானில் நுழைந்த பிறகு எழுந்தவை ஆகும். அனைத்து கல்லறைகளிலும் ஆப்கானிஸ்தான் அரசு துருப்புகளின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்டு இருக்கின்றன.

இந்தக் கல்லறைகளில் சில பளிங்குக் கற்களால் மணிமண்டபம் போல அமைக்கப்பட்டு உள்ளன. சிலவற்றில் இறந்த வீரர்களின் புகைப்படமும் பதிக்கப்பட்டு இருக்கிறது. பல கல்லறைகள் வெறும் மணல்திட்டாக உள்ளன. இவற்றை அடையாளம் கண்டுபிடிக்க உறவினர்கள் அலையும் காட்சியை அங்கு தினமும் காணமுடிகிறது. ★

## கொலம்பஸ் உளவாளியாம்!

கிறிஸ்தொபர் கொலம்பஸ் உளவாளி என்று புதிய தகவல் ஒன்று வெளியாகி உள்ளது.

கொலம்பஸ் தான் முதன் முதலில் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார்.

அவர் உண்மையில் இத்தாலியைச் சேர்ந்த மாலுமி அல்லர்.

அவர் போர்த்துக்கேய நாட்டைச் சேர்ந்த உளவாளி.

இரண்டாவது ஜாவோ மன்னருக்காக அவர் உளவு பார்த்தாராம்.

அசஸ்டோ மஸ்கனஸ் என்ற ஆராய்ச்சியாளர் இப்படி தெரிவித்திருக்கிறார்.

கடந்த பதினன்கு ஆண்டு கால ஆராய்ச்சியின் பின்னர் இந்த கண்டுபிடிப்பை அவர் வெளியிட்டார். ●

## கிரெம்ளின் மாளிகையில் தங்க புதையல்!

மாஸ்கோவில் உள்ள கிரெம்ளின் சுவர் அருகே பழங்கால புதையல் ஒன்று தோண்டி எடுக்கப்பட்டு உள்ளது.

அதில் மோதிரங்கள், நெக்லசுகள் உள்பட ஏராளமான ஆபரணங்கள் இருந்தன. அவற்றின் மதிப்பை கணக்கிட முடியவில்லை.

இந்த புதையல் 750 ஆண்டுகளுக்கு முந்தியது ஆகும். 1237 ம் ஆண்டு ரஷியா மீது மங்கோலியர்கள் படையெடுத்த போது இந்த நகைகள் புதைத்து வைக்கப்பட்டு இருக்கலாம் என்று புராதனப் பொருள் நிபுணர்கள் கூறுகிறார்கள். ★

## தேடி வந்த செல்வம்!

டோக்கியோவில் ஒருவரது வீட்டு தபால் பெட்டியில் கடிதங்களுக்கு இடையே 2 காகித பார்சல்களும் கிடந்தன. அவற்றை எடுத்து பிரித்து பார்த்த போது ரூ. 10 லட்சம் ரொக்கப்பணம் இருந்தது. அந்த பார்சல்களை போட்டவர் யார் என்று தெரியவில்லை.

வீட்டின் சொந்தக்காரரர் அந்தப் பணத்தை எடுத்து போலீசிடம் ஒப்படைத்தார். 6 மாதம் வரை அந்த பணத்துக்கு யாரும் உரிமை கோரி வராவிட்டால் அதை அவரையே வைத்துக் கொள்ளும்படி போலீசார் கூறி உள்ளனர். ★

## அழகியிடம் தோற்றவீரன்...

ரோமாபுரியின் ஹெர்க்குலஸ் என்றழைக்கப்படும் அன்டனிக்கும், எகிப்திய பேரழகி கிளியோபாட்ராவுக்கும் ஒரு சர்ச்சை ஒன்று ஏற்பட்டது.

பன்னிரெண்டு பேர் மட்டுமே கலந்து கொள்ளக்கூடிய ஒரு சிறிய விருந்தை அதிக பட்சம் எவ்வளவு செலவில் நடத்தலாம் என்பதே அது.

என்னதான் ஆடம்பரமாக நடத்தினாலும் இருபத்தைந்தாயிரம் பவுண்களுக்கு மேல் செலவு ஆகாது என்பது அன்டனியின் வாதம்.

அதே சிறிய விருந்தை ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் பவுண்கள் செலவில் நடத்திக் காட்டுவதாக கிளியோபாட்ராவின் சவால்.

சவால் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

விருந்திற்காக பிரிட்டனிலிருந்து முத்து மீன்கள் வரவழைக்கப்பட்டன. சிசிலி நாட்டிருந்து வானம் பாடிப் பறவைகளின் நாக்குகள் கொண்டு வரப்பட்டன.

விருந்து ஆரம்பமானது. செலவு ஐம்பதினாயிரம் பவுண்கள் மட்டுமே ஆகியிருந்தது. அன்டனியின் முகத்தில் வெற்றிக் களை புகுந்தது.

வையினிலிருந்து தயாரிக்கப் பட்ட வினிகிரி எனும் மதுவைக் கொண்டுவர ஆணை பிறப்பித்தாள் அரசி கிளியோபாட்ரா.

மது வந்தது...

என்ன செய்யப்போகிறாள் என்று ஆவலுடன் காத்திருந்தனர் அனைவரும்.

தனது காதுகளில் ஒளியை உமிழ்ந்து ஊஞ்சலாடிக்கொண்டிருந்த முத்துக்கள் இரண்டிலிருந்து ஒன்றைக்கழற்றி, மது நிரம்பியிருந்த கிண்ணத்தில் போட்டு ஒரு ரோஜா மலரின் நீண்ட காம்பினால் மெல்லக் கலக்கினாள். பின்பு அடுத்த முத்தையும் கழற்றப் போனாள். அன்டனி அவசரமாகத் தடுத்தார். ஏனென்றால்... ஒரு முத்தின் விலையே ஒரு லட்சம் பவுண் ஆயிற்றே!

கிளியோபாட்ரா அன்டனியை வென்றாள்... பந்தயத்தில் மட்டும்தானா? ★

## 'இயந்திர மனிதன்' நம்மையும் நெருங்குகிறான்!

ரோபோ இயந்திர மனிதன் நமது அண்டை நாட்டுக்கும் வந்து விட்டான்.

இந்திய விஞ்ஞானிகளும் இயந்திர மனிதனைத் தயாரித்து விட்டார்கள்.

அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகிய நாடுகள் தான் இயந்திர மனிதனைத் தயாரித்து பல பணிகளிலும் ஈடுபடுத்தி வருகின்றன.

இந்தியாவும் இயந்திர மனிதனைத் தயாரித்து அணுசக்தி நிலையங்களில் பணியாற்ற விட்டிருக்கிறது.

அணுசக்தி நிலையங்களில் உள்ள குழாய்களில் ஏற்படும் கசிவுகளைத் தடுக்கும் பணியில் இயந்திர மனிதன் பயன்படுத்தப்படுகிறான். ★

## பெண் உயிரை குடித்த டெலிபோன்!

நியூயார்க்கைச் சேர்ந்த பெண் லாரா (வயது 22) எட்டு மாத கர்ப்பிணியான இவர் தனது சிநேகிதியுடன் டெலிபோனில் பேசிக் கொண்டு இருந்தார்.

அப்போது அவரை உயர் அழுத்த மின்சாரம் தாக்கியது. இதில் லாரா அந்த இடத்திலேயே உடல் கருகிச் செத்தார்.

டெலிபோன் கம்பி மீது மின்னல் தாக்கியதால் 50 ஆயிரம் ஓல்ட் மின்சாரம் உருவாகி அது லாராவை சாகடித்து விட்டதாக டாக்டர்கள் தெரிவித்தனர். ★

## கருவில் குழந்தையை தாக்கும் நோய்!

கருவில் இருக்கும் குழந்தைகளுக்கு 'ஹோமோபிலியா' என்ற ரத்த நோய் வருவதாக டாக்டர்கள் கண்டு பிடித்து இருக்கிறார்கள்.

இந்த நோய், ரத்தம் உறைவதைத் தடுக்கிறது. உடலில் சிறு காயம்பட்டுவிட்டாலும் ரத்தம் உறையாமல் தொடர்ந்து வெளியேறி மரணத்தை ஏற்படுத்திவிடும்.

இந்தநோய் இருக்கிறதா என்பதை கருத்தரித்த8வாரத்துக்குப்பிறகு பரிசோதனை மூலம் கண்டுபிடிக்கமுடியும். நோய் இருப்பது [illegible] தால் அந்தக் கருவை [illegible] விடலாம். ★

## நான்கு, நான்கு, நான்கு, நான்கு

ஜேர்மனியை ஆண்ட நான்காம் சார்ள்ஸ் (கி. பி. 1316 – 1387) மன்னருக்கு 'நான்கு' என்ற எண்ணிக்கையில் அபார விருப்பம்.

தினமும் அவர் நாலு தடவை சாப்பிடுவார். அதில் நான்கு வகை உணவுப் பொருள்கள் இருக்கும். நான்கு விதமான மது வகைகள் அருந்துவார்.

தினமும் நான்கு மாளிகைகளில் தங்குவார். ஒவ்வொன்றிலும் நான்கு அறைகள். நான்கு சரவிளக்குகள். நான்கு வாயில்கள் உண்டு.

தினமும் நான்கு வண்ணங்களில் ஆடை அணிவார். அவரின் மகுடத்தில் நான்கு முகப்புக்கள்.

அவர் தனது ஆட்சிக்காலத்தில் ஜேர்மன் மாநிலங்களாக பிரித்து வைத்தார். சேனைகளையும் நான்கு பிரிவுகளாக்கினார். ஆட்சிப் பொறுப்புக்கு நான்கு கோமகன், நான்கு ஆளுநர், நான்கு கவர்னர் ஜெனரல்கள் ஆகியோரை நியமித்தார்.

மரணப்படுக்கையில் அந்த நான்காம் சார்ள்ஸ் மன்னருக்கு சிகிச்சை அளிக்க நான்கு டாக்டர்கள் நியமிக்கப்பட்டனர்.

கடைசியில் நான்கு மணி அடித்து நான்கு நிமிடங்களானதும் மன்னர் உயிர்பிரிந்தது.

## பஞ்சாமிர்தம் பலரச அமிர்தம்

# வி.பி.சிங்குடன் போட்டியிட்ட வீரப்பக்கவுண்டர்

அலஹபாத் இடைத் தேர்தல் முடிந்துவிட்டது.

விஸ்வநாத் பிரதாப் சிங் வெற்றிபெற்றுவிட்டார்.

வீரப்பக்கவுண்டரும் வெற்றிபெற்றுவிட்டார்.

அதெப்படி இரண்டுபேரும் வெற்றியிட்டுவது என்று கேட்கிறீர்கள் அல்லவா?

மோதிரக்கையால் குட்டுப் படவேண்டும்என்ற கொள்கை உடையவர் வீரப்பக்கவுண்டர். அந்தக் கொள்கையை மீண்டும் நிலைநாட்டுவதில் அவர் வெற்றி பெற்றுவிட்டார் என்பது தான் இங்கு குறிப்பிடப்படுகின்றது.

எம். ஜி. ஆர்., கருணாநிதி ஆகியோருடனும் இவர் போட்டியிட்டார்.

அலஹபாத்தில் போட்டியிட்ட 67 பேரில் விரப்பக்கவுண்டரும் ஒருவர்.

கட்டுப்பணத்தை இழந்த 65 பேரில் அவரும் ஒருவர்.

இந்தியாவில் தேர்தல் [illegible] மாவட்டம் அச்சிறு[illegible]பாக்கம் அருகே வெங்கடேசபுரம் கிராமத்தில் குடும்பத்துடன் வசித்துவருகிறார்.

வீரப்பக்கவுண்டர் சொன்னார்:

1977 வரை நான் இந்திரா காங்கிரஸ் பிரமுகர். காங்கிரஸ் மாநிலக்கட்சிகளுடன் கூட்டணி வைக்கத் தொடங்கியது எனக்குப் பிடிக்கவில்லை. விலகிவிட்டேன்.

★ இப்படி தேர்தலில் நின்று தோற்பதில் என்ன லாபம்?


வி. பி. சிங்

பதில்: இருக்கிறது! பெரிய தலைவர்களை எதிர்த்துப் போட்டியிடும்போது சுயேச்சை வேட்பாளர்தானே என்று அலட்சியப்படுத்தாமல் அழைத்துப் பேசுகிறார்கள். அந்த அறிமுகம் நாளடைவில் நல்ல நட்பாகிவிடுகிறது.

ரேபேலி தொகுதியில் இந்திராகாந்தியை எதிர்த்துப் போட்டியிட்டேன். குவாலியூர் மகாராணி விஜயராணி சிந்தியாவின் நட்புக்கிடைத்தது. அவர் ஜீப்களைத் தந்து பிரசாரத்துக்கு உதவினார். இந்திராகாந்தி கூட என்னை அழைத்துப்பேசி எனக்குள்ள செல்வாக்குப்பற்றிக் கேட்டறிந்தார்.

எனது எண்ணம் முக்கிய தலைவர்களை எதிர்த்துப் போட்டியிடவேண்டும். அதன் மூலம் எல்லோரின் கவனத்தையும் ஈர்க்கவேண்டும்.

இப்போதுள்ள சூழ்நிலையில் நான் போட்டியிடாவிட்டால் 'வீரப்பக் கவுண்டர் எங்கே?' என்று மக்கள் கேட்கத் தொடங்கிவிடுவர்.

வி. பி. சிங் என்னை அழைத்துப்பேசினார். இந்திரா காங்கிரஸின் வாக்குகளைப் பிரிக்க வேண்டும். அதனால் உங்களுக்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார். எனக்குப் பிரசாரத்துக்கு இரண்டு ஜீப்வேண்டும் என்று சொன்னேன்; உதவினார்.

கேள்வி: இப்படி தேர்தலில் போட்டியிடுவதற்கு உங்கள் வீட்டில் ஆதரவு இருக்கிறதா?

பதில்: 'இதை நீங்கள் என் மனைவியிடம் கேளுங்கள்'

மனைவி ராதா சொன்னார்: என்னங்க பண்றது? எவ்வளவோ சொல்லிப் பார்த்துவிட்டோம். இது என் கௌரவப் பிரச்சினை என்கிறார். சின்னக்குழந்தையா இருந்தா கட்டிப்போட்டுடலாம். போட்டி இடுவதையே இலட்சியமாக்கிஉள்ள அவரைஎன்ன பண்றது?

இப்படி ராதா சொன்னார்? ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஆறாம் ஆண்டு (5 ஆம் வகுப்பு) புலமைப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு உதவும் விதத்தில்—

தமிழ், கணிதம் ஆகிய இரண்டு பாடங்களுக்குரிய முன்மாதிரிப் பயிற்சி வினாக்கள் வாரந்தோறும் சஞ்சீவியில் வெளியிடப்படும்.

வினாக்களுக்குரிய பதில்கள் உதயனில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் பிரசுரமாகும்.

தயாரித்துத் தருபவர்:

**நயினை சி. சோமேஸ்வரம்பிள்ளை**
(இந்து ஆரம்ப பாடசாலை, கொக்குவில்)

தமிழ் வினாத்தாள் இல: 1

## தமிழ்மொழி

(1) பின்வரும் சொற் கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் சரியாக எழுதப்பட்ட சொல்லைத் தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.
 I) வில்தொழில், விற்றொழில், விற்தொழில், வில்த்தொழில்.
 II) பட்சனம், பச்சனம், பட்சணம், பட்ச்சணம்.
 III) பதினோராம் பாடம், பதினொராம் பாடம், பதினொன்றும் பாடம், பதின்னோராம் பாடம்.
 Iv) திருவிளச்சீட்டு, திருவுளச்சீட்டு, திருவிழவுச்சீட்டு திருவிழாச்சீட்டு.
 v) தேச்சி, தேற்சி, தேர்ச்சி, தேய்ச்சி.

(2) பின்வரும் சொற்கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒருசொல் ஏனைய சொற்களிலிருந்து வேறுபட்டது. அதைத் தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.
 I) மனம், அகம், உளம், முகம், சித்தம்.
 II) எண்ணல், வடித்தல், எடுத்தல், முகத்தல், நீட்டல்.
 III) அரி, மரி, நரி, கரி, பரி.
 Iv) மூ வுரை, சிறப்புரை, அணிந்துரை, பதிப்புரை.
 v) தாமரை, முல்லை, மல்லிகை, குரோட்டன், அலரி.

(3) பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிந்து அதன் கீழ்க் கோடிடு.
 I) மாம்பழத்தின் உள்ளீடு சதை எனப்படுவது போல நெல்லின் உள்ளீடு (பருப்பு, சோத்தி, சோறு, சுளை) எனப்படும்.
 II) 'எண்ணித்துணிக கருமம்' என்பதன்எழுவாய் (துணிக, நீ, கருமம், எண்ணி)
 III) நெற்பயிரோடு (கழை, களை, கலை)ப் பூண்டுகளும் வளரும்.
 Iv) ஓட்டப் பந்தயத்திலே சிராளன் (முதலாக, முதலாமாளாக, ஒன்றுமாளாக, முதல்வனாக) வந்தான்.
 v) 'மதிமுகம்' என்பதில், மதி (உவமேயம், உவமானம், உருவகம்)

(4) கீழே மூன்று வாக்கியங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றைக் கருத்துத் தொடர்புடைய ஒரு வாக்கியமாக இணைக்க வேண்டும். அவை இங்கு நான்கு வகையாக இணைத்துக் காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் மிகவும் பொருத்தமானதுஎதுஎனத் தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.

(அ) I) திருப்பரங்குன்றம் மிகுந்த வளம் பொருந்தியது.
 II) அங்குள்ள மரங்களிலெல்லாம் நறை மலர்கள் நிறைந்திருக்கும்.
 III) அம்மலர்களிலிருந்து இடையறாது தேன் ஒழுகும்.
 1) திருப்பரங்குன்றம் மிகுந்த வளம் பொருந்தியவாதலினால் அங்குள்ள மரங்களின் நறை மலர்களிலிருந்து தேன் இடையறாது ஒழுகும்.
 2) மிகுந்த வளம் பொருந்திய திருப்பரங்குன்றத்திலுள்ள மரங்களில் நிறைந்திருக்கும் நறை மலர்களிலிருந்து இடையறாது தேன் ஒழுகும்,
 3) மிகுந்த வளம் பொருந்திய திருப்பரங்குன்றத்தின் மரங்களின் நறை மலர்களிலிருந்து இடையறாது தேன் ஒழுகும்.
 4) மிகுந்த வளம் பொருந்திய திருப்பரங்குன்றத்து நறை மலர்கள் நிறைந்த மரங்களிலிருந்து இடையறாது தேன் ஒழுகும்,

(ஆ) பின்வரும் ஐந்து வாக்கியங்களும் ஒழுங்கின்றியுள்ளன. அவற்றை ஒழுங்குபடுத்தி, அவற்றுக்கான இலக்க ஒழுங்கைக் கீழேயுள்ள அடைப்புக்குறிக்குள் இடுக.
 1) பணம், பொருள், சரீர உதவி முதலியன நிறைவாகக் கிடைத்தன.
 2) அன்றைய தினம் வீசிய கடும்புயலினாலும், பேய்மழையாலும் மண்டபம் சின்னாபின்னமாகியது.
 3) முன்னையதிலும் பார்க்க இன்று மண்டபம் பன்மடங்கு பொலிவுடன் காட்சியளிக்கின்றது.
 4) இறங்கு துறையில் காட்சியளித்த இளைப்பாறு மண்டபம் எத்தனையோ பிரயாணிகளுக்கு ஆறுதல் அளித்தது.
 5) பிரயாணிகள் படும் அவலத்தைக் கண்ட கிராம முற்போக்கிளைஞர்கள் அதனைத் திருத்தியமைக்க முற்பட்டு நிதி சேர்த்தனர். (........................)

(5) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

முன்னொரு காலத்தில் பொருட்செல்வமும், செவிச்செல்வமும் படைத்த பிரபுசிகாமணி என்னும் ஒருவர் இருந்தார். அவருள்ளம் அனவரதமும் அழகுக் கலைகளையும், அறிவுக் கலைகளையும் தழுவி வளர்ந்து பண்டைய தமிழ் மண்ணிலே தமிழர் வாழ்விலே பூத்துச் செழித்த இலக்கிய நறுமலர்கள். அவரது வாழ்வினை நீங்காது சூழ்ந்து பரிமளித்துக் கொண்டிருந்தன. அவரது அறிவும் ஆற்றலும் உத்தமக் கலைஞர்கள், கவிஞர்கள் ஆகிய பல திறப்பட்ட எல்லோரையும் வெகுவாகக் கவர்ந்தன. சில ஆண்டுகளாக பிரபு இனிய கவிதைகளைக் கேட்டு இன்புறவேண்டுமென்னும் திராவேட்கை கொண்டார். ஆனால் கவிதை பெரும் பொருளாலும் பெறப்படுவதன்று என்பதை அவர் நன்கறிவார். நற்கவிதைக்கு அவருள்ளத்தில் ஒரு புதிய எண்ணம் பிறந்தது. அதற்கிணங்க அவர் தமது ஆத்தான மண்டபத்திலே ஒரு பொற்கிளி தூக்கி அதனைத் தம் உள்ளத்திற்கு இன்பமளிக்கும் ஓர் அருங்கவி பாடும் புலவர்களுக்கு அளிப்பதாக நாடெங்கும் அறிவித்தார்.

(அ) பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
 1) அனவரதம் என்றால் (சிலநாள், பலநாள், ஒரொரு நாள், எப்பொழுதும்) எனப் பொருள்படும்.
 2) பூத்தல் என்பதன் எதிர்ப்பதம் (காய்தல், அரும்புதல், வாடுதல், விழுதல்)
 3) அருங்கவி என்பது (அருமை + கவி, அருங் + கவி, அரும்+கவி, அரு+கவி) எனப் பிரிக்கப்படும்.
 4) சிகாமணி பொற்கிளியைத் தூக்கியிருந்த இடமானது
 i) அவருள்ளத்தில் ii) பூஞ்சோலையில் iii) ஆத்தான மண்டபத்தில் iv) தமிழ் மண்ணில்.
 5) பொற்கிளி என்பது (பொன்னாலானகிளி, பொன்னாலான சிலை, பொன்னாபரணத்திலொன்று, பொருள் முடிப்பு)

ஆ) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (√) எனவும், பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குள் குறிக்க.
 i) பிரபுசிகாமணி இனிய கட்டுரைகளை வாசித்தறிய விரும்பினார் (......)
 ii) இலக்கிய நறுமலர்கள் பிரபுவின் வாழ்வினைச் சூழ்ந்து மணம் பரப்பின (......)
 iii) கவிதை பெரும்பொருளால் பெறப்படுவதில்லை என்பது அவர் எண்ணம் (......)
 iv) இவரின் அழகுத் தோற்றம் ஏனைய புலவர்களைக் கவர்ந்தது (......)

இ) சுருக்கமான விடை தருக.
 I) கவிஞரின் திராவேட்கை யாது?
 II) எல்லோரும் சிகாமணியை விரும்பியதற்குக் காரணம் யாது?

(6) பின்வரும் செய்யுளைப் படித்து, அதன் கீழுள்ள வினாக்களுக்கான விடையினைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

மேலை நாட்டில் எங்கோ — மூண்ட
 வெந்தழல் இன்றெழுந்து
ஞாலம் முழுவதுமே — பற்றி
 நாவிட் டெரியுதையோ!
நாலு திசையும் சண்டை — கடலின்
 நடுவில் எங்கும் சண்டை
மூலபலச் சண்டை — இதுதான்
 முடியும் நாள் எதுவோ?
விண்ணிடி போல விழும் — குண்டுகள்
 வீழ்ந்து பொசுக்கிடாமல்
மண்ணுக்குள் நண்டுகள் போல் — மனிதர்
 மறைவ தெளிதோ? ஐயா!

(அ) இப்பாடலுக்குப் பொருத்தமான தலையங்கம்,
 I) சண்டையும் சமாதானமும் II) யுத்தக் கொடுமை
 III) ஓர் ஏழையின் பிரார்த்தனை IV) குண்டுச்சத்தங்கள்
(ஆ) சண்டையின் பிறப்பிடம் பற்றிய புலவரின் கருத்து,
 I) கீழ் நாட்டில் ஆரம்பித்தது II) கடல் நடுவில்
 III) மேலை நாட்டில் IV) நாலு திசைகளிலும்
(இ) இப்பாடல் அமைந்துள்ள விதம்,
 i) ஓர் ஏழை பிரார்த்தனை செய்வதாக
 ii) மக்களுக்கு யுத்தத்தை விளக்குவதாக
 iii) சண்டைக்கு ஆயத்தமாகுமாறு
 iv) குண்டுகளின் முழக்கத்தைத் தெரிவிப்பதாக.
(ஈ) வெந்தழல் பிரிக்கப்படும் விதம் (வெம்மை + தழல், வெந்+தழல், வெந்த+தழல், வெண்மை+தழல்)
(உ) ஞாலம் என்பதன் சமகருத்துச் சொல் (கடல், குண்டு, பூமி, திசை)
(ஊ) குண்டுகள் தாக்காமல் இருப்பதற்கு எம்முறையைக் கையாள புலவர் வேண்டுகின்றார்?
 i) மண்ணுக்குள் மறைதல் ii) கடலுக்குள் விழுதல்
 iii) காதை மூடல் iv) இறைவனைப் பிரார்த்தித்தல்
(எ) சண்டை என்பதன் எதிர்ப்பதம் (சச்சரவு, சோரம், சமாதானம், போர்)

(7) பின்வருவனவற்றுள் ஒன்றினைத் தெரிந்து 15 வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.
 i) செல்வம் வாழ்வுக்கு அவசியம்
 ii) மாலை வேளையில் கடற்கரையில் சிறுவர் சிறுமியர்
 iii) உனது நண்பனின் குணவியல்புகள்
 iv) 'மற்றவர்களுக்குக் கஷ்டம் கொடுக்க நினைப்பவர் தாமே கஷ்டமடைவர்' இதனை விளக்க ஒரு சிறுகதை
 v) தொலைக்காட்சியால் ஏற்படும் நன்மை தீமைகள்.

# பாலூட்டும் தாய்மாருக்கு புற்றுநோய் வருவது குறைவு

டாக்டரின் வீட்டில் ஒரே கலகலப்பாக இருக்கிறது. ஒருவேளை டாக்டர் லீவில் வந்திருக்கிறாவோ... மெல்ல எட்டிப்பார்க்கிறேன்.

நான் நினைத்ததுபோலவே டாக்டர் தையல் மெஷினில் எதையோ தைத்துக்கொண்டு இருந்தார்.

'ஹலோ... டாக்டர் உங்களுக்குத் தைக்கவும் தெரியுமா...?' என் குரல் கேட்டதும்.

என்ன அப்படிக் கேட்கிறீர்கள்... டாக்டர் என்றால் தைக்கக்கூடாதோ... ஒவ்வொரு பெண்ணுக்கும் கட்டாயம் தையல் தெரிந்திருக்க வேணும்...'

இவ்வேளையில் டாக்டரின் ஒன்றரைவயது மதிக்கத்தக்க குழந்தை மெதுவாக நடந்து வந்து டாக்டரின் மடியில் ஏறிக்கொண்டது. கையில் பால்போத்தல் இருந்தது.

டாக்டர்... உங்கள் குழந்தைக்குத் தாய்ப்பால் தான் கொடுத்தீர்களா...?

ஆமாம் ஒரு வயதுவரைக்கும் தாய்ப்பால்தான்கொடுத்தேன்

தாய்ப்பால் எவ்வளவு காலத்திற்குக் கொடுக்கலாம்...?

ஒரு வயது வரும்வரைக்கும் குழந்தைக்குத் தாய்ப்பாலைக் கொடுக்கலாம். அதற்குப்பின் நிறுத்திவிடவேண்டும்.

காரணம்பிள்ளைக்குத்தேவையான சத்து பாலில் இராது. இரண்டாவது தாயின் உடல் நிலை பாதிக்கப்படும். தடுப்பூசியும் போட்டுக்கொண்டு 3 மாதத்தில் இருந்தே சஞ்சி, சூப், பழவகைகள், முட்டை என்பன கொடுத்துப் பழக்கி வந்தால் பாலை நிறுத்தியபின்



டாக்டர்: கலைவாணி

இந்த உணவு வகைகள் தாய்ப்பாலின் நிலைக்கு சமமானதாக வந்துவிடும்.

கிராமப் புறங்களில் குழந்தை அழும் நேரமெல்லாம் தாய்ப்பாலைக்கொடுப்பார்கள். இதுவும் கூடாது.

'சரி டாக்டர்... தாய்ப்பால் தான் சிறந்தது என்று உலக நாடுகள் எல்லாம் சட்டபூர்வமாக அறிவித்துள்ளது தாய்ப்பால் சிறந்தது என்பதற்குரிய காரணங்கள்என்ன என்று கொஞ்சம் சொல்லுவீர்களா?

முதலாவது தாய்ப்பால் சுத்தமானது. தாய்ப்பாலில் உள்ள புரதம், கொழுப்பு, சர்க்கரை என்பன குழந்தைக்கு செமிக்கக்கூடிய விதத்தில் இருக்கின்றன.

பால்ப் போத்தலை விட தாயின் மார்பகம் குழந்தை பாலை இலகுவாக உறிஞ்சிக் குடிக்கும் விதத்தில் இயற்கையாகவே அமைந்துள்ளது.

அதுமட்டுமல்ல தாய்ப்பாலில் நோயைத் தடுக்கக் கூடிய 'அன்ரிப்யட்டிக்' என்னும் நோய் தடுக்கும் சக்தி இருக்கிறபடியாலும் தாய்ப்பாலைச் சிறந்ததாகக் கொள்ளப்படுகிறது.

ஆமாம்... நோய் வராமல் தடுப்பதற்குத்தான் தடுப்பூசிகள் போடப்படுகிறதே...?

உண்மைதான்... தடுப்பூசி மூலம் கொடுக்கப்படுவது குழந்தையின் உடலில் சேர்ந்து கொள்வதற்கு 3 மாதங்கள் வரை செல்லும். அதுவரைக்கும் தாயிடமிருந்துதான் தாய்ப்பால்மூலம் நோய்த் தடுப்புச்சக்தி கிடைக்கமுடியும்.

சரி டாக்டர்! பால்குடிக்கும் பிள்ளைக்கும் பால் குடிக்காத பிள்ளைக்கும் என்ன வித்தியாசம்...?

பால்குடிக்கும் பிள்ளைகளின் வளர்ச்சி சாதாரணமாக இருக்கும். நோய் ஏற்படும் வாய்ப்பும் மிகக்குறைவாகவே இருக்கும் போலியோ குக்கல் தொண்டைக்கரப்பன், ஏற்பு போன்ற நோய்கள் குழந்தைகளை விரைவில் தாக்கக்கூடிய நோய்கள்.

சில தாய்மாருக்கு பால் சுரக்கும் தன்மை மிகக்குறைவாகவும், சிலபேருக்கு குழந்தைக்குக் கொடுப்பதற்குப் பாலே இல்லாமலும் இருக்கும். அப்படிப்பட்ட தாய்மாருக்கு நீங்கள் கூறும் ஆலோசனை என்ன...?

'தாய்ப்பாலுக்குப் பதில் பசும்பாலைக் கொடுக்கலாம். ஆனால் கட்டாயமாக பாலின் அளவு தண்ணீரும் கலந்து சீனியும் போட்டுக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் தாய்ப்பாலின் தரத்திற்குப் பசும்பாலைக் கொண்டு வரலாம். தனிப் பசும்பால் கொடுத்தால் குழந்தைக்கு வலி ஏற்படும் வாய்ப்பை நாமே ஏற்படுத்தியதாக முடியும்.

'சரி டாக்டர் கடைசியாக ஒரு கேள்வி சில பெண்கள் தங்கள் அழகு கெட்டுவிடும் என்று பால் கொடுப்பதில்லை.

இன்னும் சிலர் வேலைக்குப் போகின்ற காரணத்தினால் பால்கொடுப்பதையே நிறுத்தி விடுகிறார்கள். இதனால் தாய்மாருக்கு ஏதாவது கெடுதி உண்டா...?

'பால் கொடுக்காமல்விட்டால்மார்பில் கட்டி வளரும் வாய்ப்பு அதிகமாக உண்டு. நோவுள்ள பல கட்டுகளாக வரும். அடிக்கடி மார்பில் வலி ஏற்படும்.

பாலூட்டும் தாய்மாருக்கு புற்றுநோய் வருவது மிகக் குறைவு. ஆனால் பாலூட்டாத தாய்மாருக்கு புற்றுநோய் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் நிறைய உண்டு —இப்படி டாக்டர் கூறிமுடித்தார். ★

**யாழ்ப்பாண மாவட்டத்தில் புற்றுநோய் வைத்திய நிபுணராகப் பணியாற்ற இருப்பவர் டாக்டர் கலைவாணி உக்கிரப் பெருவழுதி.**

**மஹரகம புற்றுநோய் ஆஸ்பத்திரியில் தற்போது பயிற்சிபெற்றுவரும் இவர், பயிற்சி முடிந்தபின்னர் தெல்லிப்பளை புற்றுநோய் ஆஸ்பத்திரியில் பணியாற்ற இருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.**

**டாக்டர் கலைவாணி மூன்று குழந்தைகளுக்குத் தாய். அவரின் கணவரும் ஒரு டாக்டர். மைக்ரோபயோலஜித் துறையில் நிபுணத்துவப் பயிற்சிபெற்றுவருகிறார்.**

**டாக்டர் கலைவாணி 'சஞ்சிவி'க்குத் தெரிவித்த கருத்துக்கள் இங்கு பிரசுரமாகின்றன.**

செவ்வி:
## சித்திராவதி

தாய்ப்பால் கொடுப்பதை திடீரென நிறுத்தாமல் வருகிறபடியால் நோய் ஏற்படும் வாய்ப்பும் இல்லை. எனவே தாய்ப்பாலை ஒரு வருடத்தின்பின் நிறுத்திவிடலாம்.

# நங்கை

சமையல் செய்வோம்



## பலாக்கொட்டைக் கட்லெட்

விதவிதமான கட்லெட் வகைகள் எல்லோருக்கும் செய்யத்தெரியும். பிலாப்பழ சீசனை இந்த வேளையில் பலாக்கொட்டைகள் நிறையக் கிடைக்கும். இதைப்பயன்படுத்திப் பலாக்கொட்டைக் கட்லெட் செய்து பாருங்கள்.

**வேண்டிய பொருள்கள்**

பலாக்கொட்டை — 25
உருளைக்கிழங்கு — 3 (பெரிய)
இஞ்சி, உள்ளி
வெங்காயம்
பச்சை மிளகாய்
உப்பு
கருவேப்பிலை
மிளகுதூள்
மிளகாய்ப்பொடி
கோதுமைமா ½ கண்டு
பிஸ்கட் தூள் இவற்றை அளவாக எடுக்கவும்.

**செய்யும் முறை**

பலாக்கொட்டையையும் உருளைக்கிழங்கையும் ஒரு பாத்திரத்தில் அவிய விட்டுப் பின் தோல்நீக்கி நன்றாகப்பிசைந்து வைக்கவும்.

அதற்குள் பொடியாக நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய், உள்ளி, இஞ்சி, கருவேப்பிலை, மிளகுதூள், மிளகாய்ப்பொடி என்பனவற்றைப் போட்டுப் பிசைந்து நீங்கள் விரும்பிய வடிவத்தில் உருண்டையாகவோ அல்லது தட்டையாகவோ அல்லது நீள் உருளை வடிவமாகவோ உருட்டித் தட்டி வைக்கவும்.

கோதுமைமாவில் சிறிது மஞ்சள் பொடியைப் போட்டு தண்ணீர் விட்டுக் கூழ்ப்பதமாகக் குழைத்து அதற்குள் தட்டிவைத்திருக்கும் கட்லெட் உருண்டைகளைத் தோய்த்து எடுத்துப் பின்னர் பிஸ்கட் தூளில் உருட்டி எடுத்து வழமையான கட்லெட் போலப் பொரித்து எடுக்கவும்.

கோதுமைமாவுக்குப் பதிலாக முட்டையின் வெண்கருவில் தோய்த்துப் பின் பிஸ்கட் தூளில் உருட்டியும் கட்லெட்டைப் பொரிக்கலாம்.

— உஷா — ★



# எங்கள் வீட்டு நாய்க்குட்டி

கூ கூ நாய்க்குட்டி
 சுருட்டை வால் நாய்க்குட்டி
வாவா நாய்க்குட்டி
 வாலை ஆட்டும் நாய்க்குட்டி

வேட்டை ஆடும் நாய்க்குட்டி
 வீரம் உள்ள நாய்க்குட்டி
சீட்டிச் சத்தம் கேட்டதும்
 சிலிர்த்துப் பார்க்கும் நாய்க்குட்டி

வீட்டைக் காக்கும் நாய்க்குட்டி
 விரைந்து ஓடும் நாய்க்குட்டி
நாட்டைக் காக்கும் வீரரின்
 நண்பன் ஆன நாய்க்குட்டி

வெற்றி வாகை சூடியே
 வேட்டை ஆடும் நாய்க்குட்டி
முற்றும் வெள்ளை இல்லையே
 முதுகில் கறுத்த நாய்க்குட்டி

நன்றி யுள்ள நாய்க்குட்டி
 நான் வளர்க்கும் நாய்க்குட்டி
முன்றில் வாசல் கிடந்துமே
 முகர்ந்து பார்க்கும் நாய்க்குட்டி

முருக. வே. பரமநாதன்

# உங்களுக்குத் தெரியுமா?

1. உலகில் மிக அதிகமான முட்டை இடும் மீன் 'காட்' எனப்படும் மீன். அது ஒரு தடவையில் சுமார் 60 இலட்சம் முட்டைகள் இடும். ஆனால் அந்த 60 இலட்சம் முட்டைகளில் 6 முட்டைகள் மட்டுமே குஞ்சாகி வெளி வருகின்றன. மீதி எல்லாம் பல விதங்களில் அழிந்து விடுகின்றன.

2. உலகில் உள்ள உயிரினங்களில் எலிகள் மட்டும் 35 விதமான நோய்களைப் பரப்புகின்றன.

3. உலகில் நான்கு கொம்புள்ள ஒரே மிருகம் 'ஜீனஸ் டெட்ரா செரோஸ்' மான் இனத்தைச் சேர்ந்து இந்த மிருகத்தின் தலை உச்சியில் இரண்டுகொம்புகளும் நெற்றியில் இரண்டு கொம்புகளும் இருக்கின்றன.

4. ஆபிரிக்காவில் வாழும் 'ஓரிக்ஸ்'என்னும் மான் இனம் ஒட்டகத்தைப்போல் தண்ணீர் குடிக்காமல் அதிக நாட்கள் இருக்கும்.

5. மீன்களில் ஹாக்பிஷ் என்று ஒரு வகை இருக்கிறது. இது மிகுந்த தைரியசாலி. இது இராட்சத சுறா மீனுக்குக் கூடப் பயப்படுவது இல்லை. இந்த மீன் சுறா மீனைத் தன் உடலால் கயிறுபோல் சுற்றி முடிச்சுப் போட்டு பிறகு சட்டென முடிச்சை அவிழ்த்து விடும்.

தொகுப்பு-
**இ.திலீபன்**
(யூனியன் கல்லூரி)

சிறுவர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காதல் நிறைவேறாத போதுதான் காவியமே உருவாகிறது!

## திரைப்படங்களில் காதல் பற்றி பிரபல டைரக்டர் பாலசந்தர்


கே. பாலசந்தர்

**டைரக்டர் கே. பாலசந்தர், தமிழ் படவுலவுலகில் தனக்கு என்று ஒரு முத்திரையை பதித்திருக்கிறார்.**

**அவருடைய படைப்புக்கள் திட்டமிட்டுத் தயாரிக்கப்படுபவை,**

**அவர் அளித்த பேட்டி இங்கு கேள்வி பதிலாகத் தரப்படுகிறது.**

? காதலின் தவிப்பில் அ... மோதும் உள்ளங்களைக் காட்ட அருவி நீரின் பின்னணி அல்லது கடல் அலைகளின் துணையை நீங்கள் ஏன் நாடுகிறீர்கள்?

● அலைகளின் வேகத்தில் பறக்கும் இசையைவிட, அருவி நீரின் வேகத்தைவிட, உள்ளத்து உணர்ச்சிகளை எடுத்துக் காட்டும் சக்தி வாய்ந்த சாதனம் வேறு இல்லை என்பது என் கருத்து.

கட்டுக்கடங்காமல் பொங்கும் உணர்ச்சிகளை வார்த்தைகளில் கொட்டுவதை விட அந்த அலைகள் அழுத்தமாக வெளிப்படுத்தும் என்று நம்புவதால் அந்தப் பின்னணி அடுத்தடுத்து என் படங்களில் இடம் பெறுகிறது.

? உங்களுடைய படங்களில் காதலனும் காதலியும் தோல்வியையே தழுவுகின்றனரே?

● காதல் நிறைவேறாத போதுதான் காவியம் உருவாகிறது. என்னுடைய நாயகனும் நாயகியும் எல்லாரையும் போல கல்யாணம், குடும்பம் என்று முடிந்து விடாமல் அழியாத காதலில் அமரத்துவம் பெறுவதைத்தான் நான் விரும்புகிறேன்.

? உங்களுடைய படங்கள் சிலவற்றில் கதாநாயகர்கள் காதலை வெளிப்படையாகச் சொல்லத் தயங்குகின்றனரே?

● காதல் என்ன பட் என்று போட்டு உடைக்கும் மட்பாண்டமா? ஒரு நாளில் ஏற்படும் சந்திப்பிலோ, மோதலிலோ உணரக் கூடிய அளவுக்கு, உடனே வெளிப்படுத்தக்கூடிய அளவு சாதாரணமானதல்ல காதல்.

என்னைப் பொறுத்தவரை காதலை அணு அணுவாகவே வெளிப்படுத்த விரும்புகின்றேன்.

காதலை நினைத்து, நினைத்து அனுபவிப்பதில் அவனுக்கு ஏற்படும் தனிசுகம்... அவளும் தன்னைக் காதலிக்கிறாள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளப்படும் வரை அவன் மனதில் ஏற்படும் தவிப்பு...... சுகமானது, ரஸமானது, ரம்மியமானதும் கூட. இறைக்க இறைக்க ஊறும் ஊற்றுன அந்த உணர்வை ஓரிரு வார்த்தைகளில் போட்டு உடைப்பதை சரியான வழியாக நான் கருதவில்லை. (எ - 4)

### ரத்த வேர்வை

பிரபல தயாரிப்பாளர் ராமாநாயுடு புதிய படம் தயாரிக்கிறார்.

'ரத்த வேர்வை' படத்தின் பெயர். ரகுவரன் கதாநாயகன்.

கதை, திரைக்கதை, வசனம், டைரக்ஷன் அனைத்தையும் ஏற்றுள்ளார் வி. சி. குகநாதன்.

பாடல்கள்: மு. மேத்தா, இசை: சந்திரபோஸ். (எ-4)

### காஷ்மீர் வதந்தி

திருமணம் செய்து கொள்ளாமல் பிள்ளை பெற விரும்பிய இந்தி நடிகை ரேகாவை பற்றிய கல்யாண வதந்திகள் அடிக்கடி வரும்.

அமிதாப்பச்சனை மணந்தார்...... ராஜ்பப்பருடன் ரகசியத் திருமணம் என்று.

இப்போது புதிதாக அவருடன் மூன்று முடிச்சு போடப்பட்டுள்ளவர் அரசியல் 'பிரமுகர்' காஷ்மீர் முதல்மந்திரி பரூக் அப்துல்லா.

பாகிஸ்தானில் இருந்து வெளிவரும் 'ஜங்' என்ற பத்திரிகை இப்படி செய்தி வெளியிட்டுள்ளது.

## இரட்டை வேடத்தில் தியாகராஜன்

வாய்பேசாத ஊமைத் துரையாகவும் வசதி படைத்த ராஜதுரையாகவும் இரட்டை வேடம் தாங்கி தியாகராஜன் நடிக்கும் படம் 'ஊமைத் துரை'.

இதன் உச்சக்கட்டக் காட்சிகள் அண்மையில் சென்னை பல்லாவரம் குன்றுகளில் படமாக்கப்பட்டன.

தியாகராஜன் சிறுத்தையுடன் மோதும் கட்டமே உச்சக் காட்சியாக அமைந்தது.

கதாநாயகி கீதா. செல்சந்திரன், டில்லி கணேஷ் ஆகியோரும் நடிக்கிறார்கள்.

வசனம், பாடல்களை முத்துபாரதி எழுத ராஜசேகர் டைரக்ட் செய்கிறார். (எ-4)

### தென்பாண்டிச் சீமையிலே

'தென்பாண்டிச் சீமையிலே' படத்தில் தொல்பொருள் ஆராய்ச்சியாளராக விஜய்காந்த் நடிக்கிறார்.

உழைப்பாளர் பிலிம்ஸ் இப்படத்தை தயாரிக்கிறது.

ராதிகா, சீதா, வனிதா, பாண்டியன் நடிக்கும் இப்படத்தின் கதை வசனத்தை ராமநாராயணன் எழுத, சி. பி. சிகாபாலன் இயக்குகிறார். கே. பாக்கியராஜ் இசை அமைக்கிறார். (எ-4)

# அகதா கிறிஸ்டியின் 'மௌஸ்டிராப்' படமாவது எப்போது?

அகதா கிறிஸ்டி என்ற பிரபல துப்பறியும் நாவலாசிரியை மறைந்த ராணிமேரியின் வேண்டுகோளுக்கு இணங்கி ராணியின் பிறந்தநாளை முன்னிட்டு 'த்ரீபிளைண்ட் மைஸஸ்' என்ற நாவலை எழுதினார்.

அதுவே பின்பு மௌஸ்டிராப் (எலிப்பொறி) என்ற பெயரில் நாடகமாக்கப்பட்டு 1952 நவம்பர் 25 ஆம் திகதி லண்டன் தியேட்டர் ஒன்றில் அரங்கேற்றப்பட்டது.

அதில் 'காந்தி' படத்தைத் தயாரித்த ரிச்சர்ட் ஆட்டன் பரோவும் நடித்து இருந்தார்.

ஆரம்பம் முதல் இன்று வரை இதனைத் தயாரித்து நடத்தி வருபவர் சேர் பீட்டர் சாண்டர்ஸ் என்பவர் அகதா கிறிஸ்டியின் நெருங்கிய நண்பர் இவர்.

எட்டே பாத்திரங்கள் கொண்ட இந்த நாடகம் கடந்த 36 ஆண்டுகளாக சென்ட்மார்ட்டினஸ் தியேட்டரில் நடந்து வருகிறது.

எட்டுப் பாத்திரங்களிலும் 260 நடிக, நடிகைகள் மாறி மாறி நடித்து வந்திருக்கின்றனர்.

இவ்வளவு பிரபலமான இந்த நாடகம் ஏன் இன்னும் சினிமா படமாக்கப்படவில்லை?

1956 இல் இந்தநாடகத்தை படமாக்கும் உரிமை ரோமுலஸ் பிலிம்ஸுக்கு விற்கப்பட்டது.

ஆனால் படமாக்குவதற்கு ஒரு நிபந்தனை போடப்பட்டது.

அந்த நாடகம் லண்டன் நகரில் கடைசியாய் ஓடி முடிந்த 6 மாதங்களுக்கு பின்னர் தான் படம் ரிலீஸாக வேண்டும்.

நாடகம் இன்னும் ஓடி முடியவில்லை. இன்னும் எவ்வளவு ஆண்டுகளுக்கு ஓடுமோ தெரியவில்லை. அதனால் இது இன்னும் படமாக எடுக்கப்படவில்லை. ★

### நம்பிக்கை மோசமா?

ஆட்டக்காரியான கவர்ச்சிப் 'பட்டு' இப்போதெல்லாம் அவர் நடிக்கும் படங்களின் ஊதியத்தை அவரே பேசி வாங்குகிறாராம். சில ஆண்டுகளாக ஒரு ஆசாமியை நம்பி விட்டது தப்பு என்பதை இப்போது உணர்ந்துகொண்டாராம். ★

வெள்ளித் திரையில்

# 'என்புருஷன் எனக்குமட்டும் தான்' சுகாசினி நடிக்கும் புதிய படம்

என் புருஷன் எனக்கு மட்டும்தான்!

திருமணம் நிச்சயதார்த்தம் செய்த பின்னர் சுகாசினி நடிக்கும் முதலாவது படத்தின் பெயர்தான் 'என் புருஷன் எனக்கு மட்டும்தான்' என்பது.


சுகாசினி

படப்பிடிப்புக்கு வந்த சுகாசினிக்கு நடிகர் விஜய்காந்த் இனிப்பு வழங்கினார்.

சுகாசினியும் தனது திருமணச் செய்தியைத்தெரிவித்து படப்பிடிப்பில் கலந்துகொண்டவர்களுக்கு இனிப்பு வழங்கினார்

சென்னை நடிப்புப் பயிற்சிக் கல்லூரியில் சுமராவுமனைப் பயிற்சி பெற்றவர் சுகாசினி.

'நெஞ்சத்தைக் கிள்ளாதே' படத்தின் மூலம் தமிழ் படவுலகில் நுழைந்தவர்.

சுகாசினயின் தந்தை சாருஹாஸன். வழக்கறிஞரான அவர் 'தபரணகதே' கன்னடப் படத்தில் சிறப்பாக நடித்ததற்காக ஜனாதிபதி விருது பெற்றார்.

'சிந்துபைரவி' படத்தில் சிறப்பாக நடித்ததற்காக ஜனாதிபதி விருது சுகாசினிக்குக் கிடைத்தது.

சுகாசினியை மணக்கப் போகும் டைரக்டர் மணிரத்னம் இயக்கிய 'நாயகன்' படத்துக்கு சென்ற ஆண்டில் ஜனாதிபதியின் மூன்று விருதுகள் கிடைத்தன. அதில் சிறப்பாக நடித்த கமலஹாசனுக்கு சிறந்த நடிகர் விருதைப் பெற்றார். (எ-4)

# மலையாளப் படவுலகின் சிறப்பு அம்சங்கள்

மலையாளப் படவுலகிலும் சரி, ரஸிகர் மத்தியிலும் சரி தனிநபர் வழிபாடு இல்லை.

ரசிகர்கள் தங்கள் இஷ்ட நாயகர்களின் கட் அவுட்டுக்கு பூமாலை, பூஜைசெய்து பாலாபிஷேகம் செய்வது இல்லை. போஸ்டர் அடிப்பது இல்லை.

புதிதாக ஏதாவது செய்ய வேண்டும் என்ற தாகம் தான் மலையாளப்படவுலகினர் மத்தியில் காணப்படுகிறது.

டெக்னிகலாகவும் சினிமாஸ்கோப், டெக்னிகலர் படங்கள் மலையாளத்தில் தான் அதிகம் தயாராகின்றன.

இந்தியாவின் முதல் த்ரீ டி படம் தயாரானது மலையாளத்தில் தானே!

மலையாளப் படவுலகின் இன்னொரு சிறப்பம்சம் [illegible] பேசத் தெரிந்த [illegible] களை மட்டுமே [illegible] களாக நடிக்க வைப்பது. கதாநாயகி எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர் ஆயினும் பரவாயில்லை.

கேரள நாயகர்களும் வேறு மொழிப் படங்களில் நடிக்க எண்ணுவதில்லை.


தரமான படங்களை மட்டுமே தயாரிக்க வேண்டும் என்ற அபிப்பிராயமே அங்கு மேலோங்கி இருக்கிறது. அதனால் இந்தியப் படவுலகில் அனைவருக்கும் ஒரு ஆச்சரியக் குறியாய் மலையாளப் படவுலகம் இருக்கிறது.

★ ★ ★

தமிழ்ப்படங்களில் நடிக்கும்போது தன் மனைவி, குழந்தைகளை ஸ்ருடியோ பக்கமே தலைகாட்டாதபடி பார்த்துக்கொள்பவர் நடிகர் ரஜனிகாந்த்.

ஆனால் 'பிளட் ஸ்டோன்' [illegible] ஷூட்டிங் நடந்தபோது [illegible] பேனார் ரஜனிகாந்த். (எ—4)

## சொற்சிலம்பம்



போட்டி இல. 82

சொற்சிலம்பம் இல: 82
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..................................................

விலாசம்: ..................................................

..................................................

—————— இங்கே வெட்டுக ——————

**முடிவு திகதி: 6 - 7 - 1988**

**இடமிருந்து வலம்**

1. அழகன் 4. எஞ்சியது 6. நீர் ஊறுவதைக் குறிக்கும் 7. ஒருசீரைவளை 8. அவதிப்படு-இங்கு தலைகிழாய்நிற்கிறது 10. புகழ் பெற்ற கொடை வள்ளல் 12. பாகு 13. காலம் தாழ்த்து 16. அகன்ற வாயுடைய சட்டி 18. தைரியம் 20. பருப்பு வகைகளில் ஒன்று 22. பிரிவு 24. ஆடை வகைகளில் ஒன்று 25. நேரம் 26. குலம்.

**மேலிருந்து கீழ்**

1. முகத்தின் அழகு 2. சுவை 3. பல்லி 4. பத்தாம் திதி மாறி நிற்கிறது 5. நீராடு 7. தசம் 9. ஒரு சிறு பிராணி 11. தந்தை 12. பகுதி 14. மீனாட்சி தலம் 15 உள்ளே தள்ளு 16. ஊர்வன இனத்தைச் சேர்ந்தது 17. பாதத்தைப் பாதுகாப்பது 19. உட்கார உழைப்பது 21. நோவு 23. அரைப்பங்கு.

**நிபந்தனைகள்**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் கலந்து கொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டப்பட்டு வருபவை மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| முதலாம் பரிசு: | 100 ரூபா |
| இரண்டாம் பரிசு: | 50 ரூபா |
| மூன்றாம் பரிசு: | 25 ரூபா |



அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
முகத்தின் அழகு படத்தில் தெரியும்
அழகுக்கு அழகூட்டும் தரமான கலர்ப்படப் பிரதிகளை
யாழ்ப்பாணத்திலேயே
அதிகுறை கட்டணத்தில்
மிகக் குறுகிய காலத்தில் பெற
"ஷப்ரு"வை நாடுங்கள்!
கலர் படச் சுருள் கழுவுதல்-
முற்றிலும் இலவசம்!!

- 3 முதல் 5 நாட்களுக்குள் விநியோகம்
- நவீன கம்பியூட்டர் இயந்திரத்தில் பிரதி செய்ய படுதல்
- ஸ்ருடியோக்கள், 'ஷப்ரு' வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகை!!!
- கலர்ப் பிரதி Glossy / Matt தாள்களில் பிரதி செய்து கொடுக்கப்படும்

எல்லா நாட்களிலும்: காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்

நீங்கள் நாடவேண்டிய இடம்:

ஷப்ரு

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T. Phone No: 22073

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவித்துளி

### ஒற்றுமை!

பஸ்களின் வரவை
எதிர்பார்த்து
காத்து நின்றவர் விடம்
நேரத்தை; நான்
கேட்டபோது
ஒவ்வொருவரின்
கைக்கடிகாரங்களும்
வித்தியாசமான
நேரத்தைக் காட்டின
அப்போது புரிந்தது
இதிலும் கூட
எங்களிடம்
ஒற்றுமை
இல்லையென்று.

க. நாகராஜா

★

### இன்பம் ஏராளமே!

விழியிரண்டும் வில்லாக
வீறுகொண்ட அம்பாய் என்
உயிரை உறுத்துதடி
நாளும்நெஞ்சை வருத்துதடி.

வளைந்த இரு புருவங்கள்
வானிலே வில்லாக
நெஞ்சில் நிலைத்ததடி
நெடிய வானும் மலைத்ததடி!

மையல் ஏன் என் மேலே?
மானே நீ பெண்போலே!
பொய்யற்ற பெருவாழ்விதே!!
பேரின்பம் உருவாகுதே!!!

சறுக்குகின்ற மைதானம்
சதையிலே நான் கண்டேன்
செங்கமலக் கன்னத்திலே
சங்கமிப்ப தெப்போதடி?

செவ்விதழில் தேன் அருந்த
என் இதழை நான் பொருத்த
தடையங்கள் தாராளமே
அட! இன்பம் ஏராளமே!!

— சண்.

★

### வானத்து ஒட்டுண்ணியே...!

வானத்து ஒட்டுண்ணியே......
வந்து விடு பூமிக்கு...!
எத்தனை குளிரடித்தாலும்
என் வீட்டு ஜன்னல்
என்றுமே நான் சாத்தியமில்லை
ஆனாலும்—
ஓரிரு இரவுகள் தான் நீ
உள்ளே வருகிறாய்.

ஊரெல்லாம் ஒரே கதை—
உனக்கு—
சொந்த ஒளி இல்லையாம்
சூரியனிடந்தான்
இரவல் எடுக்கிறாயாம்.

இரவல் என்றாலும், நீ
இன்பமாகத்தான் இருக்கிறாய்.
சூரியன்—
அன்றாடம் எம்மை
சுட்டுக் கொண்டேயிருக்கிறது!

காதலர்கள் உன்னால்
களிப்படைகிறார்கள்
கவிஞர்கள் உன்னையே
காதலிக்கிறார்கள்.
வானத்து ஒட்டுண்ணியே......
வந்துவிடு பூமிக்கு...!

வசந்தி
ஊரெழு.

# வெற்றி நிழலைப் போல; பிடிக்க முயன்றால் ஓடும்!

தமிழ் நாடு ஜனதாக்கட்சித்தலைவர் இரா. செழியன். தமிழ்நாடு அரசியல் நிலைமை பற்றி விடுத்த அறிக்கை வருமாறு:

தமிழக அரசியலிலும் இந்திய அரசியலிலும் இரட்டைவித அனுதாப அலைகளின் மீது வெற்றி நடனம் புரிந்து வந்த இரு கட்சிகள் இன்று தடம் புரண்டு கிடக்கின்றன.

அகில இந்திய அரசியலில் 'திரு. பரிசுத்தவான்' என்று கிளம்பிய பிரதமர் ராஜீவ் 'திரு. போபர்ஸ்' ஆக, திருதிரு என்று விழிக்கும் ஊழல் கும்பலின் பாதுகாவலராக விளங்குகிறார்.

தமிழ்நாட்டில் முதலமைச்சர் எம். ஜி. ஆரின் மறைவுக்குப் பின்னர் கட்சி பிளவுபட்டது. மந்திரிசபை வீழ்ந்தது. சட்டசபை கலைக்கப்பட்டது.

தனிநபரின் செல்வாக்கை, பெருமையை, பெயரை வைத்து வளர்கிற கட்சிக்கு உண்டாகக்கூடிய முடிவு தான் இங்கும் ஏற்பட்டிருக்கிறது.

தமிழ் நாட்டு அரசியலில் வெற்றி எந்தப் பக்கம் என்பதை யாரும் சரியாகக் கூறிவிட முடியாது. அவ்வாறு கணிக்கிற முறை இருந்தால், தேர்தல் என்பதே தேவை இல்லாமற் போய்விடும்.

நான் நம்புகின்ற இலட்சியம், கொள்கை, திட்டம் இவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ள ஜனதாக் கட்சியும் அகில இந்தியாவிலும் மாநிலங்களிலும் அதனுடன் திட்ட அடிப்படையில் இணைந்து நிற்கும் கட்சிகளும் வெற்றி பெறப்பாடுபடுகின்றது.

நமது அணிக்கு வெற்றி கிடைக்க வேண்டும் என்பது ஒன்று: வெற்றி தரும் அணியின் பக்கம் சென்று விடலாம் என்பது மற்றொரு வகை!

வெற்றி ஒரு நிழலைப்போல; அதைப்பிடிக்க நாம் சென்றால் அது ஓடும்; ஒளி நோக்கி நாம் நடைபோட்டால், அது நம்மைப் பின் தொடரும்.

இப்படி இரா. செழியன் அறிக்கையில் தெரிவித்தார். ★

## தி.மு.க. எதிர்க்கட்சியாகக் கூட வரக்கூடாது நெடுஞ்செழியன் ஆசை!

தமிழ்நாடு சட்டசபையில் தி. மு. க. எதிர்க்கட்சியாகக் கூட வரக்கூடாது என்று நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

பரங்கி மலையில் அ. தி. மு. க. ஜெஅணிப் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு நெடுஞ்செழியன் பேசியதாவது;

இந்திரா காங்கிரஸுடன் ஜெயலலிதா அணி கூட்டு வைத்துக்கொள்ள வேண்டும். தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு இடங்கள் ஜெயலலிதா அணிக்கே கிடைக்கவேண்டும்.

தனித்துப் போட்டியிட காங்கிரஸ் விரும்பினால் அது அவர்கள் விருப்பம்.

பாண்டிச்சேரி மாநிலத்தில் இந்திரா காங்கிரஸுக்குக் கூடுதல் இடங்களை வழங்க ஜெயலலிதா அணி தயாராக உள்ளது.

எம். ஜி. ஆர் உருவாக்கிய இந்தக் கூட்டணி தொடரட்டும்.

வேட்பாளர் நியமனம் கேட்டு இதுவரை 3 ஆயிரத்து 700 பேர் ஜெயலலிதா அணிக்கு விண்ணப்பித்துள்ளனர்.

இப்படி நெடுஞ்செழியன் சொன்னார். ★

## கவர்னர் ஆட்சியில் ஊழல் நிலத்தடி நீர் போல!

ஆளுநர் ஆட்சி தான் நல்ல ஆட்சி என்றால் ராஜீவும் பதவி விலகட்டும். வெங்கடராமனே நாட்டை ஆளட்டும்.

தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி முன்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் ஆளுநர் ஆட்சி நீடிக்கட்டும் என்று சிலர் கோருகிறார்கள்.

தமிழ் நாட்டில் காங்கிரஸ் ஆட்சி அமையாவிட்டாலும்

### கருணாநிதி வர்ணனை

அதற்கு வசதியாக கவர்னர் ஆட்சி நடக்கட்டும் என்று நினைக்கிறார்கள்.

மக்களாட்சியின் போது பெருக்கெடுத்து ஓடிய ஊழல்கள் இப்போது கட்டுப்படுத்தப்பட்டு நிலத்தடி நீர்போல மறையத் தொடங்கி விட்டன—இப்படித் தினமணி ஆசிரியர் தலையங்கம் கூறுகிறது.

அதாவது கவர்னர் ஆட்சியில் நிலத்தடி நீர் போல்



ஊழல் இருக்கிறது. அதைப் புத்தி உள்ளவர்கள் தோண்டிப் பார்த்தால் அது வெளிப்படும் என்ற உண்மையை அத் தலையங்கம் கூறுகிறது.

கவர்னர் ஆட்சி நீடிப்பதை ஏற்க முடியாது. தேர்தல் தாமதமானால் தொடர் போராட்டம் நடக்கும்—

இப்படிக் கருணாநிதி எச்சரிக்கை விடுத்தார். (எ—4)

## நான் ஒரு போர்வாள்; கருணாநிதி பேச்சு

நான் யாரையும் எதிரியாகக் கருதவில்லை'— என்று தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி சொன்னார்.

கிண்டியில் நடந்த கூட்டத்தில் அவர் மேலும் சொன்னதாவது;

என்னை யார் வேண்டுமானாலும் எதிரியாகக் கருதட்டும் ஆனால் அவர்களை நண்பர்களாகவே கருதுவேன்.

நான் தி. மு. க வின் கடைசித் தொண்டன் என்னை நீங்கள் தலைவனாக ஏற்றுக் கொண்டதற்குக் காரணம் உங்களுக்கு நான் போர்வாளாக இருப்பேன் என்பதற்காகத் தான். வெறும் போர்வாளால் ஒன்றும் செய்ய முடியாது. அதைப் பயன்படுத்த வலிமையான வீரர்கள் வேண்டும். இந்த போர்வாளைத் திறமையாகப் பயன்படுத்தி வெற்றி பெற வேண்டும்.

இப்படி கருணாநிதி சொன்னார். (எ—4)

## ஜெயலலிதா சொன்ன ஜார் மன்னன் கதை !

சேலம் கூட்டத்தில் பேசிய ஜெயலலிதா சோவியத் கதை ஒன்றைச் சொன்னார்.

அவர் சொன்னதாவது;

சோவியத்தில் ஜார் மன்னன் ஆட்சி நடந்து வந்தது.

ஒருநாள் விருந்தின்போது மன்னன் 'இவ்வளவு செலவிட்டும் மக்கள் ஏன் கஷ்டப்படுகிறார்கள் என்று கேட்டான்.

அதற்கு மந்திரி ஒரு ஐஸ் கிரீமை ஒருவருக்கு ஒருவர் கைமாற்றிக்கடைசியில் மன்னனிடம் கொடுக்கச் செய்தான்.

கடைசியில் மன்னன் கையில் ஒரு சொட்டு நீர் வந்து சேர்ந்தது.

மன்னன் என்ன இது? என்று கேட்டான்.

நீங்கள் மக்களுக்காக செலவிடுவது இப்படித்தான் மக்களின் கைகளுக்குச் சென்று அடைகின்றது என்று மந்திரி மன்னருக்குச் சுட்டிக்காட்டினான்.

இக்கதை அன்றைய சோவியத்துக்கு மட்டுமல்ல இன்றைய இந்தியாவுக்கும் பொருந்தும்.

இப்படி ஜெயலலிதா சொன்னார்: (எ—4)

## தமிழ்நாடு அமைதிப் பூங்காவாக உள்ளது!

உப்பு சத்தியாக்கிரகம் நினைவாக காங்கிரஸார் ஊர் ஊராக யாத்திரை போகின்றனர். அவர்கள் வ. உ. சி இழுத்த செக்கை ஊர் ஊராக இழுத்துவருவார்களா?

தி. மு. க முன்னாள் எம். எல். ஏ. ரகுமான்கான் வாணியில் பாடி கூட்டத்தில் முன்கண்டவாறு கேட்டார்.

ரகுமான்கான் மேலும் சொன்னதாவது;

தமிழ்நாடு அமைதிப்பூங்காவாக உள்ளது. அதனால் இங்கு சட்டசபைத்தேர்தலைத் தள்ளிவைக்கமுடியாது.

ஜெயலலிதா அணிக்கும் மூப்பனார் அணிக்கும் கூட்டு ஏற்பட்டாலும் இரண்டும் இரண்டு கோஷ்டிகளாகவே இயங்கும்.

எனக்குப் பிள்ளையா? குட்டியா? நான் அனாதை என்று கூறும் ஜெயலலிதா நாட்டுக்குச்செய்த தியாகம் தான் என்ன?

இப்படி ரகுமான்கான் கேட்டார். ★

# 'வீரப்பனின்' பண்ருட்டி' புராணம்!

### சென்னையிலிருந்து தி. மேனகன்

பண்ருட்டியில் அ. தி. மு. க. பொதுக்கூட்டத்தில் ஆர். எம். வீரப்பன் பேசியதாவது:

காமராஜர் வளர்த்த காங்கிரஸ் கட்சி இப்போது இல்லை. 'காங்கிரஸ்' என்ற பெயரால், இந்த நாட்டை சுரண்டும் ஒரு கூட்டம்தான் இன்றைக்கு இருக்கிறது.

பெருந்தலைவர் காமராஜர் மறைந்ததும் காங்கிரசை மூப்பனார் இந்திரா அம்மையாரிடம் அடகு வைத்தார். தனக்குத் தமிழ்நாடு இ. காங்கிரஸ் தலைவர் பதவி கிடைக்கிறது என்ற ஒரே காரணத்துக்காக அன்றைக்கு அடமானம் வைத்தார்!

இப்படிப்பட்ட மூப்பனார் தான், காங்கிரஸ் தயவு இல்லாமல் திராவிட இயக்கங்கள் தேர்தலில் போட்டியிட முடியாது என்ற புதிய கதையை சொல்கிறார்.

#### பாஸ்கரராவ்

எம். ஜி. ஆர். நன்றாகப் பேசும் நிலையில் இருந்தபோது ஒரு நாள் சட்டமன்ற வளாகத்தில் உள்ள வசந்தமண்டபத்தில் சட்டமன்ற உறுப்பினர்களை வைத்துக் கொண்டு, தமிழகத்தில் பாஸ்கரராவாக இருப்பவர் பண்ருட்டி ராமச்சந்திரன் என்று சொன்னார். இதை யாராவது மறுக்க முடியுமா?

பண்ருட்டி என்றாலே பலாப் பழத்துக்குப் புகழ் பெற்ற ஊர்! பொம்மைக்கும் பெயர் பெற்ற ஊர் என்பது எல்லோருக்கும் தெரியும்.

பண்ருட்டியை ஐ. நா. சபைக்குப் போகவிடாமல் சதி செய்தது வீரப்பன்தான் என்று கடலூரில் அந்த பெண் பேசி இருக்கிறார். பண்ருட்டியும் அப்போது பக்கத்தில் உட்கார்ந்து இருந்திருக்கிறார்.

பண்ருட்டி ராமச்சந்திரனை முதன்முதலில் இலங்கை தமிழர் பிரச்சினை பற்றி பேசுவதற்காக எம். ஜி. ஆர். ஐ. நா. சபைக்கு அனுப்பினார். இந்திரா அம்மையார் யாரையாவது அனுப்புங்கள் என்று கேட்டதால் எம். ஜி. ஆர். அனுப்பினார்.

அது முறையாக அனுப்பப் பட்ட செயல். 2ஆம் தடவையாக ஐ. நா. சபைக்கு செல்ல பண்ருட்டி முயன்றபோது, எம். ஜி. ஆர். அமெரிக்காவில் இருந்தார். எம். ஜி. ஆரைக் கேட்காமலேயே தன் பெயரை ஐ. நா. செல்லும் குழுவில் சேர்த்துக் கொண்டார். பண்ருட்டி! எம். ஜி. ஆரைக் கேட்க வேண்டிய அவசியம் இல்லை. நான் பார்த்துக் கொள்கிறேன் என்று மத்திய வெளியுறவு அமைச்சருடன் தொடர்பு கொண்டு கூறினார்.

இது, எம். ஜி. ஆருக்குத் தெரியாமலேயே பண்ருட்டி ஐ. நா. போகிறார் என்ற செய்தி பத்திரிகைகளில் வந்தது. அதை எம். ஜி. ஆர். பார்த்து இருக்கிறார். எனக்குத் தெரியாமல் பெயரைச் சேர்த்தது யார்? என்று கேட்டு இருக்கிறார்.

அதன் பிறகு பண்ருட்டியை ஐ. நா. சபைக்கு போகக் கூடாது என்று அமெரிக்காவில் இருந்தே எம். ஜி. ஆர். உத்தரவிட்டார்.

#### சதித்திட்டம்

பிரதமர் ராஜீவுடன் இலங்கைத் தமிழர் பிரச்சினைப் பற்றி மட்டும் பண்ருட்டி பேசவில்லை. எம். ஜி. ஆருக்கு உடல்நலம் கெட்டு விட்டது. வேறு ஒருவரிடம் பொறுப்பை ஒப்படைக்கச் சொல்லுங்கள் என்று பிரதமரிடம் அடிக்கடி கூறி, அவரது மனதை விஷமாக்கியவர் இந்த பண்ருட்டி தான்.

#### ராஜீவ் கடிதம்

அதன் காரணமாகத்தான் பிரதமரும், பொறுப்பை வேறு ஒருவரிடம் ஒப்படையுங்கள் என்று எம். ஜி. ஆருக்குக் கடிதம் எழுதினார்.

இப்படிப்பட்ட வஞ்சக சூழ்ச்சியைச் செய்தவர் பண்ருட்டி!

#### நொறுங்கியது

தமிழகத்தில் கூட்டு மந்திரி சபை அமைக்க 84 – லேயே முடிவு செய்தார்கள் துரோகிகள்! அப்போது முடியவில்லை. எம். ஜி. ஆர்' மறைந்தவுடன் முயன்றார்கள். ஆனால், காங்கிரசாரும், பண்ருட்டியும் போட்ட திட்டம் நொறுங்கியது!

இவ்வாறு வீரப்பன் பேசினார். ★

## கிளி உருவில் வந்த கழுகு

ஆட்சிக் கலைப்பு என்பது காங்கிரஸுக்குத் தேன் குடிப்பதுபோல.

காங்கிரஸ் எதிர்ப்பு என் இரத்தத்தில் கலந்தது.

சிறையில் தள்ளினாலும் சரி, தூக்கில் தொங்கினாலும் சரி காங்கிரஸின் வேரும் வேரடி மண்ணும் இல்லாமல் செய்து விட்டுத்தான் சாவேன்.

நமக்கு முதல் எதிரி காங்கிரஸ், இரண்டாவது எதிரி ஜெயலலிதா கும்பல்.

கிளி உருவத்தில் வந்துள்ள கழுகுதான் ஜெயலலிதா.

'எனக்கு இருந்த கட்டுப்பாடு அகன்று விட்டது. இனி நான் சுதந்திரப்பறவை— என்று ஜெயலலிதா அறிக்கை விட்டார்.

சுதந்திரப்பறவை என்றால் பல மரங்களில் உட்காரும்: எங்கும் பறந்து சென்று எதிலும் உட்காரும் என்று தானே பொருள்.

— முன்னாள் அமைச்சர் காளிமுத்து விருத்தாசலம் டத்தில் பேசியது. ★


உங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தை
வளமாக்க
உழைக்கும்போதே சிறுகச் சிறுகச் சேமியுங்கள்.............

சேமிப்புக்கு வழிகாட்டி "ஷப்ரு"
மாதாந்த சேமிப்பு
உயர் வட்டியுடன்
உங்கள் கைகளுக்குக் கிடைக்க 'ஷப்ரு'வை நாடுங்கள்
மாதாந்தம் ரூபா 500 சேமித்தால்
36 மாதங்களில் ரூ. 23216/35
கிடைக்கும்

மாதந்தோறும் 100 ரூபாவின் மடங்குகளாக 12, 24, 36 மாதங்களுக்குச் சேமிக்க முடியும்.

மேலதிக விபரங்களை எமது அலுவலகத்திற்கு நேரில் வந்தோ அல்லது கீழேயுள்ள கூப்பனை நிரப்பி அனுப்புவதன் மூலமோ பெற்றுக்கொள்ளலாம்.

ஷப்ரு
யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்
61, நியூ புல்லர்ஸ் வீதி, கொழும்பு – 4.
207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தங்களின் மாதாந்த சேமிப்புத் திட்டம்பற்றி மேலதிக தகவல்களை தயவு செய்து அனுப்பும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

பெயர்: ..............................

விலாசம்: ..............................

தொழில்; ..............................

(C/5163) கையொப்பம்


## வாசகர் தராசு

## சஞ்சீவி ஒரு சிரஞ்சீவி

சனிக்கிழமை தோறும் வெளிவரும் 'சஞ்சீவி' ஒரு கலைப் பொக்கிஷம்.

ஞானவான் முதல் பள்ளிச்சிறார் வரை மனப்பூரிப்புடன் படித்து மகிழ்வதற்குரிய விஷயதானங்கள் சஞ்சீவியில் நிரம்பியுள்ளன.

'காலம் உயிர் போன்றது' என்ற தலைப்பில் சஞ்சீவியில் வந்த பகுதியைக் கத்தரித்து வீடு, அலுவலகம் முதலிய பிரதான இடங்களில் தொங்கவிடலாம். காலம் மானம் – உயிர்–'' அருமருந்தன்ன வாக்கியங்கள். வாழ்க கி. ஆ. பெ.

கருத்துக் கலசம், நெஞ்சை அள்ளும் பகுதி. மனந்திறந்து எழுதும் சொல்லோவியங்கள் நிரம்பி வழிகின்றன. 'டி.. ஆர். ஓ. தம்பிராசா போன்ற மாமன்னர்கள் நாங்கள் உத்தியோகம் பார்த்த காலத்துக்கு முன்பு – அரை நூற்றாண்டுகளுக்கு முன்பு இருந்தனர்.

''அயரா அன்பெனும் அதிர்வெண்'' — இத்தலைப்பில் திருமுறைகளையும் இறைவனையும் திரு. க. உமாமகேஸ்வரன் விளக்கியுள்ளது படிக்கப் படிக்க பேருவகை தந்தது.

எனதுரை தனதுரையாக நீறணிந்தேறுகந்
தேறிய நிமலன்''—

என்று சீர்காழிச் செம்மல் கூறியதும் இதுவே.

அமுதமானசெய்திகளைப் பசியோடு இருக்கும் எமக்குத் தரும் சஞ்சீவி சிரஞ்சீவியாகச் சஞ்சரிக்கட்டும்.

— ம. சி. சிதம்பரப்பிள்ளை
(ஓய்வு பெற்ற அதிகாரி, கல்வி அமைச்சு)
தெல்லிப்பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பண்பாட்டுக்கு கிடைத்த பரிசு

**முதுபெரும் எழுத்தாளர் திரு. சம்பந்தன் சாகுந்தல காவியத்தைப்படைத்தார்.**

**நாட்டார் இலக்கிய ஆய்வாளர் கலாநிதி இ. பாலசுந்தரம் காத்தவராயன்கூத்தைப் பதிப்பித்தார்.**

**இரண்டு நூல்களும் 1987 இல் வெளியாகின. அதற்காக இத் தமிழ்ப் பெரியார்களை கொழும்பு தமிழ்ச்சங்கம் அண்மையில் பரிசளித்துக் கௌரவித்தது.**

**இரண்டு பெரியார்கள் பற்றி [illegible] கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**

**-- கௌரி உத்தராடன் --**

திருநெல்வேலி மணல்தறை வீதி; அதிகாலை மணி 6–00. பூக்கூடையும் பூக் கொய்ய உதவும் கோலும் ஏந்தி ஒருவர் வருகிறார். நெடிதுயர்ந்த ஒற்றை நாடி உடல். மூக்குக்கண்ணாடியின் பின்னிருந்து ஆளைத்துருவும் தீக்ஷண்யம் மிக்க விழிகள். இடையில் கதர் முண்டு. தோளில் துண்டு. ஈழத்துச் சிறுகதை முதல் மூவரில் ஒருவரான சம்பந்தன் அவர்கள் தாம் அவர்.

சம்பந்தன் அவர்களை அணுகி, கொழும்புத் தமிழ்ச் சங்கக் கருணாலய பாண்டியனார் பரிசு பெற்றமைக்காக வாழ்த்தினால்,

'காயாரோசணர் வேடிக்கை பண்ணுகிறார்; பண்ணட்டும்' —எவ்வித பரபரப்புமின்றிச் சிரிப்பார்.

'புத்தகத்தைப் பரிசுக்கென அனுப்பவில்லை. ஆனால் தேடிப் படித்துப் பாராட்டிப் பரிசும் வழங்குகிறார்களே. கருணாலய பாண்டியனார் என்ற தமிழ் அறிஞரை நினைவு கூருகிறார்களே. உண்மையில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்துக்குத்தான் பரிசு வழங்க வேண்டும்'— மீண்டும் சிரிப்பார்; அவ்வளவுதான்.

### முதல் கதை

சம்பந்தன் எழுதிய முதற் சிறுகதை தாராபாய். 1938 இல் கலைமகளில் இது வெளிவந்தது. முதற்கதையும் தொடர்ந்த சில கதைகளும் சரித்திரப் பின்னணியிற் பின்னப்பட்டவை. வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் அப்போது ஆசிரியராய் இருந்த திரு. வைத்தியலிங்கம், 'சரித்திரக் கதைகள்தான் எழுத வரும் போலே' என்று கிண்டல் பண்ணினார். ரோசம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது சம்பந்தனுக்கு. அவர் சமூகக் கதைகள் எழுத ஆரம்பித்தார். கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜவோ, 'எழுது, எழுது' என்று சதா தூண்டிக் கொண்டே இருந்தார். சம்பந்தன் தொடர்ந்து எழுதினார். கிராம ஊழியனில் வந்த ஒரு கதையைத்தவிரமற்றையவை எல்லாம் கலைமகளில் வந்தவையே. 'அல்லயன்ஸ் கம்பனி'யாரின் 'கதைக்கோவை'யில் இவருடைய 'கலைமகள்' கதையொன்று (விதி) மறுபிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது.

லா. ச. ராவின் எழுத்தில் சம்பந்தனுக்கு தனியாத மோகம். லா. ச. ராவை இவர் சந்தித்திருக்கிறார். அவர் இவரைப் பார்த்து, ஒரு கதையை எத்தனை தடவை திருப்பி எழுதுவீர்கள்' என்றுகேட்க, இவர், 'பத்துத் தடவைக்கு மேல்' என்று சொன்னதும் லா. ச. ராவுக்கு ஒரே குஷி. 'அப்படித்தான் சொற்களை முறுக்கி (கைகளால் முறுக்கேற்றுவது போல் அபிநயித்தபடி) முறுக்கேத்தணும்' என்று பாராட்டினார்.

'என்னில் எவக்கினியன்,' என்று இவர் பாராட்டும் இவர் மாணவரும், 'பிரயாணி' (ஈழநாடு — பரிசு நாவல்) எழுதியதோடு மணியான சிறுகதைகள் பலவற்றை எழுதியிருப்பவருமான திரு. சு. இராஜநாயகன் அண்மையில் தமிழகத்தில் லா. ச. ராவைச் சந்தித்த போது 'தோளிலே துண்டோடு உங்ககூட வந்தாரே அவர் வரலியா?' என்று லா. ச. ரா கேட்டார். அந்தளவுக்கு லா. ச. ராவின் உள்ளத்தில் இடம்பிடித்திருப்பவர் சம்பந்தன். அதனால் தானோ என்னவோ லா. ச. ராவுக்குக் கிட்டிய அநுபவம் ஒன்று சம்பந்தனுக்கும் கிட்டியிருக்கிறது. 'சம்பந்தன் ஊமைக்குழல் ஊதுகிறார்' என்று விமரிசனம் பண்ணுவதான நினைப்பிற் கிண்டல் பண்ணிய ரஸிக சிகாமணிகளும் உண்டு. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் சம்பந்தன் கதைகளை ஆராய்ந்தே ஒருவர் M. A பட்டம் பெற்றுவிட்டார். அந்த அளவுக்குச் சிறுகதைத் துறையிற் சாதனை புரிந்தவர் சம்பந்தன். இல்லையென்றால்,

### வரலாற்றில் இடம் பிடித்தவர்கள்

சம்பந்தன் அவர்கள் சிறந்த சிறுகதை ஆசிரியர்.

சிறுகதை வரலாற்றில் அவருக்கு இடம் உண்டு.

ஆயின் ஈழத்துச் சிறுகதை வளர்ச்சிப் பாரம்பரியத்தில் அவருக்கு மிக முக்கிய இடம் உண்டு.

சம்பவத்தைச் சித்திரிப்பதிலும் பார்க்கச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்ட உணர்வுகளைச் சித்திரிக்கும் பண்பே அவரிடம் மிகுந்து நிற்கிறது. அவர் அகநோக்குடையவர். நுண்ணுணர்வுடைய படைப்பாளி.

(87–09–17—சஞ்சீவி)

என்றெல்லாம் பேராசிரியர் சிவத்தம்பி பாராட்டுவாரா?

கி. வா. ஜகந்நாதன் தமக்கே உரிய பாணியில் சிலேடை நயம் தொனிக்க,

சம்பந்தன் கதைகள் எழுதுகிறார். நீங்கள் பிரதிட்பகாரம் பண்ணக் கூடாதா? என்று ராஜநாயகனைக் கேட்டார். எங்கெல்லாமோ தேடிச் சம்பந்தன் கதைகளைத் திரட்டிய ராஜநாயகன் தம்முடைய அருமையான கையெழுத்திற் பிரதிபண்ணி அனுப்பி வைத்தார். கதை கட்டுக் காணாமற் போய்விட்டது. 'இடைக் காலத்தில் 'விவேகி' சம்பந்தன் சிறுகதைச் சிறப்பிதழாக மலர்ந்து சம்பந்தனின் சிறுகதைப் பணியை ஆசீர்வாதம் பண்ணியதுண்டு. இப்போது அவர் கதைகளைத் திரட்டி வெளியிடும் பணியில் யாழ் மாவட்டக் கலாசாரப் பேரவை ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது.

### வாக்குப் பலித்தது

ஒரு காலத்திற் கலைமகளில் சிறுகதைகள், ஈழகேசரியில் நாவல் (பாசம்) என்று எழுதியவர் சம்பந்தன். இப்போது அந்தத் துறைகளை அவர் திரும்பியும் பார்ப்பதில்லை. 'இனிக்கதைகள் எழுதுவதில்லை' என்று தீர்மானமாகக் கூறிவிட்ட சம்பந்தனை, 'என்ன அப்படியொரு விரக்தி? எழுதுங்கள்' என நேரிலும் கடித மூலமும் பல தடவை வேண்டிய ஜகந்நாதன், கடிதமொன்றில் 'தமிழ்த்தெய்வத்தின் சாபத்துக்காளாகப் போகிறீர்கள்' என்று வேறு மிரட்டியிருக்கிறார். மனுஷன் அசையவில்லை. 'சரி இனிக் கவிதைகள்தான் எழுதுவீர்களாக்கும்' என்றார் கிண்டலாக கி. வா. ஜ. அவர் வாக்குப் பலித்து விட்டது. சாகுந்தல காவியம் பாடி முடித்தார் சம்பந்தன். கி. வா. ஜ. காவியத்தைப் படித்தார்; பாராட்டினார். அணிந்துரையாக அது காவியத்தை அணி செய்கிறது.

1963 சித்திரா பௌர்ணமியில் ஆரம்பிக்கப்பட்ட சாகுந்தல காவியம் 1964 தைப்பூசத்தில் நிறைவுற்றது. தொடர்ந்து 24 ஆண்டுகள் (1964—1987) பட்டை தீட்டினார், மெருகேற்றினார். படைப் பொன்னைப் பட்டை தீட்டிய வைராக்கிய பின்பும் மேலும் பட்டை தீட்டி ஜாஜ்வல்யமாக்க வேண்டுமென்று துடிப்பவர்; நன்றாகச் சுருதி கூட்டப்பட்ட வீணையாகி விட்ட அக்காவியத்தைத் திருப்பி எழுத வேண்டும் என்று இன்னமும் சொல்லிக் கொண்டிருப்பவர் அவர்.

ஆங்கிலத்திலே Doyen என்றொருசொல் உண்டு. பிரெஞ்சு மொழியிலிருந்து ஆங்கில மொழிபெற்றுக்கொண்ட பல சொற்களில் இதுவும் ஒன்று. ஒரு சங்கத்திலே அல்லது அமைப்பிலே அல்லது குழாத்திலே மூத்தவர், முதல்வர், தலையாயவர், பலராலும் மதித்துப் போற்றப்படுபவர் என்றெல்லாம் பொருள் தரும் பதம் அது. இன்று தமிழுலகிலே முற்போக்கு எழுத்தாளருள் Doyen என்று வழங்கத் தக்க தனிச்சிறப்பு வாய்ந்தவர் சிதம்பர ரகுநாதன் என்று கூறுவது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுவதொன்றாகும்.

(மல்லிகை — ஜூலை 1982)

எனப்பேராசிரியர் கைலாசபதி எழுதினார். இங்கே, 'தமிழுலகிலே முற்போக்கு' என்ற தொடரை நீக்கி 'ஈழத்தமிழ்' என்றும் 'ரகுநாதன்' என்ற பெயரை நீக்கிச் 'சம்பந்தன்' என்றும் மாற்றி அமைத்து விட்டால், சம்பந்தன் அவர்களுக்கு எத்துணை பச்சிதமாகப் பேராசிரியர் எழுதியது பொருந்துகிறது என்று வியக்காதிருக்க முடியவில்லை.

சம்பந்தன் அவர்களின் எழுத்துலகப் பொன்விழா (1938 – 1988) ஆண்டு இது. சாகுந்தல காவியத்துக்குக் கிடைத்த பரிசு தமிழ்ப்பண்பாட்டுக்குக் கிடைத்த பரிசு.

### கலாநிதி: பாலசுந்தரம்

திருநெல்வேலி காளி கோயில் வீதி. காத்தவராயன் நாடகம். சிவராத்திரி விழிப்புக்கென விடியவிடிய ஆடுகிறார்கள். அந்த நாடகத்தைக் கொழும்பில் அரைகுறையாக ஒரு தடவை பார்த்தபின் எப்போது பார்க்கக் கிடைக்கும் என்று துடித்த ரஸிகர் ஒருவருக்கு தலைகால் தெரியாத 'புளுகம்'. நாடகத்தை முதலிலிருந்து முடிவுவரை முதல் வரிசையில் அமர்ந்து ரஸித்தார். அவ்வளவுதான் இந்த நாடகப்பிரதியைப் பதித்து வெளியிட வேண்டும் என்ற வெறியே பிறந்து விட்டது அவருக்கு. அவர்தான் கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்கள்.

### சலிப்பு இல்லாதவர்கள்

கலாநிதி பாலசுந்தரம் 1971 இல் கொழும்புப் பல்கலைக்கழக விரிவுரையாளரானார். நாட்டார் இலக்கியத் துறையில் ஆய்வுகள் மேற்கொள்ளும் வாய்ப்புக்கள் அவருக்குக்கிட்டின. கிழக்கிலங்கையில் கிராமம் கிராமமாக அவர் சுற்றினார். நாட்டார் பாடல்களைப் பாட வல்லாரைத் தேடிப்பிடித்து ஒலிப்பதிவுகள் செய்தார். அண்ணாவிமார்களை அணுகி அவர்களிடமிருந்த கூத்துக் கொப்பிகள், ஏடுகள் என்பவற்றையும் சேகரித்தார். இவற்றையெல்லாம் நூலுருக் கொடுப்பதற்காகத் திருத்தமான பிரதிகளாகத் தயாரித்தும் முடித்தார். 1983 ஜூலை வன்செயல்களின் போது அத்தனை பிரதிகளும் சாம்பராகி விட்டன. ஆனால் இந்த முயற்சியில் மீளவும் ஈடுபடுவதில் கலாநிதி அவர்களுக்கு எவ்வித சலிப்பும் ஏற்படுவதேயில்லை. இப்போது வெடியரசன் நாடகத்தைப் பதிப்பிக்கும் முயற்சியில் இவர் ஈடுபட்டிருக்கிறார். இந்த நாடகத்தின் பிரதிகளை வைத்திருப்போர் தன்னுடன் தொடர்பு கொண்டு பிரதிகளைத் தந்துதவவேண்டும். பல பிரதிகள் கிடைப்பின் ஒப்புநோக்கிப் பாடபேதங்களை ஆராய்ந்து திருத்தமான சிறந்த பதிப்பை வெளிக்கொணரமுடியும் என்று அவர் நம்புகிறார். பிரதிகளை வைத்திருப்போர் இந்தநல்ல முயற்சிக்கு உறுதுணையாவார்கள் என்பதில் [illegible] மில்லை. நெல்லியடி அன்னை[illegible]யார் சி. [illegible] காத்தவராயன் நாடகப்பிரதியாக்கத்துக்கு உறுதுணையாக அமைந்ததை இவர் நன்றியுடன் நினைவுகூருகிறார். அவரிடமிருந்து நாடகப் பிரதியை இவர் பெற்ற விதமே சுவையானதுதான். பிரதியென்று ஒன்று சணபதிப்பிள்ளையிடம் இருக்கவில்லை. நாடகம் முழுவதுமே அவருக்கு மனப்பாடம். ஒலிப்பதிவு செய்து பிரதியாகத் தயார் செய்தது கலாநிதி அவர்கள்தான். வடக்குக் கிழக்கு மாகாணங்களின் கிராமிய நாடகங்களே பல ஏடுகளாயும் கொப்பிகளாகவும் தனியார் வீடுகளில் முடங்கிக்கிடந்தன. இன்று அவற்றில் பல 'ஷெல்'லுக்கிரையாகிவிட்டன. இவற்றில் எஞ்சியிருப்பவற்றையேனும் அச்சுருவிற்கண்டு நாட்டாரிலக்கிய உ. வே. சாமிநாத ஐயர் ஆகிவிட வேண்டுமென்று துடிப்பவர் கலாநிதி பாலசுந்தரம்.

கலாநிதிக்கு நாட்டார் இலக்கியம் சம்பந்தப்பட்ட நேரடி அனுபவங்களும் நிறையவே இருக்கின்றன: மட்டக்களப்பு வசந்தன் ஆட்டகுழுவில் ஒருவராய்த் தமது மாணவப்பருவத்தில் பல அரங்குகண்ட கிராமியக் கலைஞர் இவர்.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் தயாரித்த வாலிவதைநாட்டுக்கூத்தில் அநுமன்க்ஷாக்ஷாத் கலாநிதியவர்களே.

கொழும்புப் பல்கலைக்கழகக் கலைக்குழு (Arts council)வின் தமிழ்ப்பிரிவுக்கும் பொறுப்பாயிருந்து கலைவிழாக்கள் நாடகப் போட்டிகள் என்பவற்றை இவர் சிறப்பாக நடத்தியிருக்கிறார்.

விந்தைச் சுவைக்கலைகள் என்றதலைப்பிலான 30 நிமிட வானொலி நிகழ்ச்சிக்குரிய பிரதிகளை எழுதித்தயாரித்த காலத்தை (1982-1983) கலையுலகில் நிறைவுரண்ட காலமாக இவர் கருதுகிறார்.

### வேண்டுகோள்

கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலுமாக சுமார் பத்து ஆண்டுகளுக்கு மேலாகப் பல்கலைக்கழக மாணவர்களைச் சில இலக்கியத்துறையில் ஈடுபடுத்திவருவதோடு கவிதை அரங்கம், இலக்கியப் போட்டிகள் என்பவற்றையும் இவர் நடத்திவருகிறார்.

'நாட்டார் இலக்கிய கலைத்துறைகளிற் பல நூல்களை வெளியிடுவதற்குரிய விரிவான திட்டங்கள் பல உள்[illegible]. உடனே வெளியிடத்தக்க தயார்நிலையிலும் நாடகப் பிரதிகள் பல உள்ளன. நிதிபடைத்தோர் முன்வந்து பதிப்பிக்க உதவவேண்டும்.'

—இது ஈழத் தமிழகத்துக்குக் கலாநிதியவர்கள் விடுக்க விரும்பும் ஒரேயொரு வேண்டுகோள்.

'புலவரையும் [illegible] நரையும் கௌரவித்துப் பரிசு கொடுக்கும் பொறுப்பு அரசின் கலாசார துறைக்குரியது. சாகித்திய மண்டலம் இருந்தது: இருக்கிறது; என்ன பயன்? இது கலாநிதி அவர்களின் ஏக்கம்.

'1986 இல் வெளிவந்த நூலின் இலக்கிய[illegible] தரத்தையும் பண்பா[illegible]கிய தத்துவத்தையும் [illegible] மதிப்பீடு செய்[illegible] கொழும்புத் தமிழ்ச்சங்[illegible] நூலுக்குப் பரிசளித்துள்ளது என்பதை அறிந்தபோது திறமையைப் போற்ற ஒரு தமிழ்ச் சங்கமாவது செயற்படுகிறதே. அது வாழட்டும்; வளரட்டும்'

—இது கலாநிதியவர்களின் வாழ்த்து.

'பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோர் கிராமிய நாடகங்களைப் பதிப்பித்தபோது சாகித்திய மண்டலப் பரிசுகிடைத்தது. அதே பணியை நானும் செய்தேன். எனக்குத் தமிழர் சங்கமாம் கொழும்புத் தமிழ்ச் சங்கம் பரிசளித்திருக்கிறது'

—இது கலாநிதியவர்களின் [illegible]

# இளைஞரின் வருங்கால வாழ்வு சிறக்க

# பாலியல் கல்வி அவசியம் தேவை!

மலரினும் மெல்லிது காமம் சிலர் அதன்
செவ்வி தலைப்படுவார் — குறள்

**எம். ஆர். லம்போதரன்**

இன்று இளம் சமுதாயத்தினரை எதிர்நோக்குகின்ற பெரும்பிரச்சினைகளில் ஒன்று பாலியல் சம்பந்தமானது: இது தனி மனித ரீதியாக, சமுதாயரீதியாக பாரிய தாக்கங்களை ஏற்படுத்துகிறது: பெரும்பாலும் எல்லா இளைஞருக்கும் பொதுவானதாயும் இருக்கின்றது.

துரதிஷ்டவசமாக பாலியலைப் பற்றிப்பேசுவதும் நினைப்பதும்கூட ஈனமானகாரியம்என்ற கருத்து எம்மவர்களிடையே நிலவுகின்றது. இப்படிப்பட்ட எண்ணங்களால் பீடிக்கப்பட்டிருக்கும் சமுதாயத்தில் இளைஞர்களின் பாலியல் அறிவு குறைவானதாகவே இருக்கின்றது: எத்தனையோ இளைஞர்கள் பாலியல் சம்பந்தமான சந்தேகங்களை மனதில் வைத்துக்கொண்டு அவற்றைத் தீர்ப்பதற்கு வழியில்லாமல் ஏங்குகின்றனர். பலர் மறைமுகமாக, வக்கிரமான உணர்வுகளைத் தூண்டுகின்ற தவறான வழிவகைகளை நாடுகின்றனர்: இதனால் தங்களுக்கு உடல், உள, ஆன்மரீதியான ஊனங்களை (Physical, Mental and Spritual Traumas) ஏற்படுத்திக்கொள்வதுடன் சமுதாயத்திலேயும் பல தீங்கான தாக்கங்களை ஏற்படுத்துகிறார்கள். இப்பாரிய பிரச்சினைகளை நவீன முறையில் விஞ்ஞான ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும், மருத்துவ ரீதியாகவும் அணுகி (Scientific, Psychological and Medical Approaches) எமது கலாசாரத்துக்கும், பண்பாட்டுக்கும் மாறுபடாதவகையில் தீர்வுகாண முயலவேண்டும். இதற்கு பாலியல் கல்வி (Sex Education) இளைஞர்களுக்கு அளிக்கப்படவேண்டியது அத்தியாவசியமானதாகும்.

பாலியல் கல்வி,பலர் நினைத்துக்கொண்டிருப்பதுபோல வெறுமனே உடலுறவு பற்றிய போதனைகள் அல்ல. பாலியல் கல்வி ஆண்-பெண் இனப்பெருக்க அங்கங்களின் அமைப்பு,அவற்றின் தொழிற்பாடு பருவமடையும் பிராயத்தில் ஏற்படும் உள, உடல் ரீதியான மாற்றங்கள், காதல், திருமணமும் அதன் நோக்கங்களும், உடலுறவு, பாலியல் பிரச்சினைகளும் குறைபாடுகளும், பாலுறவினால் பரவும் நோய்கள், குடும்பநலன்; குடும்பக்கட்டுப்பாடு, கர்ப்பம், மகப்பேறும் மகவளர்ப்பும், ஆண்–பெண் நட்புறவு; உளவியல்போன்ற பல விடயங்களை உள்ளடக்கிய ஒரு கற்கை நெறியாகும்.

### குற்ற உணர்வு

எமது இளைஞர்களில் பெரும்பாலோருக்கு பருவமடையும் பராயத்தில் ஏற்படும் சாதாரணமான உடல், உள ரீதியான மாற்றங்களைப் பற்றிய மிகக்குறைந்த அறிவு தானும் இல்லை.பலர் தவறான கொள்கைகளையும்; விளக்கங்களையும் கொண்டவர்களாய் உள்ளனர். பெரும்பாலோர் சாதாரண உடற்றொழிலியல் நிகழ்வுகளையே அசாதாரணமாக எண்ணிக் கிலியுறுகின்றனர். இதனால் குற்றவுணர்வுக்கும் (Guilty Feelings), தாழ்வு மனப்பான்மைக்கும் (Inferiority Complex) உள்ளாகின்றனர். அவர்களின் எதிர்கால வாழ்க்கை பாதிக்கப்படுகிறது. கல்வி,தொழில் மற்றும் விடயங்களில் அவர்களின் வினைத்திறன் (Efficiency) குறைகின்றது. வெகு சிலரே தகுந்த வைத்திய, உளவியல் ஆலோசனையை ((Proper Medical and Psychological Counselling) நாடுகின்றனர். ஏனையோர் வைத்திய,உளவியல் ஆலோசனையை நாடுவதற்குக்கூட வெட்கப்பட்டு அஞ்சி இப்பாதிப்புக்களை மறைத்து தமக்குள்ளேயே புழுங்கிக்கொள்கின்றனர்.

பாலுறவு மூலம் கடத்தப்படும் நோய்களைப்பற்றிய அறிவு படித்தவர்களிடம்கூட மிகக்கீழான நிலையிலுள்ளது. பாடசாலை மாணவர்கள்கூட இந்நோயினால் பீடிக்கப்பட்டு சிகிச்சைபெறுவது ஒன்றும் ஆச்சரியமான செய்தியல்ல. எயிட்ஸ் (AIDS) என்னும் கொடிய நோய் பரவத் தொடங்கியதிலிருந்து இங்கும் இதைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்ற விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருப்பதுபோலத் தோன்றுகின்றது. எமது நாட்டிலும் இந் நோய் தன் தாக்கத்தை ஆரம்பித்துவிட்டது.

### வெள்ளம் வருமுன்......

மேற்கத்தைய நாடுகள் இவ்வாறு பாலியல் பிரச்சினைகளால் ஏற்படும் பளுவைத் தாங்கக்கூடிய அளவிற்கு பொருளாதார விஞ்ஞான மருத்துவரீதியாக வலிமை பெற்றதாயிருப்பதால் அங்கு தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் ஏற்படும் பாதிப்புகளும் பாரியனவல்ல: ஆனால் எமது சமுதாயம் இப்பளுவைத் தாங்கக்கூடிய அளவுக்கு இல்லை: இவ்விளைவுகளைத் தடுப்பதற்கு வருமுன் காப்பதே சிறந்த வழி. இதற்குத் தகுந்த பாலியல் அறிவை பாலியல் கல்விமூலம் அளிப்பது இலகுவானதும், செலவு குறைந்ததும், வினைத்திறன் கூடியதுமான வழியாகும். எம்மவர்கள் வெள்ளம் வருமுன் அணைகட்ட முன்வருவார்களா?

பலர் நினைப்பதுபோல பாலியல் கல்வி மாணவர்களுக்கு அறியாத விடயங்களை திணிக்கும் ஒரு வழியல்ல. அவர்களுக்கு ஏற்கனவே தெரிந்த விடயங்களை (பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு இதைப்பற்றி ஒன்றுமே தெரியாது என்று நினைத்துக் கொண்டிருப்பது வேறு விடயம்) நன்கு தெளிவுபடுத்தி சரியானவிளக்கங்களை அளித்து நெறிப்படுத்துவதே பாலியல் கல்வியின் நோக்கம்.

### பாடசாலைகளில் கருத்தரங்கு

பிள்ளைகள் பருவமடையும் பராயத்திற்கு முன்னிருந்தே பாலியல் கல்வி அளிக்கப்படவேண்டியது அவசியம்: அல்லது ஆகக்கூடியது 10ம் வகுப்பிலிருந்தாவது [G. C. E. (O/L)] கற்பிக்கத் தொடங்கலாம்: வீட்டில் பெற்றோரே பாலியல் சம்பந்தமான சரியான விளக்கங்களை பிள்ளைகளுக்கு அளிக்கலாம்: ஆனால் இங்கு பெற்றோருக்கு போதிய, சரியான பாலியல் அறிவு இருப்பதும், உளவியல் ரீதியான அணுகுமுறையும் அவசியமாகின்றது. ஆகவே ஆசிரியர்கள் இது விடயத்தில் கூடிய பங்களிப்பை ஆற்றக் கூடியவர்களாய் இருக்கிறார்கள்: ஆரம்ப நிலையில் உளவியல், வைத்திய நிபுணர்களின் உதவியுடன் பாடசாலைகளில் பாலியல் கருத்தரங்குகளையாவது நடத்தலாம்: இந் நடைமுறைகளின்மூலம் ஆன்மீகரீதியாகவும், உளரீதியாகவும், உடல்ரீதியாகவும் உறுதிபடைத்த வினைத்திறன் மிகுந்த இளைஞர் சமுதாயத்தை உருவாக்க முன்வருவோமாக! ★

## பொது அறிவுப்போட்டி இல. 8

| | | |
|---|---|---|
| 1. | வலைவீசிப் பிடிப்பது எதை? | மீன் / மான் |
| 2. | எதனால் சிறப்பு அடைபவர்கள் உண்டு? | பிறப்பு / இறப்பு |
| 3. | முருகனை மணந்தது யார்? | வள்ளி / தெய்வானை |
| 4. | வாழ்க்கையில் ஏற்படுவது? | விபத்து / ஆபத்து |
| 5. | உதைக்கக்கூடியது எது? | மாடு / கழுதை |
| 6. | மரத்துக்கு மரம் தாவுவது எது? | அணில் / வௌவால் |
| 7. | கையினால் நெய்வது எது? | கதர் / கைத்தறி |
| 8. | சோர்வடையச் செய்வது எது? | சோர்வு / தூக்கம் |
| 9. | கேள்விக்குக் கிடைப்பது எது? | விடை / விளக்கம் |
| 10. | அரசர்கள் கட்டுவது எது? | கோட்டை / கோபுரம் |
| 11. | காற்றில் பறப்பது எது? | பட்டம் / காற்றாடி |
| 12. | படிப்புக்கு ஏற்ற நேரம் எது? | காலை / மாலை |

பெயர்:- ..................
விலாசம்:- ..........................
..............

பொது அறிவுப்போட்டி இல: 8
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

——— இங்கே வெட்டுக ———

### நிபந்தனைகள்:

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ளமுடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 13. 7. 88 புதன்கிழமைக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**பொது அறிவுப் போட்டி இல: 7 இன் சரியான விடைகள்:**

1. மரம், 2. இளமை, 3. சேமிப்பு, 4. கதவு, 5. நாய், 6. தராசு, 7. உயிர், 8. கோடை, 9. நாதம்; 10: ஏழு; 11: தொகை; 12: நாணயம்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் - கொழும்பு
விமான சேவை விசேட போக்குவரத்து வசதியுடன் தினசரி நடைபெறுகிறது. முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.
TELEX MESSAGES, கடிதங்கள், சிறு பொதிகள் விமான மூலம் அனுப்பப்படும்.
MACK TRAVELS
1St - Lane, Pt - Pedro Rd, Jaffna.

சஞ்சீவி சஞ்சிகை
02 - 7 - 88 சனிக்கிழமை

★ குறைந்த சட்டணத்தில் விமான டிக்கற் CONFIRMATION, RECONFIRMATION and CANCELLATION.
★ பாஸ்போட் பொண்டிங் இந்தியன் விசா.
ஆகியவைக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.
MACK TRAVELS
Jaffna.

கருத்துக் கலசம் — மயூரா

## கோவிலில் சண்டை

மனிதனின் துன்பங்களையும், துயரங்களையும் நிரந்தரமாகப் போக்கவல்லது ஆன்மீகம் எனும் மருந்து தான் என எழுதுகிறோம்; பேசுகிறோம். தமிழர்கள் சமயப்பற்று மிக்கவர்கள்; ஆன்மீக நாட்டம் உள்ளவர்கள் என்று சொல்கிறோம்; அப்படிக் காட்டிக் கொள்ளவும் முயல்கிறோம்.

யாழ்ப்பாணத்தவர் சைவம் வளர்த்தவர்கள்; தமிழ் வளர்த்தவர்கள் என்று பழம் பெருமை பீற்றுகிறோம். தமிழ்க் கலாசாரமும் பண்பாடும் சமயப் பாங்கானவை என்கிறோம். மக்கள் சமயாசாரம் மிக்கவர்கள் என எங்களை நாமே உயர்த்திப் பேசுகிறோம்.

ஆனால் சொந்த வாழ்க்கையில், நடைமுறையில்-நாம்—

ஆசார சீலரா?

போலித்தனம் கலவாத உண்மையான ஆன்மீக நாட்டம் கொண்டவர்களா?

சமய வாழ்க்கை வாழ்கிறோமா?

சமய நெறி கடைப்பிடிப்பவர்களா?

சொல்லும் செயலும் ஒன்றாக ஒழுகுபவர்களா?

இல்லை!

ஒவ்வொரு கேள்விக்கும் பத்துப் புள்ளிகளுக்கு மேல் பதில் அமையாது!!

எங்கள் பிரதேசம் எங்கும் கோவில்கள். நகரில், கிராமத்தில், வீதியில், ஒழுங்கையில், வீட்டில், வளவில் என்று எங்கும் கோவில்கள் நிறைந்திருக்கின்றன.

ஆன்மீக நாட்டம் கொண்டவர்கள், தெய்வீகச் சிந்தை உள்ளவர்கள் என்று எம்மைப் பற்றிப்பிறர் எண்ணிக்கொள்ள அவை ஏதுவாக இருக்கலாம்.

ஆனால்......?

ஊருக்கு ஊர், குறிச்சிக்குக் குறிச்சி கோவில் சண்டை நடக்கிறது!!

நான் தர்மகர்த்தா, நீ தர்மகர்த்தா என்று ''கோர்ட்டு''ச் சண்டை!!

திருவிழா நடக்கும்போது தொந்தி வயிற்றை வெளியில் காட்டி, பட்டுவேட்டி சால்வையுடன், கழுத்தில் தங்கச்சங்கிலி மின்ன நாலு பேருக்கு மத்தியில் தான் பெரியவர் என்று காட்டிக் கொள்ள வேண்டும் என்ற அதிகார ஆசை! கோவிலைச் சாட்டி நாலு பணம் உழைக்க வேண்டும் என்ற பொருள் ஆசை!

ஆணவமும், ஆசையும் மலங்கள் என்கிறோம். ஆனால் ஆண்டவன் சந்நிதியிலேயே அவற்றை நிலை நிறுத்த முனைகிறோம்:

இவற்றுக்குத்தான் பெயர் ஆன்மீகமும், சமயமுமா? நமது சமூகக் கட்டமைப்பை அவை பிரதிபலிக்கின்றனவா?

ஆலய நிர்வாகத்துக்கும், ஆட்சிக்கும் சண்டைபோடும் வெட்கக்கேடு வேறு எந்த மண்ணிலும் உண்டா என்பது சந்தேகம். அதில் எம்மவரை விஞ்ச வேறு எவர் வருவார்?

கோவில் சண்டை; வெட்கத்திலும் வெட்கம்!! வேண்டவே வேண்டாம் அது!! ★

# ஆதிசங்கரர் முதல் ஐன்ஸ்டீன் வரை விளக்கமளித்த உபநிடதத் தத்துவம்

## அழியும் மனிதனின் பின்னால் அழிக்க முடியாத ஆன்ம சக்தி

பிராணன் என்பதுதான் மிக உயர்ந்த சக்தி. அது மனிதன் இடத்தில் இருக்கிறது. அதன் முழுப்பலனையும் அடைவதற்கே மனிதன் பிராணாயாமத்தைச் செய்கிறான். அதற்கு அவன் உடலும் உள்ளமுமே சோதனைக்களமாக அமைகின்றன.

மனிதனுக்கு வேண்டிய புறச்சக்திகளை அமைத்துக் கொடுப்பதுதான்விஞ்ஞானம். அதனுடைய நோக்கமும் சக்தியைத் தேடுவதே.

ஆகையால் விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் ஒன்றுக்கு



ஆதிசங்கரர்

மற்றொன்று ஆதரவாக இருப்பவைதான்.

### ஆதிசங்கரர்

அழியக்கூடிய மனிதனுக்குப் பின்னால் அழிக்க முடியாத ஆன்மசக்தி இருக்கிறது. அதை வெளிப்படுத்துவதேவேதாந்த ஆராய்ச்சி.

இதைப் பார்வையை உள் நோக்கித் திருப்பி மனிதன் தனக்குத்தானே தான் செய்ய வேண்டும் பிறர் இதில் அவனுக்காகப் பங்கு கொள்ள முடியாது.

'தகப்பனின் கடன் சுமையை மகன் போக்கலாம். ஆனால் தந்தையின் பந்தாபாசச் சுமையை மகன் போக்க முடியாது. பசியையும் தாகத்தையும் மனிதன்எப்படித்தனக்குத் தானே தான் நிவர்த்தி செய்து கொள்ளவேண்டுமோ, அதைப்போலத் தனது ஆன்மீகத் தேவைகளை அவனே தான் முயன்று பூர்த்திசெய்து கொள்ள வேண்டும்' என்று விவேக சூடாமணி ஆதிசங்கரர் கூறுகிறார்.

### ஐன்ஸ்டீன்

'விஞ்ஞான ஆராய்ச்சியில் களம் மாறுவதில்லை. அவற்றில் வந்து இயங்கி மறையும் பொருள்கள் தாம் மாறுகின்றன. அந்த மாற்றத்தை உணருவதே ஆராய்ச்சியின் அடிப்படை' என்கிறார் பிரபல விஞ்ஞானி ஐன்ஸ்டீன்.

சக்தி அழிவதில்லை. அது ஏதோ ஒரு பரிணமத்தில் – செயற்பாட்டில் – மாறிக் கொண்டிருக்கிறது என்றார் அவர்.

'முடிவில்லாத சக்தி கொண்ட பிரும்மன் மாறுவதில்லை. அதை மூடிமறைக்கும் மாயை மட்டுமே வந்து சென்று மறைகிறது. இதை உணர்ந்து அதை அகற்றுவதே மெய்ஞ்ஞானத்தின் அடிப்படை'— என்று சாந்தோக்யோபநிடதத்தில் தந்தை மகன் சுவேதகேதுவிடம் கூறுகிறார். ஆணானாலும் பெண்ணானாலும், இளையவரானாலும் முதியவரானாலும் இது மாறுவதில்லை. இந்த உபநிடதம் கூறுவதும், விஞ்ஞானி ஐன்ஸ்டீன் அளிக்கும் விளக்கமும் ஒன்று தான். மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும் இங்குதான் சங்கமிக்கின்றன.

### சோக்ரடீஸ்

சோக்ரடீஸ், உலகப்புகழ் பெற்ற தத்துவஞானி. அவரைக் கிரேக்கர்கள் புரிந்து கொள்ளவில்லை. அவருக்கு விஷம் கொடுத்து அருந்தச் செய்து அவரைச் சாகும்படி செய்கிறார்கள். விஷத்தைக் குடிக்கிறோம் என்பதைத் தெரிந்து கொண்டே அருந்துகிறார் சோக்ரடீஸ். அவருடன் இருக்கும் பிளேட்டோ 'ஐயா! உங்கள் உடலை எப்படி அடக்கம் செய்வது?' என்று கண்ணீர் ததும்பக் கேட்கிறார்.

'அப்பனே! நீ இன்னும் புரிந்து கொள்ளவில்லையா? அழியக்கூடிய உடலை எப்படி அடக்கம் செய்தால் என்ன? அதைப்பற்றி ஏன் கவலைப் படுகிறாய்? அழிக்க முடியாதது ஆன்மா. அதை எப்படிப் போற்றுவது என்பதை நான் உணர்ந்து கொண்டேன்!' என்கிறார் சோக்ரடீஸ். அந்த மேதை நமது உபநிடத நூல்கள் சொல்லும் தத்துவத்தைப் புரிந்து கொண்டவர். அதன் உண்மையை உணர்ந்தவர்களுக்கு பயம் இல்லை. அதனால் தான் இறக்கும் தருணத்தில்கூட அவருக்கு எந்த விதமான பயமும் கலக்கமும் ஏற்படவில்லை.

### உண்மையே பெரியசக்தி

'உன்னுடைய ஆராய்ச்சியில் உண்மையான ஈடுபாடு இருந்தால், அதுவே உனக்குப் பெரியதுணை புரியும் சக்தியாக விளங்கும். ஏனென்றால், உண்மையை விடப் பெரிய சக்தி உலகத்தில் இல்லை!' என்று அணுசக்தி விஞ்ஞானி ராஜா ராமண்ணா தனது உரை ஒன்றில் கூறியிருக்கிறார்.

'பிருகதாரண்ய உபநிஷதம்' இந்தத் தத்துவத்தைத்தான் சொல்கிறது. 'நீ உணர்ந்து சொல்வது பிரமாணமாக – உண்மையை ஒட்டியதாக – இருக்க வேண்டும். அப்போது தான் உறுதியான, பயன்படும்படியான முடிவுகள் அதில் உனக்குக் கிடைக்கும்' என்று அது கூறுகிறது.

''எதையும் அப்படியே நம்பி ஏற்பது முட்டாள் தனம். சொல்லுவது எதிலும் உண்மைப் பொருளை ஆராய்ந்து உணர்பவனே அறிவாளி'' என்று ஆதிசங்கரர் கூறுகிறார்.

''ஒரு மனிதனின் வாழ்க்கையில் மிகப்பெரிய சாதனை. அவன்தான் நம்புவது உண்மையே என்று புரிந்து கொண்டு சொல்லும் சக்தியைப் பெறுவதுதான்'' என்று கூறுகிறார் விஞ்ஞானி ஜோன் ஹக்ஸ்லி.

என்னே ஒற்றுமை?

### 'தத்வமஸி'

மதம் என்பதைப் பிறநாடுகளில் எந்த விதமான கேள்வியும் கேட்காமல் அப்படியே ஏற்றுக் கொள்கிறார்கள். நமது நாட்டில் மதம் என்பது மெய்யை உணருவது; உண்மையைப் புரிந்து கொள்வது. ஆகையால் இந்து மதத்தில் இந்த சத்திய சோதனைக்குத் தான் முழு மதிப்புக் கிடைக்கிறது. அதை உணர உணர அவன் மேம்பாடு அடைகிறான்.

'தத்வமஸி' – உன்னுள் இருப்பதே நீ ஆவாய் - என்பது இந்துமதம் தந்த பேரறிவு. இன்று உலகெங்கும் அது போற்றப்படுகிறது. அப்படித் தனக்குள்ளே இருக்கும் ஆன்ம சக்தியைத் தானே தேடித்தான் உணர்ந்து பெற வேண்டும். நமது இயற்கையான சக்தி அதுதான். அது அழிவும் முடிவும் இல்லாதது. அதைத் தேடி உணருவதே நமது மதம் சொல்லிக் கொடுக்கும் தத்துவம். அதனால்தான் இந்து மதம் ஞானத்தைத் தேடும் முயற்சியாக அமைகிறது.

### மெய்ஞ்ஞான ஆராய்ச்சி

பொருள்களுக்கு உள்ளே இருக்கும் கருப்பொருளை, மிகச்



ஐன்ஸ்டீன்

சிறிய அணுவினுள் இருக்கும் பெரும் சக்தியை, பௌதிக ஆராய்ச்சிகள் உணர்த்துகின்றன. மனிதனின் உடலுக்குள்ளே, உள்ளத்துக்குள்ளே, உறைந்து கிடக்கும் உண்மையான மாபெரும் சக்தியை, மெய்ஞ்ஞான ஆராய்ச்சி உணர்த்துகிறது.

பாகவதத்தில் கிருஷ்ணபரமாத்மா உத்தவரிடம் கூறும் சுலோகம், இந்த விழிப்பை— ஞான உணர்வின் மலர்ச்சியை விளக்குகிறது.

''மிருகங்கள் தம்மைச்சுற்றி இருப்பனவற்றைப் புரிந்து கொள்வதில்லை. மனிதன் தன்னைச் சுற்றி இருப்பனவற்றைக் கவனித்துப் புரிந்து கொள்கிறான். மிருகங்கள் எதையும் பிறரிடமிருந்தே கற்றுக் கொள்கின்றன. மனிதன் தனக்குத் தானே ஆசிரியனாகின்றான். தானே உணர்ந்து புரிந்து கொள்கிறான்.

அப்படித் தெரிந்து கொள்ளும் போது அவன் படிப்படியாக முன்னேறுகிறான். நாகரிகம் பெறுகிறான். அதன் வசதிகளை அடைகிறான்.

மனிதனுக்கு இன்னொரு பெரிய சக்தி உண்டு. அது இப்படிப் புற ஆராய்ச்சிகள் மூலம் வசதிகளைப் பெற்று மேன்மை அடைவது மட்டும் அல்ல. இவற்றைக் கடந்து அவன் உண்மையைத் தனக்குள்ளே தானே தேடிப் பெறுகிறான். அப்படி உணரும்போது அவன் வாழ்வு முழுமை பெறுகிறது. அவனுள் ஆன்மாவாக விளங்கும் நானே எல்லா உயிர்களிடத்தும் உறைவதை அவன் புரிந்து கொள்கிறான். அவன் உள்ளத்தில் அன்பு தரும் அமைதி நிறைகிறது. அவன் பெறும் மிகப் பெரும் சக்தி உலகத்துக்கு அமைதியைத் தேடிக் கொடுக்கிறது.!!

இதைவிடத் தெளிவாக மெய்ஞானத்தின் அடிப்படையை எப்படி எடுத்துக் கூறமுடியும்?

விஞ்ஞான ஆராய்ச்சியின் முடிவுகள் உலக அமைதிக்கு மட்டுமே வழிகாட்டும் என்றும் சொல்ல முடியாது. ஆனால் மெய்ஞ்ஞான ஆராய்ச்சியின் முடிவுகள் அமைதிக்கு மட்டுமே அடிப்படையாக அமைகின்றன. அதுவே அதன் தனிச் சிறப்பு. ★

- சுவாமி ரங்கநாதானந்தா -

## மௌனம் ஒரு தெய்வீகக் கலை!

காற்றுக்கு இலைகள் அசைகின்றன; மலர்கள் அசைகின்றன; மரங்கள் கூட அசைகின்றன; ஆனால் மலைகள் அசைவதில்லை.

அசைவது பலவீனத்தைக் காட்டுகிறது. அசையாதது உறுதியைக் காட்டுகிறது.

சளசளவென்று பேசுகிறவன், எவ்வளவு பெரிய கெட்டிக்காரனாக இருந்தாலும், சொற்பொழிவாளனாக இருந்தாலும் தன் பலவீனத்தையே காட்டிக் கொள்கிறான்.

மௌனி முட்டாளாக இருந்தாலும் பலசாலியாகக் காணப்படுகிறான்.

'சும்மா இருப்பதே சுகம்' என்றார்கள்.

பேசாமல் இருப்பது பெரும் திறமை. பேசும் திறமையை விட அது மிகப் பெரியது. அதனால்தான் ஞானிகளும், பெரிய மேதைகளும் குறிப்பிட்ட சிலகாலங்களில் மௌன விரதம் அனுஷ்டிக்கிறார்கள்.

ஒன்றைச் சொல்ல வேண்டும் என்று விரும்பி அதைச் சுருக்கமாகத் தெளிவுபடுத்துகிறவன், பெரிய மரியாதையைப் பெற்று விடுகிறான்.

சிறிய விஷயத்தைக் கூட வளைத்து வளைத்து பேசுகிறவன், கேலிக்கு ஆளாகிறான்.

பயனில்லாத சொற்களைப் பாராட்டுபவனை 'மக்கள் பதடி' என்றான் வள்ளுவன்.

சுருங்கக் கூறி விளங்க வைத்தல் என்பார்கள்.

ஞானிகள் சில விஷயங்களைக் கூறுகிறார்கள்; அவை பொன்மொழிகளாகி விடுகின்றன.

பைத்தியக்காரர் பதினாயிரம் பேசுகிறார்கள்; அவை சீந்துவாரில்லாமல் போகின்றன.

மௌனம் ஒரு மகத்தான ஞானம்; அது ஒரு தெய்வீகக் கலை.

ஒரு குடும்பம். கணவன்—மனைவி இருவர். கணவனுக்கு மனைவியிடம் கோபம். ஆனால் அதை வெளியில் சொல்லவில்லை. மனைவியிடம் பேசாமலே இருக்கிறான். அவன் அவளைத் திட்டி இருந்தால், அது சாதாரணமாகவே போய் இருக்கும். அவன் பேசாமல் இருப்பதே அவளைச் சித்திரவதை செய்கிறது.

'அவன் பேசமாட்டானா, பேசமாட்டானா?' என்று எதிர்பார்க்கின்றாள். நான் என்ன தப்புப் பண்ணினேன்?' என்று மெதுவாகக் கேட்கிறாள். நள்ளிரவில் பக்கத்தில் வந்து உட்காருகிறாள். காலைப் பிடித்து விடுகிறாள். அவன் மௌனம் கலையவில்லை. அவன் மௌனம் தொடரத் தொடர அவள்தாகம் அதிகரிக்கிறது.

திடீரென்று ஒரு வார்த்தை அவன் பேசி விட்டான். அவளுக்குத் தெய்வமே கண் திறந்தது போன்று தோன்றுகிறது.

இன்றைக்கு நானும் அவரும் பேசிக்கொண்டிருந்தோம்' என்று, ஊர் முழுக்கச் சொல்லிக் கொண்டு வந்து விடுகிறாள்.

பத்து வார்த்தை திட்டி, நாலு உதை உதைப்பதை விட, அந்த மௌனம் மகத்தான சக்தியைப் பெற்று விடுகிறது.

கோவிலில் இருக்கிற சிலை, வருகின்ற பக்தனிடம் எல்லாம் பேசத்தொடங்குமானால் பக்தனுக்கே அலுப்புத் தட்டி விடும்.

'கோவிலுக்குப் போனால் அந்தச் சாமி நம்மை விடாதய்யா! உயிரை வாங்கி விடும்!' என்று பேசத்தலைப் பட்டு விடுவான்.

அது மௌனமாக இருக்க, இருக்க பக்தன்தான் பேசுகிறான்; பாடுகிறான்; புலம்புகிறான்.

'இவர் கொஞ்சம் பேச வைக்கமாட்டாரா?' என்று உலகத்தை ஏங்க வைக்க வேண்டும்.



- கவிஞர் கண்ணதாசன் -

ஆரவாரங்கள், வெறும் மயக்கங்கள்.

அரசியல்வாதியின் கூச்சல், வேறு வேலை இல்லாதவனின் புலம்பல்.

தொண்டைத் தண்ணீரைக் காய வைப்பதில் என்ன லாபம்?

இவர் கொஞ்சம் பேசமாட்டாரா? என்று உலகத்தை ஏங்க வைக்க வேண்டும்.

பேசத் தொடங்கினால் உலகம் கூர்ந்து கேட்க வேண்டும்.

கடலில் ஆழமான பகுதியில் அலை இருக்காது.

காடு அடர்த்தியாக இருந்தால், காற்று வேகமாக வீசாது.

வெறும் பொட்டை வெளியில் வீடு கட்டிப் பாருங்கள். பயங்கரக் காற்றடிக்கும்.

வெண்மேகம் போகின்ற வேகத்தைவிட, கார் மேகத்தின் வேகம் குறைவு.

சலனமற்ற மௌனம், பல அர்த்தங்கள் கொண்டது.

பிரெஞ்சு மொழியில் ஒரு வார்த்தைக்கு ஒரே அர்த்தம் உண்டு. ஆங்கிலவார்த்தைக்கு இரண்டு அர்த்தங்கள் வரும். தமிழ் வார்த்தையில் நான்கு, ஐந்து அர்த்தங்கள் வரும்.

ஆனால் மௌனத்தில் எல்லையற்ற அர்த்தங்கள் உண்டு.

பேசாமல் இருப்பவனே, பெரிய விஷயத்தைச் சொல்பவன்.

பேசிக் கொண்டிருப்பவன், ஞானக்கிறுக்கன்.

ஏராளமான வரிகளைக் கொண்ட இலக்கியங்களைவிட ஏழு வார்த்தைகளில் அடங்கி விட்ட திருக்குறள், உலகைக் கவர்ந்து விட்டது.

காலங்கள் தோறும் துணைக்கு வருகிறது. நிலையான தத்துவத்தைச் சொல்லுகிறது.

எனது நண்பர் ஒருவர், வாரத்தில் ஒரு நாள் மௌன விரதம்; ஒரு நாள் உண்ணா விரதம், வயது அறுபதைத் தாண்டுகிறது. ஒரு மாத்திரை கூட அவர் போட்டுக் கொண்டதில்லை.

ஆரோக்கியத்திற்கு மௌனம் மிக அவசியம்.

தவம் புரிகிறவன், 'ஓம் நமசிவாய' என்ற வார்த்தையைக் கூடச் சொல்வதில்லை.

மௌனமாக இருப்பவனுக்கு, ஆகாரம் குறைவாக இருந்தால் கூடப்போதும்.

அதிகம் பேசுவதால் அடிவயிறு சூடாகிறது; தீனி அதிகம் கேட்கிறது. அதன் மூலம் உடம்பு பெருத்து விடுகிறது.

வாரியார் சுவாமிகள் சாதாரணமான நேரங்களில் பேசுவது குறைவு. சொற்பொழிவிலும் அலட்டிக் கொள்ளாமல் பேசுவார். அந்த இரண்டு மணி நேரத்தைத் தவிர, மற்ற நேரங்களில் இரண்டொரு வார்த்தைகள்தான் பேசுவார். அதனால், ஒரு வேளை சாப்பாடே அவருக்குப் போதுமானதாக இருக்கிறது. குரல் கணீரென கம்பீரமாக ஒலிக்கிறது. நோயற்ற வாழ்வுக்கு அவர் இலக்கணமாகிறார்.

காஞ்சிப்பெரியவர்கள் பேசுவதும் குறைவு; அதனால் உண்பதும் குறைவு. இந்த வயதிலும் எங்கேயும் நடந்து செல்ல அவரால் முடிகிறது.

சில மனிதர்கள் ஆளைப் பிடித்தால் விடமாட்டார்கள்' அறுத்து எடுத்து விடுவார்கள்.

சிலர் ஒலிபெருக்கியைப் பிடித்தால் விடமாட்டார்கள்.

குடிப்பவர்கள் ஒரே விஷயத்தைத் திரும்பத் திரும்பச் சொல்வார்கள்.

மதுவையும், மங்கையையும் கூட மௌனமாக ரசிப்பதில் உள்ள சுகம், சள, சளவென்று பேசுவதில் இல்லை:

நிறையப் பேசுகிறவன் தன் வார்த்தைகளிலேயே காட்டிக் கொடுக்கப்படுகிறான்.

காதலில்கூட ஜாடையில் இருக்கிற சுகம், வாய்மொழியில் இல்லை.

மனிதரைவிட, பல மிருகங்களுக்கு அதிக வயது'

அவற்றை விட, மரங்களுக்கு அதிக வயது.

அவற்றை விட மலைகளுக்கு அதிக வயது.

காரணம் அவை பேசாமலும் அதிர்ச்சியடையாமலும் இருப்பதே.

நீண்டநாள் பேசாமல் இருப்பது என்பது, ஒருவகை நிர்விகல்பசமாதி. அதை மேற்கொண்டவன், ஞானத்தைத் தேடினால் அது கிடைக்கும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org